AR
725

# செவ்வி

## பேரா. தொ. பரமசிவன்

நேர்காணல்கள்



சந்தியா
பதிப்பகம்

ஏறக்குறைய கிறிஸ்து பிறப்பதற்கு எண்ணூறு வருடங்கள் முன்பே ஆதிச்சநல்லூரில் நாகரிகம் மிகுந்த மக்கள் வாழ்ந்திருக் கிறார்கள். இதனை முதன் முதலில் கண்டுபிடித்தவர் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த டாக்டர். ஜாகர் என்பவர்தான். *1876* ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் ஆராய்ச்சிக்காக வந்த அவர் கண்டு பிடித்தது தான் இந்தத் தொல்தமிழர்களது நாகரிகம். அந்த ஜாகர், தான் கண்டுபிடித்தவற்றில் பலவற்றை ஆதாரத்துக்காக ஜெர்மனுக்கே எடுத்துச் சென்றுவிட்டார். அப்பொருட்கள் இன்னமும் ஜெர்மனியில் உள்ள பெர்லின் அருங்காட்சியகத்தில் இருக்கிறது.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இங்கு வாழ்ந்த தமிழர்கள் இரும்பைப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்றால்... அதை உருக்குவதற்கான உலைகளை எங்கு வைத்திருந்தார்கள்... அதை செதுக்குவதற்கும் சீராக்குவதற்கும் எத்தகைய தொழில் நுட்பங்களைக் கையாண்டார்கள்... அப்படியாயின் இவர்களது நாகரிகம்தான் மற்ற அனைத்து நாகரிகங்களுக்கும் முற்பட்ட நாகரிகமாக இருந்திருக்க வேண்டும்.

பேரா. தொ. பரமசிவன்

*(தமிழக அரசியல் 08-07-2010 இதழில் பாமரன் எழுதிய கட்டுரையிலிருந்து.....)*

நன்றி...

◆

ஆ. தனஞ்செயன் | லெனா. குமார் | பிரிட்டோ
கீற்று நந்தன் | முத்துக்குட்டி | அப்பணசாமி
மணா | ஷோபா சக்தி | சங்கர ராமசுப்பிரமணியன்
ஆர்.ஆர். சீனிவாசன் | பாமரன்

◆

இதழ்கள்

மாற்றுவெளி | கீற்று இணையதளம் | தீராநதி
காலம் | சன்டே இந்தியன் | தலித் முரசு
தமிழக அரசியல்

◆

# செவ்வி

## பேரா.தொ. பரமசிவன்

### நேர்காணல்கள்

சந்தியா பதிப்பகம்
சென்னை - 83.

செவ்வி

© தொ. பரமசிவன்

தொகுப்பு : ச. நவநீத கிருஷ்ணன்

முதற்பதிப்பு : 2013

பிரதிகள் : 1000 ● அளவு : டெமி ● தாள் : 60 gsm ● பக்கம் : 104

அச்சு அளவு : 11 புள்ளி ● விலை : ரூ. 75/-

அச்சாக்கம் : சென்னை மைக்ரோ பிரிண்ட் பி.லிமிட்,
சென்னை - 29.

**சந்தியா பதிப்பகம்**

புதிய எண் 77, 53வது தெரு, 9வது அவென்யூ,
அசோக் நகர், சென்னை - 600 083.

**தொலைபேசி: 044 : 24896979**

**ISBN : 978-93-81343-44-9**

**SEVVI**

**© Tho. Paramasivan**

Compiled by : **Sa. Navaneetha Krishnan**

Printed at Chennai Micro Print Pvt Ltd.,
Chennai - 29.

Published by
**Sandhya Publications**
New No. 77, 53rd Street, 9th Avenue, Ashok Nagar,
Chennai - 600 083. Tamilnadu.
Ph : 044 - 24896979

**Price Rs. 75/-**

sandhyapathippagam@gmail.com
sandhyapublications@yahoo.com

**www.sandhyapublications.com**

# முன்னுரை

**ந**ண்பர்களே வணக்கம்,

இந்த முன்னுரையை மிகுந்த கூச்சத்துடனே நான் எழுது கிறேன். இந்த நேர்காணல்களின்வழி நான் இயங்குகின்ற கருத்தியல்தளத்தை நான் என்னுடைய சொற்களால் வெளிப் படுத்தி இருக்கிறேன். எனவே இவை ஆய்வுக் கட்டுரைகள் ஆகா.

என்னுடைய கருத்தியல்தளம் பெரும்பாலும் மனிதவாசிப்பு சார்ந்தது. மனிதவாசிப்பு என்பது உரையாடல் மரபு சார்ந்தது. தமிழர்களின் அறிவுத்தொகுதி பெரும்பாலும் உரையாடல் மரபிலேயே வெளிப்படுகிறது. ஒரு மரத்தச்சரிடம் அறுகோணத்தின் சமன்பாடு பற்றிக் கேட்டால் அவருக்கு அதை சமன்பாட்டுவிதியாகச் சொல்லத்தெரியாது. ஆனால் அதை 'நாலுக்கு மூனு நடுவுல பாதி' என்று உரையாடல் மரபிலே போகிற போக்கில் சொல்லிவிடுவார்.

தமிழர்களுடைய மரபுவழி அறிவுத்தொகுதியினை உரை யாடல் மரபிலும் அதன் உள்ளீடாக விளங்கும் பழமொழிகள், சொல் அடைகள், கதைகள், சடங்குகள் இவற்றின் வழியாகவே மீட்டெடுக்க முடியும். அதையே நான் செய்திருக்கிறேன். என்னுடைய கண்டுபிடிப்பு அல்லது பங்களிப்பு என்று சொல்லிக்கொள்வதற்கு வேறெதுவும் இல்லை. என்னை நேர்காணல் செய்த இதழாளர்களுக்கும், அவைகளை வெளியிட்ட இதழ்களுக்கும் என் அன்பு உரித்தாகுக. இந்த

நேர் காணல்களை தேடித்தொகுத்த இரா. சித்தானை, பேராசிரியர் ச. நவநீதகிருஷ்ணன் ஆகியோருக்கு என் நன்றி. இந்நூலை வெளியிடும் சந்தியா பதிப்பகத்தாருக்கும் நான் நன்றியன்.

10.06.2013, திங்கள்கிழமை
பாளையங்கோட்டை

(தொ. பரமசிவன்)

## உள்ளே...


1. கால்டுவெல் என்ற மனிதர் 9

2. திராவிடக் கருத்தியல் - ஒரு நிரூபிக்கப்பட்ட உண்மை 17

3. சாதிகள் உண்மையுமல்ல... பொய்யுமல்ல... 36

4. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது மக்கள் விரோதச் சித்தாந்தம் 50

5. மறுபடியும் மறுபடியும் பெரியாரிடம் 70

6. திராவிடம் என்பது அரசியலைத் தாண்டிய பண்பாட்டு அடையாளம் 83

7. பார்ப்பனர்களுக்கு அதிகாரமே உணவு 98

நேர் காணல்களை தேடித்தொகுத்த இரா. சித்தானை, பேராசிரியர் ச. நவநீதகிருஷ்ணன் ஆகியோருக்கு என் நன்றி. இந்நூலை வெளியிடும் சந்தியா பதிப்பகத்தாருக்கும் நான் நன்றியன்.

10.06.2013, திங்கள்கிழமை
பாளையங்கோட்டை.

(தொ. பரமசிவன்)

# 1

## கால்டுவெல் என்ற மனிதர்

ஏறக்குறைய ஐம்பத்துமூன்று ஆண்டுகள் திருநெல்வேலி வட்டாரத்தில் வாழ்ந்து ஒப்பீட்டு மொழியியல், சமூகவியல் மற்றும் சமயம் எனப் பல்வேறு துறைகளில் சிறந்த பங்களிப்பைச் செய்தவர் கால்டுவெல். ஆய்வாளர் என்ற முறையில் கால்டுவெல் என்ற மனிதர் உங்களை எந்த அளவிற்குக் கவர்ந்துள்ளார்?

தொ. பரமசிவன் : பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கால்டுவெல் தமிழ்நாட்டுக்கு தமிழ்நாட்டின் தென்கோடிப் பகுதியான இடையன்குடிக்கு வருகிறார். தமிழ்நாட்டிலேயே திருச்செந்தூருக்கும் கன்னியாகுமரிக்கும் இடையிலுள்ள கடற்கரைப்பகுதி மிகமிக வெப்ப மான பகுதி. இந்த இடத்தை அவர் தேர்வு செய்ததற்கான காரணம் நமக்குப் புரியவில்லை. ஆனால் இன்றுகூட அந்த ஊரிலே நாம் ஒருநாள் இருக்கமுடியாது. அந்த அளவுக்கு வெயிலும் செம்மணல் தேரியினுடைய சூடும் தாங்கமுடியாது. அந்த ஊரிலே இந்த ஐரோப்பியர் 53 ஆண்டுக்காலம் இருந்திருக்கிறார் என்பது என்னைப் பொறுத்தமட்டில் வியப்புக்குரிய ஒன்றாகவே உள்ளது. நான் அந்த ஊருக்குக் கால்டுவெல் நினைவுக் கருத்தரங்கிற்காக மூன்றுமுறை சென்றுள்ளேன். ஆண்டுதோறும் ஜூலையில் நடத்துகிறார்கள்.

கால்டுவெல் என்ற மிஷனரியைவிட, கால்டுவெல் என்ற மொழியியலறிஞரைவிட, கால்டுவெல் என்கிற அர்ப்பணிப்பு உணர்வுடைய சமூகச் சீர்திருத்தவாதியைத்தான் (Dedicated Social Reformist) எனக்கு ரொம்பப் பிடிக்கும். கால்டுவெல் வருகிறபோது, ஏன் இப்ப ஒரு இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கூட அந்தப் பக்கம் பேருந்து

வசதி கிடையாது. தேரிமணல், சாலைகளைக் காற்றிலே மூடிவிடும் என்பதனாலே பனைஓலைகளைப் போட்டு அதன்மீது ஜீப் ஓட்டுவார்கள். இதுதான் போக்குவரத்து வசதி. அப்படியென்றால் பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே அந்த நிலம் எவ்வாறு இருந்திருக்கும். கால்டுவெல் குதிரைவண்டியிலும் குதிரையிலும்தான் பயணம் செய்திருக்கிறார். இடையன்குடி என்ற பெயரோடு வழங்கிய சின்னக் கிராமத்தினுடைய செம்மணல் தேரிக்காட்டின் தென்பகுதியை விலைக்கு வாங்கி அதிலே ஒரு தேவாலயத்தைக் கட்டி, பக்கத்திலே தனக்கு ஒரு வீட்டைக்கட்டி தேவாலயத்தினுடைய வலதுபுறத்திலே, தான் மதம் மாற்றிய அந்த எளிய நாடார் கிறிஸ்தவ மக்களுக்காகத் தெருக்களை, வீடுகளை அமைக்கிறார். அவ்வளவு நேர்த்தியாக, ஒழுங்காக இன்றளவும் அவை இருக்கின்றன.

கால்டுவெல் காலத்திய இடையன்குடி எப்படி இருந்திருக்கும் என்பதற்கு வேறு எடுத்துக்காட்டே தேவையில்லை. இன்றைக்கும் அந்த தேவாலயத்திற்கு நேர் எதிரே இருபது மீட்டர் தாண்டிச் சென்றால் அந்தப் பழைய இடையன்குடி கிராமம் உள்ளது. அதே பழைய ஓலைக்குடிசைகள். பனைமடலால் ஆன வேலிகள். அழுக்கு, வறுமை, வெள்ளாடு இவைகளோடு அப்படியே இருக்கிறது. கால்டுவெல் வருகிறபோதும் இப்படித்தான் இருந்திருக்க வேண்டும். கால்டுவெல் நாடார் மக்களிடம் வருகிறபோது பதனியை இறக்கி கருப்புக்கட்டி உற்பத்தி செய்து கொண்டிருந்தார்கள். அன்றைக்குத் தென்மாவட்டங்களிலேயே இடையன்குடிக்கு ஒரு ஆறு கிலோ மீட்டருக்கு முன்னாலேயே உள்ள திசையன்விளை பெரிய கருப்பட்டிச் சந்தை. அதை நம்பித்தான் அந்த மக்களுடைய வாழ்வாதாரம் இருந்தது.

இன்றைக்கு அந்த மக்கள் கல்வி, சமூக விடுதலை, பாதுகாப்பான வீடு இவற்றோடு நான்காவது தலைமுறையைக் கழித்துக்கொண்டு கால்டுவெல்லை தங்களுடைய குலதெய்வமாக, சாஸ்தா என்று நாம் சொல்வதைப்போலக் கருதுகிறார்கள். ஏனென்றால் அவர் தந்த வாழ்க்கைதான் இதெல்லாம். ஒரு சுவையான செய்தி. திசையன்விளையைச் சேர்ந்த ஒரு பெரிய தொழிலதிபர் பாளையங்கோட்டையிலே இருக்கிறார், Bellpins முதலாளி செல்லத்துரை நாடார். அவர் என்னிடம் ஒரு கேள்வியைக் கேட்டார். சீர்திருத்தத் திருச்சபைக்காரர்கள் எல்லாம் ஒரு புதிய இடத்தை வாங்கி அதில் ஊரை நிர்மாணிப்பார்கள். அப்படி நிர்மாணிக்கிறபோது அதற்குச்



சமாதானபுரம், சுவிசேஷபுரம், கடாட்ஷபுரம், மெய்ஞ்ஞானபுரம் என்ற மதம் சார்ந்த ஒரு பெயரை இடுவார்கள். வேதாகமம் சார்ந்த பெயர்கள் அவை. ஆனால் கால்டுவெல் இடையன்குடி பெயரை ஏன் மாற்றவில்லை என்று கேட்டார். எனக்குத் தெரியவில்லை என்று சொன்னேன் நான். அவர் சொன்னார். நான் கால்டுவெல் பிறந்த ஊருக்குப் போனேன். அவர் பிறந்த ஊரின் பெயர் Shepherdyard. அதாவது தமிழிலே சொல்வதானால் இடையன்குடி. இது தன்னுடைய ஊர்ப்பெயரை நினைவுபடுத்துகிற ஊர் என்பதாலே இந்த ஊர்ப் பெயரை மட்டும் கால்டுவெல் மாற்றவில்லை என்றார். எனக்கு ரொம்ப வியப்பாகவும் இருந்தது; நெகிழ்ச்சியாகவும் இருந்தது. இவர் தன்னுடைய ஊர்ப்பெயரைக் கொண்ட ஒரு ஊரை இங்குத் தேர்ந்துகொண்டதாலோ என்னவோ அங்கு 53 ஆண்டுகள், இடையிலே ஒரேயொருமுறை மட்டும் இங்கிலாந்து சென்று வந்திருக்கிறார். தன்னுடைய மகளைக்கூட பக்கத்தில் நாகர்கோயிலிலே இருந்த இன்னொரு மிஷனரிக்குத்தான் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார்.

இப்பொழுது அங்குக் கால்டுவெல் தனக்காகக் கட்டிய வீடு இருக்கிறது. வீட்டிலே வேறெந்த நினைவுச்சின்னமும் இல்லை. கால்டுவெல் பயன்படுத்திய அந்த கோர்ட்ஸ்டாண்டு மட்டும்தான் உள்ளது. தேவாலயத்திலிருந்து அந்த வீட்டிற்கு நடந்து செல்ல நூறு அடிதான். இந்த நூறு அடியையும் அந்த மணலிலே வெயிலிலே நம்மால் நடந்து செல்ல இயலாது. அதற்குப் பின்னாலே கால்டுவெல் மேனிலைப்பள்ளி உள்ளது. கால்டுவெல் மனைவி அந்த ஊர்ப்பெண்களுக்காக உருவாக்கிய ஒரு தையல்பள்ளியின் இடிந்த கட்டடம் இருக்கிறது. இவ்வளவுதான் அங்கு இருக்கிற மிச்சம்.

இந்த தேவாலயம் அவ்வளவு நேர்த்தியாக எண்ணி எண்ணி கட்டப்பட்டது. அந்தக் கோபுரமணியினுடைய ஓசை தனியாக இருக்கும். அது கால்டுவெல்லின் தம்பி ஐரோப்பாவிலிருந்து வாங்கி அனுப்பியது என்று சொல்கிறார்கள். இந்தக் கோபுரமணிக்குச் செல்லும் படிக்கட்டுகள் கூட கலைநேர்த்தியுடன் செய்யப்பட்டிருக்கின்றன. கால்டுவெல்லுடைய விருப்பப்படி, கொடைக்கானலிலே கால்டுவெல் இறந்தாலும் மூன்று நாட்களாக அந்த உடலைப் பாதுகாத்து மலையிலிருந்து டோலி கட்டிக் கீழே கொண்டுவந்து (அன்றைக்கு அதானே சாத்தியம்) அங்கிருந்து ரயிலிலே மதுரைக்குக் கொண்டுவந்து, அப்படியே திருநெல்வேலி கொண்டுவந்து, அங்கிருந்து

பீட்டன் அல்லது சாரட் என்று சொல்லக்கூடிய குதிரை வண்டியிலே பாளையங்கோட்டை தேவாலயத்தில் வைத்துப் பூசைசெய்து, இடையன்குடிக்குக் கொண்டுசென்று அந்தத் தேவாலயத்திலே அடக்கம் செய்திருக்கிறார்கள். அவர் மனைவியும் அங்கேதான் அடக்கம் செய்யப்பட்டார். ரொம்ப பெரிய வியப்பு இதுதான்.

சமூகவிடுதலை, பொருளாதார விடுதலை, சமூக மரியாதை அவர் பெற்றுத் தந்தது. இவைகளை அவர் மதம் மாற்றிய எந்தக் குடும்பமும் இதுவரை இழக்கவில்லை. மாறாகப் பெருக்கிக் கொண்டே இருந்திருக்கிறது. இன்னொரு செய்தி எனக்கே கொஞ்சம் வியப்புதான். நாடார்கள் என்று அன்றைக்குச் சொல்லப்பட்ட பதநீரும், கள்ளும் இறக்கும் தொழில்செய்யும் சாதிக்காரர்களை அவர் மதமாற்றம் செய்தார். அடுத்த சாதிக்காரர்களை மதம்மாற்றம் செய்யும் முயற்சியிலே கால்டுவெல் ஈடுபட்டதாகக் கூடத்தெரியவில்லை. சவேரியாரைப் போல ஒரு சாதியை மட்டும் மதம்மாற்றம் செய்வது எந்தச் சாதிப் பிரச்சினைக்கும் வழிவகுக்காது. இன்னொரு சாதியைச் சேர்த்தால் சாதிமோதலுக்கு வழிவகுக்கும் என்று அவர் நினைத்திருக்கலாம். அதனாலேதான் இடையன்குடியிலே தேவாலயத்திற்கு அறுபது மீட்டர் தூரத்திலே வாழக்கூடிய இடையர்கள் இன்றும் கிறிஸ்தவர்களாக ஆகாமல் அப்படியே இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் கால்டுவெல்லைப் பற்றி நிறைய கதைகள் அந்த ஊரிலே சொல்லப்படுகிறது. அதிலே முக்கியமான கதை. கால்டுவெல் ரொம்ப கோபக்காரராம். தெருக்களில் வீட்டினுடைய ஒரு அறையை அரையடி முன்னால் தள்ளி கட்டினால் அங்கிருந்து கூப்பிட்டுச் சாதிப்பெயரைச் சொல்லித் திட்டுவாராம். அதைப் பெருமையோடும் மகிழ்ச்சியோடும் இன்றைக்கும் சொல்கிறார்கள். ஏனென்றால் அவரை தங்களுடைய முப்பாட்டன் அல்லது குலதெய்வம் என்று அவர்கள் கருதுவதாலே. அந்த ஊரின் முகமே தனி அழகாக இருக்கிறது; சின்ன ஊராக இருந்தாலும்.

கால்டுவெல் காலத்தில் பயணம் மட்டுமில்லை, மின்சாரம் இல்லை, பேருந்து இல்லை, சாலை வசதி இல்லை. தனக்கு வேண்டிய கோதுமையை வாங்க வேண்டியிருந்தால்கூட கால்டுவெல் தூத்துக்குடிக்கோ, பாளையங்கோட்டைக்கோதான் வந்திருக்க வேண்டும். இப்படிச் சிரமம்மிகுந்த காலத்திலே 53 ஆண்டுகள் ஒரேயொருமுறை இங்கிலாந்து சென்று வந்ததைத் தவிர அந்த ஊரிலே அந்த மனிதர் வாழ்ந்தார் என்பது, மகத்தான தியாகம். ஒரு குளிர் நாட்டில் இருந்துவந்து இந்தத் தகிக்கிற வெப்பத்திலே 53 ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். குடும்பத்தோடு வாழ்ந்திருக்கிறார். தன்னுடைய மகளையும் இங்கேயே திருமணம் செய்து கொடுத்திருக்கிறார். அதனால்தான் சொல்கிறேன். ஒரு மொழியியல் அறிஞர் என்பதை விட அவர் தேர்ந்தெடுத்துக்கொண்ட மக்கள் அன்றைக்குச் சமூக மரியாதையே இல்லாத ஒரு பெரிய மக்கள் கூட்டம்.



ஆனால், அவர் கண்டுகொண்ட விஷயம், இந்த மக்கள் மிகுந்த நன்றியறிவுடையவர்கள் என்பதைக் கண்டுகொண்டார். இதனால் அவர்களுக்கு வேண்டிய எல்லாத் தேவைகளையும் நிறைவு செய்திருக்கிறார். மருத்துவவசதி எப்படிச் செய்தார் என்பது பற்றிய எந்தத் தகவலும் எனக்குக் கிடைக்கவில்லை. அதுவரை அவர்கள் பனை ஓலைக் குடிசைகளில்தான் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இன்றைக்கு மூன்றாவது, நாலாவது தலைமுறைப் பட்டதாரிகளை இடையன் குடியிலே பார்க்கலாம். இதுதான் நான் அந்த ஊருக்குச் சென்றுவந்த அளவிலே கால்டுவெல்லைப் பற்றித் தெரிந்த செய்திகள்.

'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற கால்டுவெல் படைப்பைதான் பெரும்பாலும் எல்லாரும் தெரிஞ்சிருக்கிறோம். ஆனால் அவருடைய மற்ற படைப்புகள் - அதனுடைய முக்கியத்துவம் - இதப்பற்றிச் சொல்லுங்க.

குறிப்பா Sanars of Tamilnaduன்னு அவர் எழுதின புஸ்தகம் இருக்கு. முதல்ல Ethinographic Studyன்னு நாம இன்றைக்குச் சொல்றோமே... முதல்ல விஞ்ஞானப்பூர்வமாகச் செய்யப்பட்ட Ethinographic Study அதுதான். அதுலதான் அந்த Lore எல்லாம் அவர் கணக்குல எடுத்துப் பேசுவாரு. அதுல ஒரு கதை. நாடார்கள் ஈழத்துல இருந்து பனங் கொட்டையோட வந்தாங்க அப்படின்றது. நான் அதை ஒரு வரலாற்று உண்மையாகக் கருதுறேன். ஏனென்றால் ஈழம் என்ற சொல்லுக்குத் தமிழில் பனை என்ற பொருள் உண்டு. பனைமீது விதிக்கப்பட்ட வரிக்கு 'ஈழம்பூச்சி' என்றே பெயர். ஈழவர் என்று கேரளாவிலே சொல்லப்படுகின்ற சாதியார் ஈழத்திலிருந்து கேரளாவிற்கு வந்தவர்கள். அதுபோல நெல்லை மாவட்டத்தினுடைய எல்லையோரத்திலே வாழ்கிற இல்லத்துப் பிள்ளைமார் என்று சொல்லப்படக்கூடிய சாதிகள் ஈழப்பிள்ளைமார் என்றுதான் சொல்வார்கள். அவர்களும் அங்கிருந்துதான் வந்திருக்கணும். Sanars of Tamilnadu ஒரு அருமையான Ethinographic Study. இன்னுஞ்சொல்லப்போனா கனகசபைப் பிள்ளை,

சீனிவாச ஐயங்கார் இவர்களுக்கெல்லாம் அது முன்னோடி நூலாக இருந்தது என்று நான் கருதுகிறேன்.

Ethinographic aspect-லே அவரோட படைப்ப நாம வச்சு பார்க்கற ஒரு தேவையும் அதனுடைய முக்கியத்துவமும் உங்களுடைய வார்த்தைகளில் இருந்து புரியுது. அதுபோலவே வரலாற்றுரீதியாக இந்தியர்களை அணுகும்போது இந்தியர்களுக்கு வரலாற்றுப்பார்வை இல்லை என்பதாகக் கால்டுவெல் கருதுகிறார். அதுபோல ஒரு மன்னனைப் பற்றியோ, ஒரு நிகழ்ச்சியைப் பற்றியோ உள்ளதை உள்ளவாறே எழுதுவதில் இந்தியர்களுக்கு மிகப்பெரிய சுணக்கம் இருக்கிறது. கவிஞர்களின் கட்டற்ற கற்பனைக்கு இடங்கொடுக்கும்போதுதான் எந்த ஒரு படைப்பும் ஆர்வம் ஊட்டுவதாக அமைகிறதென்று அவர்கள் கருதுவதுபோல் தோன்றுகிறது. புராதனமான இந்திய வரலாறு என்று நாம் சொல்வோமானால், கல்வெட்டுகளிலும் நாணயங்களிலும் காணக் கிடைக்கும் பழமரபுக்கதைகள், புராணங்கள் இப்படி எந்தப் பெயரில் இருந்தாலும் அவை தூக்கியெறியப்பட வேண்டும். அதனால் சிறப்பு எதுவும் இல்லை. மாறாகச் சாதகமானதுதான் என்று கால்டுவெல் குறிப்பிடுகிறார். இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.

History of Tinnevelly - யிலே ஒரு இடத்துல வந்து அவர் எழுதுறாரு, இந்த மக்களுக்கு வரலாற்று உணர்வு கிடையாதுன்னு. Historic Sense கிடையாதுன்னு. அது ஒரு அபத்தமான ஸ்டேட்மெண்ட். ஏன்னா கால்டுவெல் காலத்துல கல்வெட்டியல் துறை தொடங்கப் படல. இந்தியாவுல இருக்கிற கல்வெட்டுல 75 விழுக்காடு கல் வெட்டுகள் தமிழ்நாட்டுல. அதுல 75 விழுக்காடு தமிழ்க் கல்வெட்டுகள். அதுல கிட்டத்தட்ட ஒரு 30 ஆயிரம் கல்வெட்டுகள் அச்சிடப் பட்டிருக்கு. இதைத் தெரிந்திருந்தால் கால்டுவெல் அப்படிச் சொல்லி யிருக்கமாட்டார். அவர் காலத்துல அதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. சுந்தரம்பிள்ளை போன்றவர்களுக்குக் கிடைத்த கல்வெட்டு வாசிக்கிற வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. அவர் வாழ்ந்த நிலப்பகுதியும் அப்படிப்பட்ட பகுதி. ரெண்டாவது அந்த நிலப்பகுதி பார்ப்பனியத் தாக்கம் இருந்த பகுதி அல்ல. இந்த நிலப் பகுதியில் வாழ்பவர்கள் பார்ப்பனிய மேலாண்மைக்கு அடிமைப் பட்டவர்கள் இல்லை. அவர்களெல்லாம் வெள்ளாள மேலாண்மைக்கு அடிமைப்பட்டவர்களாகத்தான் இருந்தார்கள்.

History of Tinnevelly புத்தகத்துல ஒரு இடத்துல வரலாறு பற்றி அவர் சொன்ன கருத்தை நீங்க சொன்னீங்க. அவர் சொல்றாரு இந்திய வரலாறு அப்படின்னு ஒண்ணு சொல்லப்போனா அந்த வரலாறுங்கிற அர்த்தத்தைப் பிரதிபலிக்கக்கூடிய ஒரு கருத்துவந்து நம்முடைய நாணயங்கள்லேயும் கல்வெட்டுக்கள்லேயும் தான் இருக்கு.



அதற்குப்பிறகு வேறு எதுலயுமே இல்ல அப்படின்னு ஒரு கருத்து சொல்றாரு. அதேபோல மகாவம்சத்துலதான் அந்த வரலாறோட தன்மை இருக்கு. இலங்கைல இருந்து எழுதப்பட்ட மகாவம்சம் அது.

கால்டுவெல் காலத்துல எழுத்துமரபுக்கான மரியாதை இருந்தது. இன்றைக்கு இல்ல. இன்றைக்கு நாம வாய்மொழி மரபுக்கான மரியாதை தருகிறோம். கால்டுவெல் காலத்துல அப்படி ஒரு அறிவுலகம் தோன்றல. அவர் அதையெல்லாம் கதை என்ற நினைப்புலதான் பதிவு செய்ராறே தவிர அது lore என்ற நினைப்புல பதிவு செய்யல.

அதுபோல இன்னொரு கருத்து அவர் வந்து வரலாறு அப்படின்னா வாய்மொழி மரபுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாரா, அப்படிங்கிற சந்தேகம் எழுகிறது. எழுத்துமொழிக்குத்தான் அவர் முக்கியத்துவம் தருகிறார்.

இல்ல, வழக்கு மொழியிலிருந்துதான் வேர்ச்சொற்களையெல்லாம் திராவிடமொழிகளோட ஒப்பீட்டு நிலைக்கு முக்கியமாகப் பயன் படுத்தறார்.

ஆனா வரலாறு அப்படின்னு பார்க்கும்போது அவர்வந்து எழுத்துமொழியில அமைந்த வரலாற்றைத்தான் பார்க்கிறார்.

ஆமா, அவர் காலத்து அறிவுலகம் அப்படித்தான் இருந்தது.

இப்ப அதேமாதிரி எதார்த்தத்தை எதார்த்தமாகவே பதிவுபண்றது அப்படிங்கிறது இந்தியர்களுக்குக் கைவராத கலைன்னு... அப்படிங்கிற மாதிரி சொல்றார்.

ஏன் அப்படின்னா, ஏதாவது எழுதப்பட்டதுன்னா அதுவந்து புலவர்கள் அல்லது கவிஞர்கள் வந்து ரொம்ப உணர்ச்சி மேலீட்டோட... கற்பனைநயம் கலந்து எழுதுவதைத்தான் அவர் களுடைய எழுத்துக்கள்ல பார்க்க முடியுது. வரலாறு இல்ல. ஒரு மன்னனைப் பற்றி நாம குறிப்பிடும்போதுகூட, மன்னனைப் பற்றி எழுதும்போதுகூட மிகையாவே எழுதுறாங்க.

கால்டுவெல்லோட குற்றச்சாட்டு உண்மைதான். காரணம் அவர் காலத்துத் தமிழ் உரைநடை வளர்ச்சி பெறல. எல்லா மொழியும் கவிதையாகவே இருந்தது. கணக்கு உட்பட. எனவே இந்த மிகை வேடப்புனைதல் என்பது கவிதைக்குரிய அடிப்படைப் பண்பு. அறிவுக்கான ஊடகம் என்பது கவிதையாக இருந்தபோது இந்த மிகைவேடப்புனைதல் என்பது தவிர்க்கமுடியாத அம்சம்.

அந்த மிகையை வந்து அவர் ஏத்துக்கவே இல்ல. ஒரு இடத்துல அவர் என்ன சொல்றார். Poetical aspect-லே எழுதப்பட்ட பனுவல்கள் popular legends இதெல்லாம் டிஸ்கார்டு பண்ணனும். அதனால பெரிய இழப்பு எதுவுமே இல்ல அப்படிங்கிறார்.

அவர் காலத்து அறிவுலகச் சூழல் அப்படி. பின்னால வரவர நமக்கு வந்து மாறிடுச்சு.

♦

நேர்காணல். செய்தவர்
முனைவர். ஆ. தனஞ்செயன்
மாற்றுவெளி, நவம்பர் 2008

# 2

# திராவிடக் கருத்தியல் - ஒரு நிரூபிக்கப்பட்ட உண்மை

அதிகாரத்தின் கொடிய நிழலால் மறைக்கப்பட்டிருந்த தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகள் மீது ஆய்வுக் கட்டுரைகளால் வெளிச்சத்தைப் பாய்ச்சியவர்களில் தொ.பரமசிவன் முக்கிய மானவர். தமிழர்களின் தொன்மங்கள், வாழ்வியல் கூறுகள், சமூக மரபுகள், நாட்டார் தெய்வங்கள் குறித்தான இவரது கருத்துக்கள் ஆய்வுலகில் பெரும் கவனத்தை ஈர்த்தவை. தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி, ஓய்வு பெற்றவர். சுயமரியாதை உணர்வு மிக்கவர். யாருடைய தயவையோ, எந்த விருதையோ யோசியாது, தனது கருத்துக்களை, விமர்சனங்களைத் துணிவுடன் எடுத்து வைப்பவர். திருநெல்வேலியில் உள்ள பேராசிரியரது வீட்டில் ஒரு மதிய வேளையில் தோழர்கள் லெனா.குமார், பிரிட்டோ, கீற்று நந்தன் மற்றும் முத்துக்குட்டி ஆகியோர் கீற்று இணையதளத்திற்காக எடுத்த நேர்காணல் இது. எதற்கும் விடையளிக்கவல்ல ஒரு ஆசிரியரிடம் மாணவர்கள் சிலர், தங்களது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொண்டதாகவே உரையாடலின் பெரும்பகுதி அமைந்தது. உரையாடலிலிருந்து...

**உங்கள் குடும்பப் பின்னணி பற்றிச் சொல்லுங்கள்?**

நான் இந்த ஊரில் (நெல்லையில்) பிறந்து வளர்ந்தவன். பத்து தலைமுறையாக இந்த ஊரைச் சேர்ந்தவன். ரொம்ப நடுத்தரமான குடும்பத்திலே பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே பிறந்தவன். இந்த ஊரினுடைய கல்விப் பின்புலம்தான் என்னை வெவ்வேறு வகையாகச் சிந்திக்கத் தூண்டியது. என் வீட்டுக்குப் பக்கத்திலேயே மாவட்ட மைய நூலகம், மேல்நிலைப் பள்ளி, கல்லூரி அமைந்திருந்தன.

இந்தப் பின்னணியில் இருந்து வந்தது தான் என்னுடைய பலம் என்று நான் கருதுகிறேன். மற்றபடி எனக்கு வாசிப்புக்குரிய, உலகத்துக்குரிய குடும்பப் பின்னணி என்று எதுவும் கிடையாது. நான் முதல் தலைமுறைப் பட்டதாரி.

ஆனால் வாசிப்புத் தொடங்குகிறபோதே, அன்றைக்கு இருந்த பண்ணையார்த்தனமான காங்கிரஸ்காரர்களைப் பார்த்ததால் ஒரு காங்கிரஸ் எதிர்ப்புணர்வோடுதான் நாங்கள் வாசிக்க ஆரம்பித்தோம். நான் பத்து வயதிலே முரசொலி வாசிக்கத் தொடங்கிவிட்டேன். நான் மட்டும் அல்ல, சராசரி வாசிப்புத் தன்மை அன்றைக்குத் தமிழ் நாட்டிலே நன்றாக இருந்தது. 1962ஆம் ஆண்டுத் தேர்தலில் அண்ணா தோற்றுப் போனதுக்கு நாங்கள் நான்கு ஐந்து நண்பர்கள், (எட்டாம் வகுப்பு படிக்கும் நண்பர்கள்) பள்ளி மைதானத்திலே நின்று, ‘அண்ணா தோற்றுப் போய்விட்டாரே’ என்று அழுதோம். எட்டாம் வகுப்புப் படிக்கும்போதே அந்த அளவுக்கு வாசிப்பு, அரசியல் ஈடுபாடு இருந்தது. காரைக்குடியில் முதுகலைப் படித்தேன். அங்கு அன்று நல்ல ஆசிரியர் குழாம் இருந்தது.

பின்னர் மதுரைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்குப் போனேன். முதலில் புதுமைப்பித்தன் பற்றி ஆய்வு செய்யத்தான் போனேன். என்னுடைய ஆய்வு நெறியாளர் மு. சண்முகம் பிள்ளை, ‘கோயிலைப் பற்றி ஆய்வு செய்’ என்று சொன்னார். அப்போது அழகர்கோயிலை எடுத்துக் கொண்டேன். அந்த ஆய்வு என்னைப் பல இடங்களுக்கு இழுத்துச் சென்றது. இன்றைக்கும் அந்த ஆய்வும் முறையியலும் மதிக்கக் கூடியவையாக உள்ளன.

குடும்பத்தை ஊரிலே விட்டுவிட்டு, கோயிலைப் பற்றி ஓர் ஆண்டுக்காலம் நான் களஆய்வு செய்தேன். தெருவிலே சந்திக்கிற எல்லா மனிதர்களும் வாசிப்பதற்குரிய ஒரு புத்தகம் என்ற ஞானம் அப்போதுதான் வந்தது. கிராமங்களிலே இருக்கும் மக்களின் உலகம், புத்தகத்திற்கு வெளியே இருக்கிற உலகம். அதைப் புத்தகத்தால் அளக்கும்போது புதிய புதிய பொருள்கள் கிடைத்தன.

தமிழ்ச் சமூகத்தில் சாதி என்பது ஆரம்பத்திலிருந்து இப்போதிருக்கும் நிலையில்தான் இருக்கிறதா?

ஆதிச் சமூகத்தில் ஒரு இனக்குழு இன்னொரு இனக்குழுவைப் பார்த்துப் பயப்படும். அதற்குக் காரணம் மந்திர நம்பிக்கை.

இந்தக் குழுவைச் சேர்ந்தவன் நம்மை அழித்து விடுவான் என்கிற அச்சத்தின் காரணமாக வேறுபாடுகள் இருந்தன. எனவே வெளியில்



திருமணம் செய்வதில்லை. குழுக்களுக்குள்ளே திருமணம் செய்யத் தொடங்கினார்கள். சாதியினுடைய வரையறையையும் அதன் எல்லையையுமே ஆங்கிலத்தில் Endogamy என்று சொல்வார்கள். எது வரைக்கும் நீங்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறீர்களோ அதுவரைக்கும் அது ஒரு சாதி. ஒரே பட்டப் பெயரைத் தரித்திருந்தாலும்கூட ஒரே சாதிக்குள்ளே பல்வேறு வகையான பிரிவுகள் இருக்கின்றன. அந்தந்தப் பிரிவுகள் எல்லாம் அதற்குள்ளே மட்டும் திருமண உறவுகளை வைத்துக் கொள்ளும்.

சாதிகள் எப்படி உருவாகின என்பது குறித்துச் சரியான ஆய்வு தமிழ்நாட்டில் இல்லை.

புராதனப் பொதுஉடைமைச் சமூகத்தின் எச்சப்பாடுகள் எல்லாம் இன்னும் சாதிக்குழுவில் இருக்கின்றன. சாதிக்குழுவிலே கோவிலை மையமிட்டோ அல்லது பொதுநிகழ்ச்சிகளை மையமிட்டோ வரி வசூல் செய்கிறார்கள். இந்த வரி வசூல் என்பது ஏழை பணக்காரன் அனைவருக்கும் சமமாகும். ஐம்பது ரூபாய் வரி என்றால் அதற்கு நூறு ரூபாய் கொடுத்தால் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மிஞ்சிய ஐம்பது ரூபாயை ‘நன்கொடை என்று ஏற்றுக்கொண்டு வரவு வைத்துக் கொள்வோம், வரி ஐம்பது ரூபாய் என்றுதான் பற்றுச்சீட்டு தருவோம்’ என்பார்கள்.

புராதனப் பொதுவுடைமைச் சமுதாயத்தில் இருந்த சமத்துவம் (All are equal) சாதிக்குள்தான் நிலைநாட்டப்படுகிறது. கணவாழ்வின் எச்சங்கள் சாதியில் இருக்கின்றன. சாதி என்பது ரொம்ப இளகியிருந்தது. அதிலே வருணாசிரமம் குறுக்கு வெட்டாய்ப் பாய்ந்தபோது மேல் கீழ் என்று நிலை வருகிறது. தமிழக அரசுகள் வீழ்ந்து, விஜய நகர ஆட்சிக் காலத்தில், மேல் கீழ் நிலை மேலும் வலுப்பெற்றது. அப்பொழுதுதான் சாதிப் புராணங்கள் வருகின்றன. எல்லாச் சாதிகளும், ‘நாங்கள் இந்தத் தேவர்களிடம் இருந்து பிறந்தோம், ராஜாவின் குடும்பத்துடன் உறவு கொண்டோம்’ என்று சொல்லி வந்தார்கள். சாதிகள் இடம் பெயர்வது (Caste Migration), சாதிப் புராணங்களின் பெருக்கத்திற்கு ஒரு முக்கிய காரணம்.

திருநெல்வேலியில் இருக்கிற ஒரு குறிப்பிட்ட சாதியில் 200 குடும்பங்கள் மதுரைப் பக்கம் போவதாக இருந்தால் அங்கே கேட்பார்கள். ‘உங்களுடைய சாதியின் சமூகத் தகுதி என்ன?’. [சடங்கியல் தகுதியே (Ritual Status) சாதியின் இடத்தைத் தீர்மானித்தது.] சாதிநிலையை வரையறுக்கக்கூடிய விஷயமாகப் புரோகிதப் பார்ப்பனியம்தான் இருந்தது. எடுத்துக்காட்டாகச் சொல்வோமானால் மணமுறிவும் மணவிலக்கும் உடைய சாதி கீழ்சாதி. ஆக ஒடுக்கப்பட்டச்

சாதியில் இந்த வழக்கம் இருந்ததாலே, இந்த வழக்கம் இருந்தவன் எல்லாம் கீழ்சாதி. இந்த வழக்கம் இல்லாதவன் மேல்சாதி என்பது மாதிரியான சாதிப் புராணங்கள் நிறைய வந்தன. எல்லாம் சேர்ந்து சாதி ரொம்ப இறுக்கமாக ஆகிவிட்டது.

அது எந்தக் காலகட்டம் என்பதை விளக்க முடியுமா?

ஒரு இராப்பொழுதில் வந்திருக்க முடியாது. கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து விஜயநகர ஆட்சிக் காலத்தில்தான் வைதீகத்திற்கு அதிக மான செல்வாக்கு ஏற்பட்டது. அப்போதுதான் இது நிலைப்படுத்தப் பட்டது. அதற்குப் பிறகு வளர்ந்து கொண்டே வருகிறபோது சாதி தன்னைத்தானே மறுஉற்பத்தி செய்து கொள்கிறது. ஒரே சாதிக் குள்ளேயே ஒரு பிரிவு உயர்ந்தது, ஒரு பிரிவு தாழ்ந்தது என்று உள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு பிரிவில் மாமியார் தாரை வார்த்துக் கொடுப்ப தில்லை. மாமனார்தான் தாரை வார்த்துக் கொடுப்பார். அதனால் அந்தப் பிரிவு உயர்ந்த பிரிவு. இது ஒரு ஆணாதிக்க வெளிப்பாடுதான். இப்படிப்பட்ட பிரிவுகள் காரணமாகச் சாதி வேறுபாடுகள் நிறைய வந்தன.

இராஜஇராஜ சோழனை கடுமையாக விமர்சித்துக் கட்டுரை எழுதியிருக்கிறீர்கள் இராஜஇராஜ சோழன் காலத்திலே பார்ப்பனர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டதா? சாதி ஏற்றத்தாழ்வு இருந்ததா?

இராஜராஜ சோழன் ஒரு பேராண்மை என்பதால், அவன் காலத்திலே தேட ஆரம்பிக்கிறோம். ஆனால், பல்லவர் காலத்திலேயே பார்ப்பனர்கள் வர ஆரம்பித்துவிட்டார்கள். கிராமம் என்பது கிரமம் என்ற சொல்லிலிருந்து வந்தது. வேதத்தில் குறைந்தபட்சப் படிப்பு (அதாவது நம்முடைய 10வது, 12வது என்று வைத்துக் கொள் வார்கள்) வரைக்கும் படித்ததற்குக் கிரமம் என்றும் அவர்களுக்குத் தரப்பட்ட ஊரை, அதாவது வேதம் படித்தவர்கள் வாழும் ஊரை கிராமம் என்றும் அழைத்தார்கள். இது பல்லவர் காலத்திலேயே தொடங்கிவிட்டது.

இராஜராஜ சோழன் காலத்திலே காஷ்மீரிலிருந்து பார்ப்பனர்கள் அதிகமாக வந்தார்கள். அவர்கள் பெரும்பாலானோர் பிருகச்சரணம் என்று சொல்லக் கூடிய பிரிவாக இருந்தார்கள். பிருகச்சரணம் என்றால் பெரிய அளவில் இடம் பெயர்ந்தவர்கள் என்று அர்த்தம். நான்கு வேதம் படித்தவர்களை 'சதுர்வேதி' என்று அழைத்தார்கள். மூன்று வேதம் படித்தவர்கள் 'திரிவேதி' என்று அழைக்கப்பட்டார்கள். சோழர்கள் காலத்திலே வேதக்கல்வியை அரசாங்கம் ஊக்குவித்தது.



வேதமுறைகளைக் கற்றுத் தருவதற்கு அரசாங்கம் ஏராளமான மானியம் கொடுத்தது. ஏனென்றால் கோயில் நிர்வாகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு பார்ப்பனியம் தன்னை ஆழமாக நிலைநிறுத்திக் கொண்டது.

சோழர் காலத்துக் கல்வெட்டுகளில் கம்மாளச் சுடுகாடு, பறைச் சுடுகாடு என்று சுடுகாட்டில் கூட சாதிவேறுபாடு இருந்தது. அதற்குச் சான்று கல்வெட்டுகளில் இருக்கிறது. கோயில் கலாச்சாரம் என்று உருவாகும்போது அதில் சாதி வேறுபாடு வருகிறது. ஏனென்றால் கோயிலுக்குள்ளே குறிப்பிட்ட சாதியினரே அனுமதிக்கப்படு கிறார்கள். சாதியின் பல்வேறு பண்புகளில் ஒன்றாகத் தீண்டாமை உள்ளது. கோயிலுக்குள்ளேயும், வீட்டுக்குள்ளேயும், புறவெளியிலும் மக்களில் சிலருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஏழாம் நூற்றாண்டில் பல்லவச் செப்பேடுகளில் பார்ப்பன வீடுகளில் பின்புறம் உள்ள தென்னை மரம், பனை மரங்களிலே ஈழவர் மரம் ஏறக்கூடாது என்ற தடை இருந்தது. ஈழவர் என்பவர் வட மாவட்டங்களில் கள் இறக்கும் சாதியினர் ஆவர்.

பல்லவர்கள் தமிழர்கள்தான் என்று சிலர் கூறுவதைப் பற்றி விளக்கமுடியுமா?

இவர்கள் ஆந்திராவும், கர்நாடகாவும் சந்திக்கிற இடத்திலிருந்து வருகிற சாதியாவார்கள். அவர்கள் காஞ்சிபுரத்தைப் பிடித்துப் பல்லவ அரசை நிலைநாட்டிக் கொண்டார்கள். சங்க காலத்தில் காஞ்சிபுரம் ஒரு பெரிய ஊர்தான். கச்சிப்பேடு என்று அதற்குப் பெயர். காஞ்சிபுரம் தமிழகத்தின் வடபகுதி என்பதால் சேரர்களும் சோழர்களும் அதைக் கைப்பற்ற முடியவில்லை.

பல்லவர்கள் தமிழர்கள் அல்லர். ஏனென்றால் அவர்களின் தொடக்கக்காலச் செப்புப் பட்டயங்கள் சாருதேவி என்கிற ராணி வெளியிட்ட 'கீரகடகல்லி', 'குணபதேயம்' (இந்த நிலப்பகுதியெல்லாம் ஆந்திரப் பிரதேசத்தில் உள்ளன) பட்டயங்கள் எல்லாம் வடமொழிப் பட்டயங்களாகவே இருந்தன. எனவே இவர்கள் எல்லாம் தமிழ் மன்னர்கள் இல்லை. தமிழ்நாட்டிற்கு வந்து, தங்களைத் தமிழர்களாக ஆக்கிக் கொண்டார்கள்.

களப்பிரர்கள் பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் உள்ளன. 'களப்பிரர்கள் காலம் இருண்ட காலம்' என்று ஒரு பிரிவினரும், 'பார்ப்பனர் ஆதிக்கத்தை ஒழித்த காலம்; எனவே அது ஒரு பொற்காலம்' என்று ஒரு பிரிவினரும் கூறுகிறார்கள்? இதைப்பற்றி...?

களப்பிரர்களும் தமிழ் மன்னர்கள் அல்லர். இவர்களும் தமிழ் நாட்டிற்கு வந்து, தமிழர்களாக மாறிப்போனவர்கள். இவர்கள் தஞ்சையைக் கைப்பற்றிச் சில காலம் வைத்திருந்தார்கள். இப்பொழுதும் தமிழ்நாட்டில் களப்பாளங்குளம் என்ற பெயருடைய ஊர்களை நிறைய பார்க்கலாம். வேளாளர்களில் ஒரு பிரிவினர் தங்களைக் களப்பிரர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். களப்பிரர்கள் காலத்தை இருண்ட காலம் என்று சொன்னது சைவ எழுத்தாளர்கள்தாம். ஏனென்றால் களப்பிரர்கள், சமணமதத்தை ஆதரித்தார்கள். சமணமதம் வேதத்தை நிராகரித்தது. எனவே, களப்பிரர் காலத்தை இருண்டகாலம் என்று சொல்கிறார்கள். களப்பிரர்கள் காலம் இருண்ட காலம் என்பதைப் பற்றி மு. அருணாசலம் பிள்ளையின் நூல் ஒன்று ஆங்கிலத்தில் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக உள்ளது.

மயிலை சீனி. வேங்கடசாமி தொடங்கி வைத்த முயற்சியின் காரணமாக இன்றைக்கு இந்தக் கருத்து மாறிவருகிறது. அச்சுதன் என்கிற ஒரு மன்னனைத் தவிர வேறு எந்தக் களப்பிர மன்னனைப் பற்றியும் செய்திகள் இல்லை. விஜயாலயச் சோழன் களப்பிரர்களிடம் இருந்துதான் தஞ்சையைக் கைப்பற்றினான்.

களப்பிரர்கள் பற்றித் தமிழ்நாட்டில் கல்வெட்டுகள் இல்லை. கர்நாடகத்தில் கொஞ்சம் உள்ளது. அதுதவிர ஒரு சில பாடல்கள் மட்டுமே உள்ளன. தஞ்சைக்கும் திருச்சிக்கும் இடையிலான நிலப் பகுதியைக் கைப்பற்றி இருந்தார்கள். குறிப்பாகச் செந்தலை என்ற தஞ்சைக்கு அருகேயிருக்கும் ஊர் அவர்கள் தலைநகரமாக இருந்தது என்று தெரிந்தது. அதற்கு மேல் தெரியவில்லை. வரலாற்றுச் சான்று களும் கிடைக்கவில்லை.

சைவமதம் தமிழ் மதமே, சைவமதத்தைப் பின்பற்றிய பார்ப்பனர்கள் தமிழர்களே, குலம் என்ற சொல்தான் 'ஜாதி' என்று மாறியது என்று சிலர் கூறுகிறார்கள். இது சரியா?

'ஜாதி' என்ற சொல்லில் உள்ள 'ஜா' என்ற வேர்ச்சொல் எந்த திராவிட மொழியிலும் கிடையாது. அது வடமொழியில் மட்டும்தான் இருந்தது. அதற்குப் 'பிறப்பு' என்று அர்த்தம். 'ஜா' என்று சொன்னால் பிறப்பு வழிப்பட்டது. பத்மஜா என்றால் பத்மத்திலே பிறந்தவள். வனஜா என்றால் வனத்திலே பிறந்தவள். கமலஜா என்றால் கமலத்திலே பிறந்தவள். அந்த வேர்ச்சொல்லே தமிழ்ச் சொல்லாக இல்லாதபோது இன்றைக்கு இருக்கிற ஜாதி அமைப்பை நாம் கற்பனை செய்துகூடப் பார்க்கமுடியாது.



இரண்டாவது, சைவம்தான் தமிழ் மதம் என்பதை நிலைநிறுத்தும் போது பெரியார் கூட இருந்த சைவ அறிஞர்கள், குறிப்பாக மறைமலை அடிகள் போன்றோர் பார்ப்பன எதிர்ப்பு என்கிற அம்சத்திலே பெரியாரை ஆதரித்துக் கொண்டு, 'சைவ மதம்தான் தமிழர்களின் உண்மையான மதம்' என்ற நிலை எடுத்தார்கள். 'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்' என்று மறைமலையடிகள் ஒரு புத்தகமே எழுதினார். இந்தக் கருத்தோட்டத்தை ஆராய்ச்சியாளர்கள் யாருமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

உமா கூட தமிழ்ச்சொல் அல்ல. பார்வதியைக் குறிக்கும் இதன் தமிழ்வடிவம் 'உமை'. இந்தச்சொல் 'ஹிமா' என்ற வடசொல்லுடைய தமிழ் வடிவம். ஹிமா என்றால் பனி என்று அர்த்தம். ஹிமாத்திரி என்றால் பனிமலை, இமயமலை என்று அர்த்தம். ஹிமா என்ற சொல் தமிழில் 'உமா' என்று ஆகிவிட்டது. ஹிமாலாய என்பதுதான் உமா. உமாதான் உமை; பார்வதியைக் குறிக்கும் பழைய சொல். பார்வதி என்பவள் இமயபர்வதத்தில் பிறந்தவள். முதலில் சைவ மதத்தின் வேர்கள் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறது. அதே நேரத்தில் காஷ்மீரில் ஸ்ரீகண்டர் உருவாக்கிய பாசுபத சைவம் இங்கே வருகிறது. அதை வைத்துக் கொண்டுதான் சைவ தத்துவங்களை உருவாக்கு கிறார்கள். இராஜராஜ சோழனின் குருமார்கள் எல்லாம் காஷ்மீர் சைவப் பண்டிதர்கள்தான். தஞ்சாவூர் கோயில் பாசுபத சைவ அடிப்படையில் கட்டப்பட்டதுதான்; சித்தாந்த சைவம் அல்லது தமிழ்ச் சைவம் என்ற அடிப்படையில் கட்டப்படவில்லை. கோயில் உள்ளே போனால் பார்க்கலாம். அகோரம், வாமம், சதாசிவம், ஜாதம், ஈசானம் என்ற ஐந்து மூர்த்தங்கள் இருக்கின்றன. இதெல்லாம் பாசுபத சைவ நெறிகள்; தமிழ்ச் சைவநெறிகள் அல்ல.

பாசுபத சைவத்திற்கும் தமிழ்ச் சைவத்திற்கும் வேறுபாடு என்ன?

அறுபத்துமூன்று நாயன்மார்களில் மதுரைக்குத் தெற்கே ஒருத்தர் கூட இல்லையே என்று கேட்டால் சைவர்கள் அதிகம் கோபப்படு வார்கள். இதுதான் உண்மை. அப்பொழுது சமண மதம் செழித்து இருந்த பூமியாக அது இருந்தது.

அதற்குப் பின்னாலே பாசுபதம் வந்தது. பாசுபத சைவம் தமிழ்ச் சைவத்திற்கு மூத்த வடிவம். பாசுபத சைவம் பற்றி விரிவாகப் பல நூல்கள் வந்துள்ளன. தமிழில் திருமந்திரம் கூட பாசுபத சைவத்தில் தான் உள்ளது.

எல்லா மன்னர்களாலும் ஆதரிக்கப்பட்ட மதமாக சைவம் இருந்தது. அப்பொழுதுகூட தமிழ்ச் சைவம் வரவில்லை. இராஜராஜ

சோழன் காலத்தில்கூட தமிழ்ச் சைவம் வரவில்லை. சோழ அரசு வைணவத்தை ஆதரிக்கவேயில்லை. சைவ மதத்தின் தோற்றம் என்று கேட்டால் அது காஷ்மீரகம் தான். ஸ்ரீகண்டர்தான் அதைத் தோற்று வித்தார். அதை லகுலீசர் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்திருக்கிறார். கிடாரிப்பட்டி மலைக்கோயிலில் லகுலீசர் சிற்பம் ஒன்று உள்ளது.

தமிழ்நாட்டில் அனைத்துச் சாதியினருமே நாங்கள்தான் ஆண்ட பரம்பரையினர் என்று சொல்லிக் கொள்கிறார்கள். இது எந்தளவிற்கு உண்மை?

வரலாற்று ஆசிரியர்கள் வேடிக்கையாகச் சொல்வார்கள். 'இராஜா என்பவன் சாதி கெட்டவன்'. ஏனென்றால் அரசியல் காரணங் களுக்காக எல்லா சாதியிலும் ஒரு பெண்ணை எடுத்துக்கொள்வார்கள். ஒரு அரசியல்வாதி அரசியல் செல்வாக்கு உள்ள சாதியிலே பெண் எடுத்துக் கட்டுவான். அந்த சாதியின் வாக்கெல்லாம் அவனுக்குக் கிடைக்கும். அதேபோல்தான் அப்போதும். எனவே ராஜாக்கள் ஒரே ஜாதி இல்லை என்பதைவிட உண்மை இருந்திருக்க முடியாது. அந்த அந்த ராஜாக்கள் பெயரை, பெருவாரியாக உள்ள ஜாதிகள் சில பட்டப்பெயராக வைத்துக் கொண்டு 'நாங்கதான் ஆண்டோம்' என்று சொல்கிறார்கள்.

'உடையார்'களை எடுத்தால், திருக்கோவிலூர்ப் பக்கத்திலே இருக்கிற மலையமான் திருமுடிக்காரி நாட்டுக் குடிமக்களாகிய இவர்கள் இடப்பெயர்ச்சியாகி தெற்கு நோக்கி வருகிறார்கள். திருச்சி மாவட்டத்திலே லால்குடி, முசிறி போன்ற இடத்திலே தங்குகிறார்கள். திரும்பவும் தெற்கு நோக்கி தேவகோட்டை, இளையாங்குடி பகுதியில் தங்குகிறார்கள். தேவகோட்டை பகுதியிலுள்ளவர்கள் எல்லாம் பிரிட்டோ அடிகள் காரணமாக கிறிஸ்தவர்களாக மாறிப்போய் விட்டார்கள். ஆனாலும் இன்னும் மலையமான், சுருதிமான் என்ற பெயரில் பிரிவுகள் வைத்திருக்கிறார்கள். மலையமான் நாட்டிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்கள் என்பதுதானே தவிர மலையமான் அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்லர். இப்படி நிறைய ஜாதி களைச் சொல்லலாம்.

மூவேந்தர்கள் பற்றி?

பல்வேறு இனக்குழுக்கள் கலைந்தபோது மூன்று அரச மரபினர் மேலெழும்பி வருகிறார்கள். அதுதான் சேர, சோழ, பாண்டியர்கள். ஒவ்வொரு அரச வம்சத்துக்கும் பலவகையான பெயர்கள். பாண்டியன், செழியன், மாறன், வழுதி, தென்னவன், மீனவன். இத்தனை இனக் குழுக்கள் கரைந்து மேலே வரும்போது பாண்டியன் என்ற பொதுப் பெயரோடு வருகிறார்கள். இப்படி சோழர்களில் செழியன், வளவன், கிள்ளி, செம்பியன், சோழன் என இருந்தார்கள். இவர்களையெல்லாம் பார்த்தால் பத்துப் பேர் பதினைந்து பேர். அந்தப் பத்துப் பேரும் பதினைந்து பேரும் கரைந்து, கரைந்து ஒன்று மேல் வந்து நிலைத்து நிற்கும். அப்படித்தான் மூவேந்தர்கள் உருவானார்கள். வேந்தன் என்று சொன்னால் சேர, சோழ, பாண்டியன் ஆகிய மூன்று பேரையும் குறிக்கும். இவர்கள் கூடக் கடைசியில் போன இடம் தெரியாமல் மறைந்தார்கள். இறுதியாக 1648இல் பாண்டியன் ஒருவன் அப்படியே தெற்கு நோக்கி வந்து தென்காசி பகுதியில் முடிசூட்டிக் கொண்டான் என்று தெரிகிறது. அவனது பரம்பரையையே கண்டுபிடிக்க முடிய வில்லையே!



வேந்தர்களின் மீது ஜாதிப் பெயரைச்சூட்டி இன்று அழைப்பதை அறியாமை என்று சொல்லலாமா?

அப்படித்தானே சொல்லமுடியும். பாண்டியன் என்ற பட்டப் பெயர் பல ஜாதியிலே இட்டுக் கொள்கிறார்கள். பாண்டியன் என்று பெயர் இட்டுக்கொள்கிறவர்கள் எல்லாம் பாண்டியர்களா? ஆனால் சேரன், சோழன் என்று பெயர்கள் இட்டுக்கொள்ளவில்லை. பாண்டியன் பெயர் மட்டும் மக்கள் பெயராகத் தொடர்ந்து நீடித்துக் கொண்டே இருக்கிறது. ஏனென்றால் அந்த அரசமரபுதான் பதினேழாம் நூற்றாண்டு வரைக்கும் உயிரோடிருந்தது. சேர, சோழ மரபுகள் காணாமல் போய்விட்டன. வேந்தர்கள், இனக்குழுக்கள் காலத்தில் பிறந்தவர்கள். அவர்களைச் சாதியோடு தொடர்புபடுத்தவே முடியாது.

அதுபோல, பாண்டியனைக் குறிக்கும் பெயரை நெல்லை மாவட்டத்திலே இட்டுக்கொண்டே இருக்கிறார்கள். பாண்டியர்கள் இயற்கையாக இட்டுக்கொள்கிற பெயர் வேம்பன். வேம்பன் என்பது வேப்பமரத்தைக் குறிப்பது. நெல்லை மாவட்டத்திலே பார்ப்பனர் களில் இருந்து ஒடுக்கப்பட்டவர்கள்வரை எல்லோரும் 'வேம்பு' என்ற பெயரை இட்டுக்கொண்டே இருக்கிறார்கள். வேம்பன் என்பது பாண்டியன் பெயர். திருநெல்வேலிக்கே வேம்பநாடு என்றுதான் பெயர். மூவேந்தர்களிலும் பழைய குடியினர் பாண்டியர்கள்தான்.

வர்ணாசிரமப் படிநிலையில் முன்னொரு காலத்தில் மேல்நிலையிலிருந்த ஒரு ஜாதி, பின்னர் கீழ்நிலைக்குத் தள்ளப்படுவதற்குச் சாத்தியமுண்டா?

தலித் மக்களில் ஒரு பிரிவினர் (சித்தர் குருசாமி போன்றவர்கள்) தான் அப்படி கூறிக்கொள்கிறார்கள். வரலாற்றுரீதியாக இது தவறு. திடீரென்று ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்தில் சாதிப்படிநிலையில்

மாற்றம் வரமுடியாது. இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலேயர்கள் தான் சாதியை ஒடுக்குவதற்கு 1856 Caste Disabilities Removal Act சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்போதுதான் கல்வியிலும், மருத்துவமனையிலும் சாதிவேறுபாடுகள் கிடையாது என்பது நடைமுறைக்கு வந்தது. ஆங்கிலேயர்கள் காலத்தில்தான் நாங்கள் அடிமைப்பட்டோம் என்று கூறிக்கொள்வது எல்லாம் வரலாற்றுப் பிழை. யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இனவரைவியல் தொடர்பான விவாதங்கள் தொடர்ந்து பேசப்படுகின்றன. இனவரைவியல் எந்த அடிப்படையில் நடைபெறுகிறது?

இனவரைவியல் என்பது நிலத்தோடும், வெளியோடும், உறவுடைய விஷயங்கள்தான். இதைப்பற்றி 'இனவரைவியலும் தமிழ்நாவலும்' என்ற பெயரில் ஆ.சிவசுப்பிரமணியன் ஒரு புத்தகம் எழுதி இருக்கிறார். இனவரைவியல் என்றால் நம்முடைய தொல்காப்பியர் சொல்கின்ற உரிப்பொருள்கள்தாம். உரிப்பொருள் என்பது தெய்வம், உணவு, மரம், விலங்கு, பறவை, இசை முதலியவற்றைக் குறிக்கும்.

எடுத்துக்காட்டாக, செங்கோடன் என்று பெயர் இருந்தால் அவர் மதுரைக்காரராக நிச்சயம் இருக்க முடியாது. கொங்கு மண்டலத்துக் காரராகத்தான் இருக்க முடியும். நீர்க்காத்தலிங்கம், பரமார்த்தலிங்கம் என்று பெயர் இருந்தால் அவர் நிச்சயமாக நாஞ்சில் நாட்டுக்கார ராகத்தான் இருப்பார். வடிவு என்ற பெண் பெயர் இருந்தால் பூர்வீகத்திலே திருநெல்வேலிக்காரர்களாகத்தான் இருப்பார்கள்.

தெய்வம் வித்தியாசப்படும். சுடலைமாட வழிபாடு திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்திலும், கருப்பசாமி வழிபாடு மதுரை, இராமநாதபுர மாவட்டத்திலும் இருக்கிறது. திருச்சி, அரியலூரில் காத்தவராயன் வழிபாடும், கோவை மாவட்டத்தில் அண்ணன்மார் சாமி வழிபாடும், வடக்கே தென்ஆற்காடு மாவட்டத்தில் பொன்னி யம்மன் வழிபாட்டு முறையும் இருக்கின்றது. தெய்வங்கள் நிலத்துக்கு நிலம் வேறுபடுகின்றன அல்லவா?

தினை அரிசியினை நாம் பெரும்பாலும் உட்கொண்டு இருக்க மாட்டோம். ஆனால் சங்கரன்கோவில் மக்கள் தினை அரிசி சாப்பிட்டு இருப்பார்கள். அந்நிலப்பகுதியில்தான் தினை விளையும்.

உணவு வித்தியாசம், நிலம் வித்தியாசம், மரம் வித்தியாசம் இருக்கின்றது. பூவரச மரங்கள் நெல்லை மாவட்டத்தில் இருக்கிற மாதிரி வேறு எங்கும் காண முடியாது. அதேபோலப் போகன்வில்லா செடிகளை எல்லா இடங்களிலும் காணமுடியாது. காலத்தோடும் வெளியோடும் தொடர்புடைய மனிதர்களும் பிறப்புகளும்தான் இனவரைவியலின் கூறுகள்.



மொழி அடிப்படையில் இனம் பிரிக்கப்பட்டுள்ளதா?

மொழி, இனத்திற்கான முதல் அடையாளம். மொழி மட்டுமே இனத்துக்குரிய அடையாளம் ஆக முடியாது. ஒரு நிலப்பரப்பு, ஒரே வகையான பொருளாதார வாழ்க்கைமுறை, ஒரே வகையான சடங்குகள், உறவு முறைகள் எல்லாம் சேர்ந்துதான் ஒரு இனத்தை அடையாளம் காட்டமுடியும்.

மதம் இனத்திற்கான அடையாளமாக இருக்கமுடியுமா?

மதம் இனத்திற்கான அடையாளமாக இருக்கவே முடியாது. ஏனென்றால் மதம் மாறும்போது அடையாளம் மாறுவதில்லை. இத்தாலியில் இருக்கிற கத்தோலிக்க கிறிஸ்தவமும், நெல்லை மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவமும் ஒரே இன அடையாளமாக இருக்க முடியாது. நாம் விரும்பினால் இன்றைக்கு மாலையிலே இஸ்லாம், நாளை மறுநாள் இந்து என மாறிக்கொள்ளலாம். எனவே மதம், இனத்திற்கான அடையாளமாக இருக்கமுடியாது.

திராவிடம் என்பது இன அடையாளம் கிடையாது, அதற்கு வரலாற்று ஆதாரம் இல்லை, அறிவியல் அடிப்படை அற்றது என்று ஒரு வாதம் வைக்கப்படுகிறது. அதே நேரத்தில் ஆரியம் x திராவிடம் என்று தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது. இதில் எது சரியானது? இதை விளக்கமுடியுமா?

திராவிடம் என்ற கருத்தாக்கம் உருவாவதற்கு அன்றைக்கு இருந்த அடிப்படையான காரணங்களில் ஒன்று காலனி ஆட்சியிலே ஏற்பட்ட சமூகமாற்றம். அதைவிட தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மாநிலங்களுக்கு இடையே அடிப்படையிலே கலாச்சார ஒற்றுமைக் கூறுகள் உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது. வட இந்தியர்கள் இந்த நாலு மாநிலத்தவர்களையும் ஒன்றாக 'மதராஸி' என்று குறிப்பிடுவது தற்செயலானதல்ல. தோற்ற அமைப்பில் இருக்கும் ஒற்றுமைதான் இவர்களை ஒரே இனமாக மற்றவர்களைப் பார்க்க வைக்கிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் இந்தச் சமூகத்தில் எந்த ஜாதியாக இருந்தாலும் சில அடிப்படையான கலாச்சார ஒற்றுமைகள் உண்டு. எடுத்துக்காட்டாக தாய்மாமன் மரியாதை என்பது இன்றும் நான்கு மாநிலங்களிலும் கடுமையாய் இருக்கிறது. ஆண்கள் மீசை வைத்துக்கொள்வது இந்த நான்கு மாநிலங்களில் மட்டுமே அதிகம் காணப்படுகிறது. அதேமாதிரி இறுதி மரியாதை, சடங்கியல் தகுதிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

பூர்வீகத்திலே அனைவரும் ஒரு மொழி பேசுபவர்களாக இருந்தார்கள் என்று கால்டுவெல் ஏற்கனவே நிருபித்து இருக்கிறார். அது உண்மைதான். ஒரு இனத்துக்காரர்களாய் இருந்தோம். ஏன் பிரிந்தோம் என்று தெரியவில்லை. வரலாற்றுத் தொடர்ச்சியும், காரணங்களும் தெரியவில்லை.

தமிழ்நாட்டில் இக்கருத்தை அரசியல்ரீதியாகவும் (Socail Political Phenomenon) முன்வைத்தார்கள். அரசியல்ரீதியாக தோற்றுப்போய் விட்டதால் திராவிடக் கருத்தியலே தோற்றுப்போனது என்று சொல்லமுடியாது.

ஆரியர் என்பது ஒரு இனமா அல்லது கூட்டமைப்பா?

ஆரியர் என்பது இனம்தான். குறிப்பாக இந்தோ ஆரியர் என்று இனமே இருக்கிறது. ஜெர்மனிக்கும் சமஸ்கிருதத்துக்கும் அடிப்படையிலே சில வேர்ச்சொற்களைக் கண்டுகொண்டதன் காரணமாகத்தான் மேக்ஸ்முல்லர் இந்தியாவை தன் பூர்வதேசம் என்று நினைக்கிறார். 'ஜா' என்ற வேர்ச்சொல் ஆங்கிலத்தில் 'ஜி' என்றும், சமஸ்கிருதத்தில் ஜாதி என்றும் இருக்கிறது. ஆரியர் உயர்வு வாதத்திற்கு அடித்தளம் இட்டவர் மேக்ஸ்முல்லர். அவர்தான் ஆரியர் இனம் ஆளப்பிறந்த இனம் என்று கூறினார். கீழைநாட்டு வேதநூல்களை இது தொடர்பாக மொழிபெயர்த்தார்.

ஆரிய இனத்திற்குச் சில அடிப்படை மரபுகள் உண்டு. ஆரிய இனத்திற்கும் நமக்கும் வேறுபாடுகள் உண்டு. நாம் வெப்ப மண்டலத்திலே வாழ்கிறவர்கள். தமிழர்களும், மலையாளிகளும் நீரைக் கொண்டாடுவார்கள். நீர் சார்ந்த சடங்குகள், புனிதங்கள் நமக்கு அதிகம். கங்கைச் சமவெளியில் வாழ்ந்த ஆரியர்களுக்கு நெருப்பு சார்ந்த சடங்குகள் அதிகம். அவர்கள் தந்தை வழிச்சமூகம், நாம் தாய்வழிச் சமூகம். அவர்கள் கிராமப்புற நாகரிகம், நாம் நகர நாகரிகம்.

சடங்குகள் என்பது தமிழர்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ளன. இதில் எந்த அளவு மூடநம்பிக்கை உள்ளது; எந்த அளவு அறிவியல் சார்ந்து உள்ளது?

நம்பிக்கைக்கும் மூடநம்பிக்கைக்கும் என்ன வித்தியாசம்? இதுதான் என் தெய்வம், வழிகாட்டுகிறது என்று நம்புவது நம்பிக்கை. அந்த நம்பிக்கைக்கு எங்கே அதிகாரம் குறுக்கே வருகிறதோ அங்கே மூடநம்பிக்கை பிறக்கிறது. 'உனக்காக நான் யாகம் பண்றேன், ஹோமம் பண்றேன்' என்று சொல்வது மூடநம்பிக்கை. அதாவது அர்ச்சகர் என்ற ஒரு அதிகாரம் இங்கே குறுக்கே வருகிறது. நம்பிக்கை இயல்பானது. அதிகாலையில் வயல்வெளிக்குப் போகிற வழியில் சூரிய உதயத்தைப் பார்த்துவிட்டால், செருப்பைக் கழற்றிவிட்டுக் கும்பிடு போடுகிறோம். அதை மூடநம்பிக்கை என்று சொல்ல முடியாது. ஏனென்றால், அந்த சூரியன் இல்லையென்றால் பயிர் விளையாது. அது ஒரு நம்பிக்கை. அதுவே பெரிய கோயிலாக உருவெடுத்து, அங்கே அர்ச்சகர் வரும்போது, மூடநம்பிக்கை பிறந்து விடுகிறது.



நம்பிக்கையில் அரசு அதிகாரம் மட்டுமல்ல, ஏதோ ஒரு ஆன்மீக அதிகாரம் குறுக்கே வந்துவிட்டால் கூட, அது மூடநம்பிக்கையாகி விடும். இன்றைக்கு இருக்கிற அறிவியல் என்பது Europian Science தான். அதை Pure Science என்று எங்களைப் போன்றவர்களால் ஒத்துக்கொள்ள முடியாது. ஒரு வகையான சுரண்டல் நோக்கத்தை உள்ளடக்கியதாகவே அவர்களது அறிவியல் உள்ளது. எனவே இது மூடநம்பிக்கைக்கு எதிரான அறிவியல் அன்று. இன்றும் பதிமூன்று என்ற எண்ணைப் பார்த்து அவர்கள் பயப்படுகிறார்களே!

சந்தையை விரும்புகிற முதலாளிகளும், நாடு என்பது பிரிந்துபோகக் கூடாது என்று கூறுகிறார்கள். இவர்களை எதிர்க்கின்ற இந்தியாவிலுள்ள இடதுசாரிகளும், நாடு பிரிந்துபோகக் கூடாது என்கிறார்கள். இதில் எது உண்மை?

நம்முடைய இடதுசாரிகள், முதலாளிகளாக மாறிக்கொண்டு இருக்கிறார்கள். ஏற்கனவே இவர்கள் முதலாளித்துவ சிந்தனைக்குள் வந்துவிட்டார்கள். இவர்களுக்குக் கூடங்குளத்தில் ரஷ்யா விற்ற ரியாக்டர் மாதிரி இன்னும் 10 ரியாக்டர்களை ரஷ்யா இந்தியாவிலே விற்க வேண்டும் என்றே விருப்பம். இது ஒரு வகையான ஏகாதிபத்திய சிந்தனை. ஏகாதிபத்தியத்தில் இடது என்ன? வலது என்ன? இடதுசாரிகளில் ஒரு பகுதியினர் ஏகாதிபத்தியவாதிகளாக, சிந்தனை அளவிலே முதலாளித்துவவாதிகளாக உருமாறிக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் அர்த்தமாகிறது.

இன்றைக்குத் தீவிர இடதுசாரிகள் கூட்டுக்குடும்பத்தை வலியுறுத்துகிறார்கள். ஏனெனில் 'கலாச்சாரம் என்பது அப்பா, அம்மாவிடம் இருந்து வந்ததில்லை. கதை சொல்லும் தாத்தா, பாட்டி இல்லாத குடும்பம், கலாச்சாரம் இழந்து போயிருக்கிறது' என்கிறார்கள். கூட்டுக்குடும்பம் நரகமாக மாறும்போது தனிக் குடும்பத்தை ஆதரிக்கிறோம். எப்படி இருந்தால் மகிழ்ச்சியோ அப்படியே வாழ்கிறோம். இப்படித்தான் வாழவேண்டும் என யாரும் நிர்பந்திப்பதில்லை. மாறிவரும் பொருளாதார உறவுகளும், உற்பத்தி உறவுகளும் புறச்சூழலைத் தீர்மானம் செய்கின்றன.

இடதுசாரிகள் போராட்டச் சிந்தனைகளில் இருந்தே வெளிவந்து விட்டார்கள். அது, எது வரைக்கும் கொடூரமாக இருக்கிறது என்று பார்த்தால், இலங்கையின் இறையாண்மைக்குள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று சொல்லுகின்ற அளவிற்கு முதலாளித்துவச் சிந்தனை உள்ளவர்களாக மாறிப் போனார்கள். இலங்கை ஒன்றாய் இருப்பது இந்தியாவிற்கு நல்லது. ஏனென்றால், இந்தியா, இலங்கையைச் சந்தையாக்கப் பார்க்கிறது; சீனாவும் சந்தையாக்கப் பார்க்கிறது. 'இலங்கை இறையாண்மைக்குள் ஒரு சிக்கல் இருக்கிறது' என்று மூன்று லட்சம் பேரைக் கொன்றபின் சி.பி.எம். கூறுகின்றது. இதை எப்படி ஒத்துக் கொள்வது? இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பதில் இவர்களுக்கு ஏன் இவ்வளவு ஆர்வம்?

இராமேஸ்வரத்திலே இந்திய இறையாண்மை, இலங்கை அரசால் சிக்கலுக்குள்ளாகிறது அல்லவா? ஒரு நாட்டின் எல்லைக்குள் வந்து அந்த நாட்டுக்காரனைச் சுட்டுக் கொல்வது அந்த நாட்டின் இறை யாண்மையைப் பாதிக்கிற விசயம்தானே? அதை 600 முறை இலங்கை அரசு செய்து இருக்கிறது. இவர்கள் ஒருமுறைகூடக் கண்டிக்காது இருப்பது ஏன்? இலங்கை இறையாண்மை பற்றிக் கவலைப்படு கிறவர்கள் இடதுசாரிகளே அல்ல; இடதுசாரிப் போர்வையில் மறைந்து இருக்கிற வலதுசாரிகள்; பா.ஜ.க.வின் மாற்றுவடிவம்.

**சங்க இலக்கியத்தில் இயற்கையோடு வாழ்ந்து வந்தோம். மரங்களை வெட்டுவது என்பது உடன்பிறந்த சகோதரியை வெட்டுவதுபோல கருதப்பட்டது. ஆனால் இப்பொழுது இயற்கைக்கு எதிரான கூடங்குளம் அணுமின் நிலையம் போன்ற திட்டங்களை ஆதரிக்கும் அளவுக்கு மக்கள் மாறிவிட்டார்கள். இது ஏன்?**

காலனிஆட்சியிலே செல்வங்களை மட்டுமல்லாது, மீட்டெடுக்க முடியாத கலாச்சார மதிப்பீடுகளையும் இழந்து நிற்கிறோம் என்பது தான் உண்மை. அந்த இழப்பை இப்போதாவது உணர வேண்டும். இயற்கைக்கும் நமக்கும் உள்ள தொடர்பு அறுந்துகொண்டே போகிறது. குறிப்பாக ஆங்கில மருத்துவம் வந்ததினால் நிறைய தாவரங்களுக்கும் தமிழர்களுக்குமான தொடர்பு காணாமல் போய்விட்டது. சித்த மருந்துக் கடையிலே இருக்கும் வேர்களை எத்தனை பெண்கள் இப்போது அடையாளம் காட்டுவார்கள்? நான் அடையாளம் காட்டும் தாவரத்தை என் மகளோ, மருமகளோ காட்ட முடியாது. இயற்கைக்கும் நமக்கும் தொடர்பு அறுந்து கொண்டே வந்ததுதான் ஆங்கில மருத்துவம் வளரக் காரணம்.

நம்முடைய குழந்தை மருத்துவமுறையிலே ரோசனை, கஸ்தூரி இவை முக்கியமானவை. ரோசனை என்பது பசுவினுடைய அன்ட்ரினல் கிளாண்ட். கஸ்தூரி என்பது கஸ்தூரி மானுடைய அன்ட்ரினல் கிளாண்ட். இந்த கிளாண்ட்களை மருந்துகளோடு சேர்த்துக் கொடுத்தால் குழந்தைக்கு நோய் எதிர்ப்புச் சக்தி உருவாகும். இந்த மருந்துகளை இன்று நாம் இழந்து போனோம். இப்படி உயிர் உலகத்தோடும் பயிர் உலகத்தோடும் நம் தொடர்பு அறுந்து கொண்டே வந்ததுதான் காலனி ஆட்சி நமக்குச் செய்த மிகப்பெரிய கொடுமை; துரோகம். இப்போதுதான் நாம் யோசிக்கிறோம். ஆனாலும் இன்னமும் நம்மிடையே பச்சை மரத்தை வெட்டும்போது யாராவது இரண்டு கிழவன் அல்லது கிழவி, 'ஏன் பச்சை மரத்தை வெட்டுறே' என்று கேட்கத்தான் செய்கிறார்கள். ஒரு திடப்பொருளாகத் தாவரங்களைப் பார்க்கிற வழக்கம் நம்மிடம் எப்பொழுதும் இருந்தது இல்லை.



நம்முடைய தாவரங்களில் இருந்து மருத்துவப் பயனை மீட் டெடுப்பதற்குரிய வழி நம்மிடையே இருக்கிறது. ஐரோப்பியர் களிடையே அது இல்லை; குரோட்டன் தாவரத்தின் மருத்துவப் பயனை அவர்கள் இன்னமும் மீட்டெடுக்கவில்லை. நிச்சயமாகக் குரோட்டன் என்ற தாவரத்திற்கு, அது பிறந்த மண்ணிலே ஒரு மருத்துவப்பயன் இருந்திருக்க வேண்டும். ஐரோப்பியர்கள் நிறைய விஷயங்களைப் புதைத்துவிட்டுப் போய்விட்டார்கள். இன்றைக்கு இதை எங்கிருந்து மீட்டெடுக்க முடியுமென்றால் இலக்கியத்திலிருந்து மட்டும்தான் மீட்டெடுக்க முடியும். இன்னும் அமெரிக்கப் பல்கலைக் கழகத்திலே வரலாற்றுப் பாடம் மரியாதை இல்லாத பாடமாகத் தான் இருக்கிறது. ஏனென்றால் அவர்களுக்கு வரலாறு கிடையாது. அவர்களுடைய பார்வையெல்லாம் எதிர்காலத்திலேதான் அதிக மாக இருக்கிறது. பிற நாடுகளை அடிமை செய்வதற்கு ஏதுவாக, படையெடுக்கப் போகிற நாட்டைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மொழியியல் கொண்டு வந்தார்கள். இப்படிதான் குறுகிய காலத்தில் மொழியைக் கற்றுக்கொண்டு, தேசத்தின் கலாச்சாரத்தை அடிமைப் படுத்துவதற்கு உபயோகித்தார்கள்.

**தமிழர்கள் தொன்மங்களை இழந்தமைக்குப் பெரியாரைப் பழி சுமத்துகிறார்கள், இது சரியா?**

பெரியாரைக் கொண்டாடுவது அறிவுலகத்துக்கு அடையாளம் என்று ஒரு காலத்தில் சொல்லப்பட்டது. மார்க்சியவாதிகள் கூட பெரியாரைக் கொண்டாடினார்கள். 'பகுத்தறிவின் சிகரம் பெரியார்' என்று சொல்லி 1954இல் தொழிற்சங்கத் தலைவர் தோழர் ஏ.எஸ்.கே. ஐயங்கார் புத்தகம் எழுதினார். பெரியாரைக் கொண்டாடியது அறிவுலகத்துக்கு ஒரு அடையாளம் என்று கருதப்பட்டது போல, இந்தப் பத்து ஆண்டுகளில் பெரியாரைப் பழிப்பது என்பது அறிவுலகத்துக்கு அடையாளம் ஆகிப்போய்விட்டது. பெரியார்

மீதான விமர்சனத்துக்குப் பெரியாரின் ஆளுமை இன்னமும் ஒரு நூற்றாண்டிற்குத் தாங்கும்.

பெண் உரிமை பற்றி வாய்கிழியப் பேசுகிற கூட்டம் கூட பெரியாருடைய தாலி நிராகரிப்புப் பற்றிப் பேசுவதில்லை. வட இந்தியப் பெண்கள் இயக்கத்தில் கூட 'தாலியை நிராகரியுங்கள்' என்று யாரும் சொன்னதில்லை. பெரியார், கடவுளை மட்டும் அல்ல, தாலியையும் நிராகரியுங்கள் என்று வலியுறுத்தினார். ஆனால் அதைப் பற்றிப் பேசவோ சிந்திக்கவோ யாரும் தயாராக இல்லை. ஆனால், பெரியாரைப் பழிக்கிறது என்பது ஒரு நாகரிகம் (Fashion) ஆகிவிட்டது. அந்த வகையிலேதான் தொன்மங்களைப் பற்றிப் பேசு கிறார்கள். பெரியாரினால் தொன்மங்கள் காணாமல் போய்விட்டது என்று கூறுவது தவறு.

பெரியார் என்றுமே நாட்டார் கலாச்சாரத்தின் மீது போர் தொடுக்கவேயில்லை. அது அவரின் நோக்கமும் இல்லை. அவர் வைதிகத்தின் மீதும் நகர கலாச்சாரத்தின் மீதும்தான் போர் தொடுத்தார். பெரியார் பிள்ளையார் சிலையைத்தானே உடைத்தார்; சுடலைமாடன் சிலையை உடைக்கவில்லையே. சுடலைமாடன், காத்தவராயனை அவர் ஒன்றும் செய்யவில்லையே. பெரியார் தொன்மங்களைக் காலி செய்துவிட்டார் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் தொன்மங்கள் இன்றைக்கும் உயிரோடுதான் இருக்கின்றன. பெரியாரைப் பற்றியே நிறைய தொன்மங்கள் வந்துவிட்டன.

பெரியார் வாழ்ந்த காலத்தின் சூழல் வேறு; இன்றைக்கு இருக்கும் காலம் வேறு. பெரியாருக்குப் பிறகு உலகம் முப்பது ஆண்டுகள் சுற்றியிருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, புதிய அறிவியல் கருவிகள் எவ்வளவு வந்திருக்கிறது! இதை வைத்துக்கொண்டு பெரியாரை அளக்க முற்படுவோம். பெரியாருக்கு அப்புறம் பெண் களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்து இருக்கிறது. பெரியாரே இருந்தால் இன்றைய பெண்கள் அடைந்து இருக்கும் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ச்சி அடைவார். பெண்கள் இல்லை என்றால் உலகம் இல்லை என்று நம்புகிறார்கள். இன்னமும் நம்முடைய பெண் தெய்வங்களின் கையில் இருக்கிற ஆயுதத்தைத் தூக்கிப்போட யாருக்கும் தைரியம் வரவில்லை. அதுதான் போர்க்குணம்; அதுதான் பண்பாடு.

அறிவியல் வளர்ந்து இருக்கிற இந்தக் காலத்தில் சிறுதெய்வ வழிபாடுகளை அல்லது நாட்டார் தெய்வங்களை எப்படி நாம் பார்க்க வேண்டும்?

பெரியார், நாட்டார் தெய்வங்களை எதிர்க்கவில்லை. காளியம்மன், மாரியம்மனை எதிர்க்கவில்லை. இந்த நாட்டார் தெய்வங்கள் ஒவ்வொரு மனிதனின் இரத்த ஓட்டத்திலும் கலந்த விஷயம். மழை வேண்டு மென்றால் மாரியம்மனுக்கு மழைக்கஞ்சி எடுக்க வேண்டும். இது நம்பிக்கை; மூடநம்பிக்கை இல்லை. நாட்டார் தெய்வங்கள் என்பவை அதிகார மையங்கள் அல்ல; காமாட்சி அம்மனைப் போல, மீனாட்சி அம்மனைப் போல அதிகார மையத்தைச் சார்ந்த தெய்வங்கள் அல்ல.



நாட்டார் தெய்வத்திலே தெய்வத்திற்கும் மனிதனுக்கும் குறுக்கே நிற்கிற அதிகாரம் எவ்வளவு நேரம்? சாமி ஆடும் நேரம் மட்டும் தான். அந்தப் பத்து நிமிடம் சாமி ஆடுவான். அந்நேரம்தான் அவனுக்கு அதிகாரம். அதற்குப் பிறகு அவனும் கடப்பாரையைத் தூக்கிக் கொண்டு மற்றவர்களோடு வேலைக்குக் கிளம்பிவிடுவான். நாட்டார் தெய்வங்கள் ஜனநாயகத் தன்மை வாய்ந்தவை. நான் என்ன சாப்பிடுகிறேனோ அதைச் சாப்பிடுவதுதானே என் தெய்வம். இதுவும் ஒரு உயர்தர சமத்துவம்தானே! நான் பன்றிக் கறி சாப்பிட்டால் என் தெய்வமும் பன்றிக்கறி சாப்பிடணும். நான் ஆட்டுக்கறி சாப்பிட்டால் என் தெய்வமும் ஆட்டுக்கறி சாப்பிடணும். நான் ரோட்டிலே சாப்பிட்டால் என் தெய்வமும் ரோட்டில் சாப்பிடணும். இந்தத் தெய்வத்தை எப்படி நீங்கள் அழிக்க முடியும்?

ஆனால், சாதி சார்ந்து நாட்டார் தெய்வங்கள் அடையாளப்படுத்தப் படுகின்றனவே?

சில பெரிய சாதிகளுக்கு மட்டும்தான் வரையறுக்கப்பட்ட தெய்வங்கள் உண்டு. மாரியம்மன் எந்தச் சாதியின் தெய்வம்? ஒரு காலத்தில் மாரியம்மன் உழவுத் தொழில் செய்தவனுடைய தெய்வம். இன்றைக்கு மழை வேண்டுபவர்களுக்கெல்லாம் மாரியம்மன் தெய்வம். எல்லாத் தெய்வங்களையும் அப்படிச் சேர்க்க முடியாது. சில சில தெய்வங்கள் வட்டாரம் சார்ந்திருக்கிறது; சாதியைச் சார்ந்திருக்கிறது.

நமது மரபுசார்ந்த இலக்கியங்களை மீட்டு எடுப்பதன் மூலமாக நமது வாழ்க்கை முறையை நெறிப்படுத்த முடியுமா?

இலக்கியங்களை மீட்டெடுப்பது என்பது வாழ்வியலின் மதிப்பீடுகளை மீட்டெடுப்பதுதான்.

மாடுபிடித்தல் என்பது நமது தொன்மங்களில் ஒன்று. அது இன்றைக்கு அவசியம் தானா?

மாடு பிடிக்கிறதோ, மாடு அடக்குறதோ கிடையாது. மாட்டை அணைத்தல் என்பதே சரியானது. திமிலை அணைத்துப் பிடித்தல், கொம்பை ஒடித்துப் பிடிக்கிறது இல்லை. இது ஒரு விளையாட்டு.

அவர்கள் மாட்டை அணைத்துப் பிடிப்பதற்காகவே போகிறார்கள். தொலைக்காட்சிப் பேட்டியில் பார்க்கும்போதுகூட 'நான் இருபது வருடமா மாட்டை அணைக்கிறேன்' என்றே கூறுவார்கள். சட்டத்தைக் கொண்டுவந்து இதைத் தடுக்கிறார்கள், அதுவும் வனவிலங்குச் சட்டத்தின் கீழ்.

அடிப்படையில் மாடு வனவிலங்கே கிடையாது. வீட்டில் பிறந்து, வீட்டில் வளர்ந்த காளை எப்படி வனவிலங்கு ஆகும்? கோவிலுக்கு நேர்ந்துவிட்ட மாட்டை, ஊர் கூடி வளர்த்து விட்ட மாட்டை எப்படி வனவிலங்கு என்று சொல்வீர்கள்? அது வீட்டுக்காரர்கள் அழைத்தால் ரொம்ப சாதுவாகக் கூடவே போகும். தொலைகாட்சியில்கூட காட்டினார்கள் அல்லவா? ஒரு பதினெட்டு வயதுப்பெண், மாட்டைக் குளிப்பாட்டி, ஜல்லிக்கட்டுக்குக் கூட்டிக்கொண்டு வருவதைக் காட்டினார்களே! அது எப்படி வனவிலங்கு ஆகும்? அது வளர்ப்பு மிருகம் (Domestic Animal) தான்.

பிடிக்கிறவன் வெறும் கையோடுதான் அதைப் பிடிக்கிறான். ஆயுதத்தை எடுத்துக்கொண்டு போகவில்லை. எனவே அது வன்முறை ஆகாது. ஆயுதம் எடுத்தால்தானே வன்முறை.

சிலநேரம் விபத்துகள் நடந்திருக்கிறது. அதுவும் மாடு கூட்டத்தைப் பார்த்து, தப்ப முயற்சிக்கிறபோது அது மிரண்டு ஓடுகிறது. அப்பொழுது கொம்பைப் பயன்படுத்துகிறது. முறையான பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பெரியாருடைய கருத்துக்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்திய விளைவுகள் என்ன?

சாதிப்பெயர் இல்லாமல் இருக்கின்ற தைரியம் இந்தியாவிலேயே தமிழர்களுக்கு மட்டும்தான் இருக்கிறது. தமிழ்நாட்டில் எந்த வீட்டிலும் யாரும் நீங்கள் எந்த ஜாதி என்று விருந்தினரை விசாரிப்பதில்லை. இஸ்ரோவின் தலைவர் மாதவன் நாயர், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் இ.எம்.எஸ். நம்பூதிரிபாட், மிஸ்ரா, குப்தா என்று சாதிப்பெயர் இல்லாமல் மற்ற மாநிலங்களில் இருப்பதில்லை. நாம்தான் மூன்று தலைமுறைகளாகச் சாதிப்பெயர் துறந்து இருக்கிறோம். இது பெரியாராலேதான் சாத்தியமாயிற்று.

பெரியார் தலித் மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டார். இதனாலேயே பெரியாரை நிராகரிப்பது பார்ப்பனர்களுக்கு ஒரு நாகரிகமாக மாறிவிட்டது. லால்குடி தாலுகாவில் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர்கள் மாநாடு 1925இல் நடந்தது. அதை நடத்த விடாதபடி செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்கள் முயற்சி செய்தார்கள்.



அப்போது திருச்சி கத்தோலிக்கர்களில் பெரும்பான்மையினராக வெள்ளாளர்களும், பார்ப்பனர்களும் இருந்தனர். வெள்ளாளர்களும் பார்ப்பனர்களும் லால்குடி தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ மாநாடு நடக்க விடாமல் தடுக்க முயற்சி செய்தனர். ஆனால் மாநாடு நடத்த பெரியார் தொடர்ந்து உதவி செய்தார். எதிர்ப்புகளைக் கண்டித்து, தொடர்ந்து 'குடியரசு' இதழில் எழுதினார்.

இப்படியாக, பெரியார் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவர் களுக்கு ஆதரவாக இயங்குவதைப் பொறுக்க முடியாமல் 1933இல் கத்தோலிக்க மாநாடு கூட்டி, பெரியார் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் எனத் தீர்மானம் போட்டார்கள். அது மட்டுமல்லாமல் பெரியார் கடவுள் மறுப்புக் கொள்கை உள்ளவர், கத்தோலிக்க மதக் கொள்கைக்கு எதிராகச் செயல்படுகின்றார் என்று, சுதந்திரம் அடைந்ததலிருந்து பெரியாரை கத்தோலிக்கக் கல்லூரிகளில் நுழைய விடாமல் தடை செய்தார்கள். யார் பெரியாரை எதிர்க்கிறார்கள் என்பதை நாம் பார்த்தோமென்றால், பெரியாரின் வெற்றி புலப்படும்.

♦

கீற்று
24-05-2012

# 3

## சாதிகள் உண்மையுமல்ல... பொய்யுமல்ல...

வரலாறு என்பது மேட்டிமைச் சமுதாயங்களின் கதையாடல் களாகவே உள்ளது; இதில் அறியப்படாத தமிழக வரலாறு புதைந்து போயுள்ளது: அந்தப் புறக்கணிக்கப்பட்ட வரலாற்றை வெளிக்கொணர்வதே இன்றைய முதல் தேவை என்ற புரிதலுடன் தீவிரமாக இயங்கி வருபவர் பேராசிரியர் தொ.பரமசிவன். அந்த வரலாற்றை அடித்தட்டு மக்கள் வழக்காறுகள் மூலமே மீட்டெடுக்க முடியும் என்ற மனப்போக்குடன் உறுதியாகச் செயல்பட்டு வரும் தொ.பரமசிவன் தமிழக தீவிர வாசிப்பு வட்டாரத்தால் தொ.ப. என எளிமையாக அழைக்கப்படுகிறார். எந்தவிதமான அலங்கார, அணிவகுப்பு அடைமொழிகளுக்குள்ளும் அடை படாத தொ.ப., அடிப்படையில் திராவிட இயக்க, பெரியாரியக் கொள்கையைச் சார்ந்தவர் என்பது ஆச்சரியமான உண்மை.

மதுரைப் பல்கலையில் "அழகர்கோயில்" குறித்து 30 ஆண்டு களுக்கு முன்னர் மேற்கொண்ட முனைவர்பட்ட ஆய்வு முக்கியத்துவம் வாய்ந்தது.அதுவரை எழுதப்பட்ட புத்தகங்கள் சார்ந்தே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப்பட்ட ஆய்வேடுகளுக்கு மத்தியில் களஆய்வுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட அவரது ஆய்வேடு பல்கலைக்கழக ஆய்வு வட்டாரத்தில் புதிய ஒளியைப் பாய்ச்சியது.தொடர்ந்து 30 ஆண்டுகளுக்கும் மேலாகக் கள ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். தனது உடல்நிலை காரணமாகத் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பதவியில் இருந்து



விருப்பஓய்வு பெற்றாலும் களப்பணி ஆய்வுகளில் இருந்து ஒரு நொடியும் விலகாது ஈடுபட்டு வருகிறார். இனவரைவியல் குறித்த ஆய்வுகள் அவரது சிறப்புத்தன்மையாகும். இடைநிலை, கீழ்நிலை மக்களின் நம்பிக்கைகள், சடங்குகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் போன்ற நாட்டார் வழக்காறுகளில் உண்மையான வரலாறு புதைந்துள்ளதைத் தமது கூரிய நுண்ணுணர்வுகள் மூலம் வெளிப்படுத்தி ஆச்சரியப்பட வைக்கிறார். உண்மை என்பது மிக எளிய வழிகளில்தான் ஊற்றெடுக்கிறது. 'அழகர் கோயில்', 'அறியப்படாத தமிழகம்', 'பண்பாட்டு அசைவுகள்', 'இந்து தேசியம்', 'தெய்வம் என்றொரு சித்தமாகி...' உள்ளிட்ட பல முக்கிய புத்தகங்களுக்குச் சொந்தக் காரரான தொ.ப. தற்போது பாளையங்கோட்டை குறித்த உள்ளூர் வரலாற்றை முழுமையாக எழுதும் ஆய்வுப்பணியில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். அவருடைய மணிவிழாவினை திருநெல்வேலி இலக்கிய நண்பர்கள் அண்மையில் கோலாகலமாகக் கொண்டாடி யுள்ளனர். அவரது மணிவிழாவினையொட்டி அவரது வீட்டில் நடந்த சந்திப்பு இது. அவருடன் செலவிடப்படும் ஒவ்வொரு நொடியும் வரலாறு குறித்த மாயையை அகற்றுகிறது. அவருடன் மேற்கொண்ட மிக இயல்பான உரையாடலில் இருந்து...

கடந்த 30 ஆண்டுகால தமிழ் இலக்கியச் சூழலில் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. தலித் கலைஇலக்கியச் செயல்பாடுகள், பெண்ணிய விழுமியங்கள் முன்னிறுத்தப்படுதல், வரலாறு குறித்த புரிதல்கள் என மாறிவந்துள்ள இச்சூழலில் நாட்டார் வழக்காற்றியல், தொல்லியல், இனவரைவு ஆய்வுகள் ஆகிய துறைகள் முக்கியப் பங்களிப்பு ஆற்றியுள்ளன. தொல்லியல் ஆவணங்களும், உள்ளூர் வரலாறுகளும் முக்கியத்துவம் பெறும் பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுக்கும் காலகட்டமாக இது இருக்கிறது.இதில் உங்களது பங்களிப்பு புதிய ஒளியைப் பாய்ச்சுவதாகக் கருதப்படுகிறது.

தொ.பரமசிவன்: அண்மையில் என்னைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஐரோப்பிய முறையியலைத் தள்ளி வைத்துவிட்டு எழுதுகிறார் என்று எழுதியிருந்தார்கள். அதுதான். நான் எடுத்துக் கொண்டுள்ள முறையியல்; வேறு ஒன்றுமில்லை. கிராமத்துல, கம்மாய்க் கரை யிலயோ, கோயில் வாசல்லயோ பெரிசுகள் உக்காந்துகொண்டு பேசிக்கொண்டிருக்கும் இல்லையா, அதுதான் என்னோட முறையியல். அதை all pervasive என்பார்கள்.

ஒரு மணி நேரம் அந்தப் பெரிசுகள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டாக்க, ஒரு மரத்தப் பத்தி பேசுவாங்க, வாழ்க்கையோட எத்திக்ஸ் பத்தி பேசுவாங்க, வெள்ளைக்காரனப் பத்திப் பேசுவாங்க, நவாப்

காலம் பத்திப் பேசுவாங்க... சயன்டிபிக்கா பேசுவாங்கன்னு சொல்ல முடியாது. Lore என்று சொல்லக்கூடிய வழக்காறுகள் இருக்கு பாருங்க. அவர்கள் வழக்காறுகளில் பல விசயங்களைத் தழுவுகிறார்கள். இந்தப் பல விசயங்களையும் தழுவிப் பார்க்கிற போதுதான், எல்லாக் கோணங் களிலும் ஊன்றிப் பார்க்க முடிகிறது.

யூரோப்பியன் சிஸ்டமாலஜி என்னன்னா Profile-ம்பான். அதனால ஒரு பக்கப் பார்வை மட்டும்தான் நமக்குக் கிடைக்கும், வரலாறுன்னா எந்த அரசன் எத்தனை வருசம் ஆண்டான்னு. அது அல்ல. அவன் காலத்தில் என்ன நிகழ்ந்தது? முக்கியமான செய்தி என்ன? அவன் எந்தப் பக்கம் ஆட்சி செய்தான்? இதெப் பார்க்கணும்னா Loreதான். Lore ன்னா வழக்காறுதான். இந்த வழக்காறுக்குள்ள நிறைய விஷயங்கள் புதைஞ்சு கிடக்குது. அதத் தோண்டிதான் எடுக்கணும்.

அதில் புனைவுகளும் சேர்ந்துதானே இருக்கிறது? தரவுகளை எப்படிப் பிரிப்பது?

தொ.பரமசிவன்: இல்லீங்க. அதுல புனைவு இருக்காது. உண்மை புதைஞ்சு போயிருக்கும். அது ரீடிங்கற கணக்குல வராது. ஈசைபர் மெண்ட் அப்படிங்கற கணக்குலதான் வரும். டென்னிஸ் பந்துல ஒரு கோடு போட்டிருப்பான். அது எங்க தொடங்குது, எங்க முடியுதுன்னு தெரியாது. பிரிக்கிறது பெரிய கஷ்டம். அப்படித்தான் பார்க்கணும். இந்த வழக்காறுல உள்ளதுதான் 'பாப்பானுக்கு முந்தி பறையன்'ங்கறது. அது ஒரு சமூக நிகழ்வுதான். பிராமணர்கள் வருவதற்கு முன் யார் Priestஆக இருந்தாங்கங்கற கேள்விக்கு அது பதில் சொல்லுது. அவர்கள் வருவதற்கு முன் பறையர்கள்தான் Priestஆக இருந்தனர். 'தம்பி உடையார்'னு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறேன். எனக்கு ரொம்ப நாளா ஒரு கேள்வி. நான் பரமக்குடியில் இருந்தபோது கிழக்கரை முஸ்லிம்கிட்ட மட்டும் ஒரு வித்தியாசமான பெயர் வழக்கு இருந்ததக் கவனிச்சிருக்கேன். செய்கு தம்பி, முகமது தம்பி, சதக்கு தம்பினு பெயர் வைச்சிருப்பாங்க. இந்தக் கேள்விக்கு ரெம்ப நாளா எனக்கு விடை கிடைக்கல. திரும்பத் திரும்பத் தோண்டிப் பார்த்தா, சீதக்காதி அப்பா பேரு பெரிய தம்பி மரைக்காயர். யாருக்குப் பெரிய தம்பி? இவர் தம்பின்னா அண்ணன் யாருன்னு வரலாற்று ரீதியாப் பார்த்தா, விஜய ரகுநாத பெரிய தம்பி அவர் பேரு. அப்படின்னா சேதுபதி தம்பி. சேதுபதிக்கு எப்படி தம்பியானாங்கன்னு பாத்தா, போகலூர்ல இருந்த மண் கோட்டைய விட்டுட்டு, இராமநாதபுரத்துல கோட்டை கட்டறதுக்குப் பணம் கொடுத்து கிழக்க அழைச்சிட்டு வந்திருக்காங்க,



கீழக்கரை மரைக்காயர்கள். இதுக்குப் பதிலா என்ன கேக்கிறாங்கன்னா, கடற்கரையின் மேலாதிக்கத்தக் கேக்குறாங்க. சங்கு வியாபாரம் செய்வது போன்ற உரிமைகள வாங்கிக்கிறாங்க. இப்படி ராஜா, தன்ன நிலைநிறுத்திய தம்பிங்கிறதால தம்பி பட்டம் கொடுக்கிறாங்க. இன்னமும் போட்டுக்கிட்டே வராங்க. இப்படி ஒன்றையொன்று தோண்டித் தோண்டிப் பார்க்கணும். இப்படிப் பார்த்தால் நிறைய விஷயங்கள் தெரியும். நான் இப்படித்தான் பாத்துக்கிட்டிருக்கிறேன்; எழுதிக்கிட்டு இருக்கிறேன்.

இதற்கான கேள்விகள் உங்களுக்கு எங்கிருந்து எழுகின்றன. இது உங்கள் வாசிப்பு சார்ந்த விஷயமா? அல்லது வேறு ஏதோ தேடல்கள் தொடர்பான விஷயமா?

தொ. பரமசிவன்: வாசிப்பு, மறுவாசிப்பு ரெண்டுந்தான். இதுபோக, இந்த மாதிரி கேள்வி கேட்கிற பழக்கம் எங்கிருந்து வந்ததுன்னா, மயிலை. சீனி. வேங்கடசாமி, ராகவன் பிள்ளை,வானமாமலை இந்த மாதிரி ஆட்கள் மூலம் ஏற்பட்ட பதிவுகள்ல இந்த மாதிரி கேள்விகள் வருது. இந்தக் கேள்விகளுக்கு விடை இல்ல. விடைகளைத் தேடு கிறபோது ஒரு பக்கம் வரலாற்று நிகழ்ச்சிகள்ல விடை இருக்கு. ஒரு பக்கம் வேற இதுகள்ல விடை இருக்கு.

அடிப்படையில் பெரியாரிஸ்டாக இருக்கிற நீங்கள், எப்படி இதுபோன்ற வாசிப்புகளுக்குள் வந்தீர்கள்?

தொ. பரமசிவன்: ஒன்று வளர்ப்புன்னு சொல்லணும். நான் பிறந்து வளர்ந்த சூழல் இருக்கே அது.சமய நல்லிணக்கம் என்பது பெரியார் படிச்சு எனக்கு வரவில்லை. அது இயல்பாகவே என் வீட்டில் இருந்தது. இந்த ஊர்ல எல்லா இதயும் பார்க்கலாம். சவேரியார் கோயில் திருநாள்ல போயிப் பார்த்திங்கன்னா, மற்ற மதத்துக்காரங்க கூட்டம் நிறைய இருக்கும். கிறிஸ்துமஸ்சுக்குப் பாலகன் பிறப்புன்னு பிறந்த குழந்தையப் பார்க்கப்போற ஒரு கலாசாரம் இந்த ஊருல இருக்கு. உங்க வீட்டுல புதுசா ஒரு குழந்தை பிறந்திருந்துச்சுன்னா நான் சோப்பு, பவுடர், பால் பவுடர் டின் வாங்கிக்கிட்டுப் பார்க்க வருவது போல எல்லாச் சாதி மக்களும் பாலகன் பிறப்பு குடில் அமைக்கப்பட்டிருக்கிற இடத்துக்குப் போவாங்க. 'பாலகன் பிறந்துருக்கான் பாருங்க, பாலகன் பிறந்திருக்கான் பாருங்க'ன்னு போவாங்க. இந்தக் கலாசாரம் மத எல்லைகளைத் தாண்டிப் பாய்கிறது. இந்த மாதிரி சமய நல்லிணக்கம்ங்கிறது, சகிப்புத் தன்மைங்கிறதே

ஒரு கெட்ட வார்த்தையாயிட்டுது. இந்தச் சமய நல்லிணக்கம் யாருகிட்ட இயல்பா இருக்குதுன்னா பெண்களிடம் இருக்கிறது. நம்மில் சரிபாதியாகப் பெண்கள் இருக்கிறதாலதான் இங்க மதக் கலவரங்கள் இல்ல. ஒரு குழந்த பிறந்தால் பார்க்கணும்ங்கிற கலா சாரத்துல சாதியோ, மதமோ ஆபரேட் ஆகறதில்ல. இது தமிழ்நாட்டின் தென்பகுதியில் இருக்கு. ஏன்னா தென்பகுதி கல்சுரலா பெரிய சிரமங்களுக்கு ஆளாகாத பகுதி. undisturbed இந்த மாதிரியான சூழல்ல... ஊர், தெரு, வீடு எல்லாமே இயல்பாகவே சமூக நல்லிணக் கத்தப் பேணுகிற, விரும்புகிற சூழல்ல வளர்ந்தது ஒரு முக்கியக் காரணம். அதுல பாளையங்கோட்டைக்கு முக்கியப் பங்கு இருக்கு.

இந்த மாதிரியான சூழல் தமிழ்நாடு முழுவதும் இல்லையா? இல்லை என்றால் ஏன் இல்லாமப் போச்சு?

தொ. பரமசிவன்: இங்க இருக்கு. தமிழ்நாடு பூரா இருக்கா இல்லையான்னு எனக்குச் சொல்லத் தெரியல. ஏன்னா என்னுடைய களஆய்வுகள் தென் மாவட்டங்களில்தான். MRT என்று சொல்லப் படுகிற மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் தான் என் களஆய்வுகள் இருந்துள்ளது.

உங்கள் முதல் களஆய்வு மதுரை, அழகர்கோயில் பற்றிய கள ஆய்வுதானா?

தொ. பரமசிவன்: ஆமா. அதுல நான் எடுத்துக்கிட்டது வந்து.. கோயில்னா ஒரு சட்டம் வச்சிருந்தாங்க. Paradigm இருந்தது. நான் அத எடுக்கல. ஒரு கோயிலுக்கும் நாலு சாதிகளுக்கும் உள்ள உறவ எடுத்துக் கிட்டேன். சித்திரைத் திருவிழாவில பார்த்தால், எல்லாச் சாதிகளும் வராங்க. இப்ப, ஆகமம் உள்ள கோயில்கள் இருக்கு; ஆகமங்கள் இல்லாத கோயில்களும் இருக்கு. அடித்தட்டு மக்கள் மத்தியில் ஆகமங்களுக்கு எந்த மரியாதையும் கிடையாது. அப்படிப் பட்ட மக்கள் ஏன் சித்திரைத் திருவிழாவில் கூட்டம் கூடுகிறார்கள் என்பதுதான் நம் கேள்வி. அந்த மக்கள் கள்ளர், பறையர், தாழ்த்தப் பட்ட மக்கள், இடையர் ஆகிய நான்கு சாதிகளுக்கும் அந்தக் கோயிலுக்கும் உள்ள உறவுதான் என் ஆய்வு. அப்படிப் போகும் போது சடங்கு களைப் பற்றிய நம்பிக்கைகள், பழமொழிகள், கல்வெட்டுகள் எல்லாம் பயன்பட்டது.

மதுரை அழகர் கோயிலில் உள்ள கள்ளழகர் கோயில் போலவே, திருவில்லிப் புத்தூர் அருகே திருவண்ணாமலையிலும் ஒரு கோயில் இருக்கிறதே?



தொ.பரமசிவன்: அது மதுரை அழகர்கோயிலின் Replica. ஒரு ஊரோ, கோயிலோ பெரிய அளவுக்கு முக்கியத்துவம் பெறும்போது அது மாதிரி Replicaக்கள் உருவாகும். டூப்ளிகேட். காசின்னு ஒரு ஊரப் பார்த்து தென்காசின்னு பேர் வைச்சாங்கல்ல அத மாதிரி.

இந்த இரு கோயில்களிலும் சில குறிப்பிடத்தக்க வழிபாட்டு முறைகள்கூட ஒரே மாதிரி உள்ளதே?

தொ.பரமசிவன்: வைணவம் நாட்டார் கோயில்களில் நிறைய இருக்கு. அந்த வகையில் மதுரை கள்ளழகர் கோயில்லயும், இங்கயும் வழிபாட்டு முறைகள் ஒரே மாதிரி இருக்கலாம். தமிழ்நாட்டில் அரசர்கள் வைணவத்தை ஆதரிக்கவில்லை. சோழர்கள் சைவத்தைத் தான் ஆதரித்தார்கள். வைணவத்தை விரட்டினார்கள். அதையும் மீறி வைணவம் எப்படித் தாக்குப் பிடிச்சுதுன்னா நாட்டார் மக்களாலதான். அதாவது நான் பிராமின் மக்களைக் கோயிலுக்குள் வரவழைச்சது மூலமா வைணவம் தாக்குப் பிடிச்சுது. நாட்டார் மக்களுடன் சமரசம் செய்துகொண்டு வாழத் தொடங்கியது. இது 12, 13ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு. மேலோர் மரபுகள் வறுமைப் படும்போது கீழோர் மரபுகளுடன் எல்லா வகைகளிலும் சமரசம் செய்துகொண்டு மேலும் வாழ்கிறது. இவ்வாறு வைணவம் சிக்கல் பட்டபோது கீழோர் மரபுகளுடன் சமரசம் செய்தது, சைவம் அவ்வாறு செய்யவில்லை. இது தொடர்பாக ‘வைணவம் எவ்வாறு நாட்டார் கூறுகளை வரவு வைத்துக்கொண்டது’ என ஒரு கட்டுரையும், ‘தென்கலை வைணவத்தில் ஒரு கலகக் குரல்’ என ஒரு கட்டுரையும் எழுதியுள்ளேன்.

தமிழ்நாட்டில் ராமஅவதாரத்துக்கு மரியாதை கிடையாது. கிருஷ்ண அவதாரந்தான். இப்ப மதவாத சக்திகள் ராமனைத்தான் கையில் எடுக்குது. ‘ஜெய் ராம்’, ‘ஜெய் ராம்’ங்கிறாங்க. கிருஷ்ணனைக் கையில் எடுக்க மாட்டாங்க. ஏன்னா ராமன்தான் அரச வம்சத்தைச் சேர்ந்தவன். அரசக் கல்வி கற்றவன். ஆயுதப் பயிற்சி பெற்றவன். கையில் ஆயுதம் தாங்கியவன். கிருஷ்ண அவதாரம் பார்த்தீங்கன்னா ஏழைக்குடியில் பிறந்தவன், அழுக்கானவன், திருடுபவன், பொய் சொல்பவன், பெண்களோடு கூடிக் குலாவுபவன். இதற்கு மூலம் பாகவதக் கதைகள். பாகவதம் மதம்தான் முதலில் உருவாகிறது. அதிலிருந்து வைணவம் உருவாகிறது. இந்தக் கதைகளைத்தான் ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள். ராமனைப் பற்றி அதிகமாகப்

பாடியதில்லை. கிருஷ்ணாவதாரத்தின் பாகவதக் கதைகள்தான் ஆழ்வார் பாசுரங்களில் வருகின்றன. குறிப்பாக, பகவத்கீதையைப் பற்றி ஆழ்வார்கள் பேசவே இல்லை என்பது கவனிக்கத்தக்கது. ஒரே ஒருவர் போகிறபோக்கில் குறிப்பாகக் குறிப்பிடுகிறார். அதையும் தேடிக் கண்டுபிடிச்சாதான் உண்டு. அவ்வளவுதான். பகவத்கீதை கொண்டாட்டத்துக்குரிய ஒரு நூல் இல்ல.

அப்போ 18ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் வந்த சமய சீர்திருத்தவாதிகள் ஏன் வைணவத்தைத் தூக்கிப் பிடிக்கவில்லை?

தொ. பரமசிவன்: ஒன்று, அது மிகவும் சிறுபான்மைநலனாகிப் போச்சு. இன்னொன்று, அதைவிட நேரடியாக ஆங்கிலேய முறை யியலைப் பின்பற்றி விட்டார்கள். பெரியார் உட்பட எல்லோரும் ஐரோப்பிய நாகரிகத்தையே எடுத்துக்கொண்டார்கள்.

தொல்லியல் கூறுகளை இன்று இடதுசாரிகள் கையாள்கிறார்கள். அவர்கள் அதை எவ்வாறு பார்க்கிறார்கள்?

தொ. பரமசிவன்: இன்னும் சரியாகச் செய்யவில்லை. உதாரண மாகச் 'சாமியாட்டம்' என்று ஒரு நாட்டார் கலை இருக்கிறது. ஐரோப்பிய முறையியலைப் படித்தவர்கள், பெரியாரைப் படித்தவர்கள் எல்லாரும் 'சாமியாட்டம்' ஒரு காட்டுமிராண்டித்தனம் என்றுதான் கூறுவார்கள். ஆனா அதைக் கூர்ந்து கவனிச்சா சாமியாட்டம் பழைய போர் நடனத்தின் எச்சப்பாடு என்பது தெரியும். அதாவது ஒவ்வொரு சமூகத்திற்கும் வார் டான்ஸஸ், பாஸ்டரர் டான்ஸஸ் என்று உண்டு. தமிழ்ச் சமூகத்தின் வார் டான்ஸின் மிச்ச சொச்சம் தான் சாமியாட்டம். இப்படிப் பார்ப்பதற்கு இன்னும் நாம் பழகலை. சாமியாட்டம் நடந்தாலே விலகி ஓடுவார்கள். சாமியாட்டம் அந்தந்த வட்டார வரலாறுகளோடு தொடர்புடையது. சில இடங்களில் ஆயுதம் தாங்கிஇருக்கும். சில இடங்களில் அது இல்லாம இருக்கும். ஆயுதம் தாங்கி இருந்தால் அது என்ன வகையான ஆயுதம்? அத எதுக்குப் பயன்படுத்தறாங்கன்னு பார்க்கணும். அப்படி மக்கள் கலாசாரத்தோட தம்மை முழுமையாக அடையாளப்படுத்திக் கொள்ளும் பார்வை இன்னும் இடதுசாரிகளுக்கு வரல்ல. சாமி யாட்டம் வார்டான்ஸுன்னே அவங்க நினைக்கல, இல்லயா? அத மாதிரி விளையாட்டுகள். இப்ப பல்லாங்குழி பற்றி ஒரு கட்டுரை எழுதினேன். அதப் படிச்சிட்டு இடதுசாரிகள் எல்லாம் தலையில தூக்கிக் கொண்டாடப் போறாங்கன்னு நினைச்சேன். ஆனா எந்த



இடதுசாரியும் அதைப் படிக்கல. அது பிரைவேட் பிராபர்டீஸைக் கலாசாரரீதியாக நியாயப்படுத்துகிற ஒரு விளையாட்டு. உனக்கு ஏழு குழி, எனக்கு ஏழு குழி. குழிக்கு அஞ்சு முத்துகள் என இந்த விளையாட்டு சமத்தன்மையோடு தொடங்குகிறது. மீண்டும் குழிக்கு அஞ்சு முத்துகள் என்ற நிலையே ஏற்படக்கூடாது என்பதுதான் விதி. மேடு பள்ளமாவதும், பள்ளம் மேடாவதும் விளையாட்டு. தோற்றவன் நான் தோற்றுப் போனேன் என்றே நினைக்க மாட்டான். விதி என்னைத் தோற்கடித்து விட்டது என்றுதான் கூறுவான். நீ ஏன் சொத்தைப் பறித்துக் கொண்டாய் என்று கூறமாட்டான். விதிதான் என் சொத்தை அபகரித்துக் கொண்டது என்றுதான் நினைப்பான். தோற்றுப்போனவன் கடைசியில் கஞ்சி குடிக்கணும். 'கஞ்சி குடி, கஞ்சி குடி' என்பார்கள். தோற்றவனுக்கு அவர்கள் மீது கோபமே வராது. இந்த ஒழுங்குகளைக் கலாசாரரீதியாக உருவாக்கு வதுதான் விளையாட்டு. இதை ஒவ்வொரு கட்டமாகப் பிரிச்சு எழுதி யிருந்தேன். இதை இடதுசாரிகளால் புரிஞ்சுகொள்ள முடியவில்லை.

உள்ளூர் வரலாறுகளை எழுதும் முனைப்பு இன்று ஏற்பட்டுள்ளது. அதற்கான ஆதாரங்களை எவ்வாறு தேடுவது?

தொ.பரமசிவன்: அந்த வட்டார நிலவியல், அந்த வட்டார வரலாறு, அந்த வட்டாரத்திலுள்ள நிறுவனங்கள்... பாளையங் கோட்டை வரலாற்றை எழுதினால் Blind School பத்தி பேசாம இருக்க முடியுமா? 100 ஆண்டுதான் ஆகிறது என்றாலும் தமிழ்நாட்டில் பார்வையற்றவர்களுக்காக உருவாக்கப்பட்ட முதல் பள்ளி... இந்தியா விலேயே பெரிய பள்ளிக்கூடம். 1903ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதல் முறையாக Brailey எழுத்தில் புத்தகம் வெளியிட்டான். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனத்தப் பத்தி எழுதாம இருக்க முடியுமா? இதுபோன்ற வட்டார நிறுவனங்கள், சடங்குகள், விழாக்கள் இதை யெல்லாம் பார்க்க வேண்டியிருக்கு.

நீங்க பாளையங்கோட்டை வரலாறு எழுதுகிறீர்கள் இல்லையா? திருநெல்வேலி, பாளையங்கோட்டை இரண்டும் அடுத்தடுத்த ஊர்கள் என்றாலும் வேறு, வேறு அடையாளங்களைக் கொண்டதாகத்தான் எப்போதும் இருந்திருக்கிறதா? அல்லது கிறித்துவத்தின் வருகைக்குப் பின்னர் இந்தத் தனி அடையாளங்களைப் பெற்றதா?

தொ.பரமசிவன்: காலனியஆட்சி வந்த பிறகுதான் தனித் தனியானது. அதுக்கு முன்னாடி ஒன்னாத்தான் இருந்தது. காலனி

யாட்சி வந்தபிறகு கூட சாதி வேற்றுமைகள் கடுமையாக இருந்தன. (இரண்டு நகரங்களின் அடையாளங்களைப் பிரிக்கும் முக்கிய அம்சமாக இது விளங்கியது.) குறிப்பாகப் பிராமண ஆதிக்கம் பின்வாங்கிய பின்னரும் வெள்ளாள சாதி ஆதிக்கம் வந்து சேர்ந்தது. சாதி வேற்றுமையைப் பாதுகாப்பதற்காக வெள்ளாளர்கள் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

வெள்ளாளர்கள் கிறித்துவத்துக்குள்ளும் வந்தார்கள் இல்லையா?

தொ. பரமசிவன்: அங்கயும் போயி எங்க சாதி ஆசாரம் உயர்வானதுன்னு சொல்லிருக்காங்க. அவன் முடியாதுன்னுட்டான். இதனால கிறித்துவத்தில் அவர்கள் நீண்டகாலம் வெற்றியடைய முடியவில்லை. 'வெள்ளாள ஆசாரமும் குருமார் போதகமும்' என்று பாதிக்கப்பட்டவர்கள் ஒரு புத்தகம் எழுதியிருக்காங்க. கிறித்தவ னானாலும் வெள்ளாளர் வெள்ளாளர்தான். கோயிலில் நாடார் களுடன் சமமாக உட்கார முடியாதுன்னு சொல்லியிருக்காங்க. கல்லறையும் தனியா கட்டினாங்க. கச்சகட்டி பிள்ளைமார்களுக்கு எனத் தனிக் கல்லறைத் தோட்டம் உருவாக்குனாங்க. இதெல்லாம் நடந்திருக்கு.

சீர்திருத்தக் கிறித்தவம் வந்த பிறகுதான் இதெல்லாம் மாறியதா?

தொ. பரமசிவன்: 18, 19ஆம் நூற்றாண்டுகள்ல தாங்க முடியாத நெருக்கடி இருந்தது. நெல்லை மாவட்டத்துல ஏராளமான நாடார் கள் கிறித்துவத்துக்குப் போறாங்க. இந்த அளவுக்கு வேற எந்த மாவட்டத்துலயும் ஒரு சாதியினர் கிறித்துவத்துக்கோ, இஸ்லாத்துக்கோ போனதில்ல. ஏன் போனாங்கன்னா வரலாற்றில் வழக்கமா சொல்கிற பிராமண ஆதிக்கம் இங்க கிடையாது. ஏன்னா இவங்க வாழ்ந்த நிலப்பகுதியில் பிராமணர்களே கிடையாது. வெள்ளாளசாதி ஆதிக்கம் தான் அதிகம் நிலவியது. அத எதுத்துதான் அவங்க போராடுனாங்க. உள்ளூர் வரலாறு எழுதும்போது இதமாதிரி பல தரவுகளுக்கான ஆதாரங்களத் தேடி நாம போகவேண்டியிருக்கு.

இனவரைவியல் ஆய்வுகள் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை?

தொ. பரமசிவன்: இன்றைக்கு சாதிகளின் வரலாற்றைப் பத்தி ஆராய்வதுதான் இனவரைவியல் ஆய்வுகள் எனப்படுது. சாதிகள் உண்மையா? பொய்யா என ஆராய்ச்சியாளர்கள்கிட்ட கேட்டா, சாதி உண்மையுமல்ல, பொய்யுமல்ல என்பார்கள். ஏன்னா பரம்பரையா



இந்த மண்ணில் வாழ்ந்த மக்கள்தானே எந்த ஒரு சாதியினரும். எனவே, மண்ணின் வரலாறு அவங்க சாதிக்குள்ள பாய்ந்திருக்கும், அவங்க வரலாறு மண்ணின் வரலாற்றுக்குள் பாய்ந்திருக்கும், இல்லயா? இதுதான் இனவரைவியல் ஆய்வுகள். ஆராய்ச்சியாளன பொறுத்தமட்டுல, சாதி உண்மையுமல்ல, பொய்யுமல்ல.

ஆனால்,தென் அமெரிக்கா போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இனவரைவியல் ஆய்வுகளுக்கும், இங்கு நடைபெறும் இனவரைவியல் ஆய்வு களுக்கும் இடையே வேறுபாடுகள் உண்டல்லவா?

தொ.பரமசிவன்: ஆமா.சாதி என்பது இந்தியச் சமூகத்துக்கு மட்டும் Peculiar ஆனது.

சாதிகளில் உட்கூறுகளும் இருக்கின்றன...

தொ.பரமசிவன்: அடிப்படையா சாதி என்பது உள்வட்டத் திருமணங்களுடைய வரம்பு சார்ந்தது. எதுவரை உங்க சாதி இருக்கும்னா எது வரைக்கும் நீங்க கலியாணம் பண்ணிக்கலாமோ அது வரைக்கும் உங்க சாதி. அந்தக் காலத்தில பாளையங்கோட்டையில இருந்து சென்னைக்குப் பெண் எடுக்கவோ, கொடுக்கவோ முடியாது. ஏன், இங்கிருந்து 20, 30 மைல்கள் தாண்டிக்கூட பெண் எடுத்ததுமில்ல, கொடுத்ததுமில்ல. ஏன்னா, ஒரு பொருளாதார யூனிட்டுங்கறது 10, 15 மைல்களுக்கு உள்ளதான் இருக்கும். எல்லாப் போக்குவரத்தும் அதுக்கு உள்ளதான் வச்சுக்க முடியும். சாதிகளில் உட்பிரிவுகள் என்பது காலனி ஆட்சிக்கு வெகுகாலத்துக்கு முன்பு உருவாகியிருக்கு. தொழில்ரீதியாக் கீழ போகும்போது அவங்க சாதியிலயே கீழானவங்க ஆகறாங்க. இவ்வாறு ஒரே சாதியில் பல தொழில் பார்ப்பவர்கள் பல உள்சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். உழவுத் தொழில் செய்கிறவர், மருத்துவம் பார்க்கிறவர், பூசாரித் தொழில் பார்க்கிறவர், சுண்ணாம்புத் தொழில் செய்கிறவர், இறந்த மாடுகளைக் கொண்டு டானரி தொழிலில் ஈடுபடுகிறவர் என ஒரே சாதியில் பல உட்பிரிவுகளைப் பார்க்கிறோம் இல்லையா? அதைப் போலத்தான்.

இது போன்ற உழைக்கும் சாதியினருக்கு எழுத்தறிவு என்பது எப்போதும் இருந்தது கிடையாதா?

தொ. பரமசிவன்: எழுத்தறிவு என்பது அதிகாரம் சார்ந்தது இல்லையா? அது கீழ் சாதியினருக்கு அனுமதிக்கப்பட்டதில்லை. நில ஆவணங்கள் சம்பந்தப்பட்ட கணக்கப்பிள்ளைகள் எப்போதும்

எழுத்தறிவு பெற்றவர்களாக இருந்துள்ளனர். அதிகாரிகள் எழுத்தறிவு பெற்றவர்கள். மற்ற மக்கள் கையில் தொழில்நுட்ப அறிவு இருந்த போதும் எழுத்தறிவு பெறாதவர்கள். நமது பாரம்பரிய விவசாயம் குறித்த அறிவுகள் எழுத்தில் ஒருபோதும் பதிவு செய்யப்பட்டதில்லை. நாம் வென்ற இடமும் தோற்ற இடமும் அதுதான். தொழில்நுட்ப அறிவு எழுத்தில் வராமல் நினைவுகளிலேயே தங்கித் தங்கி வந்திருக்கிறது. இப்படித்தான், பெருவாரியான மக்கள் எழுத்து தெரியாத குருடர்களாகத்தான் இருந்துள்ளனர்.

அடித்தட்டு மக்கள் வரலாறு என்பது நினைவுகளில்தான் தொடர்ந்து வந்துள்ளது.

தொ. பரமசிவன்: ஆமா. ஆனா, நிலஉரிமையைப் பற்றிப் பேசுகிற போது, Possession முக்கியமாகக் கருதுனாங்க. அதாவது அனுபவ பாத்தியதை என்பது முக்கியமாக இருந்துள்ளது.

தமிழ் அடையாளங்களை முன்னிறுத்துவதில், தேடிக் கண்டுபிடிச்சுப் பதிப்பிப்பது முன்பு பதிப்புத்துறையில் காணப்பட்டது. அதுபோல தொல்லியல்களை, நாட்டார் வழக்காறுகளைப் பதிப்புகளாக்கும் முயற்சி உள்ளதா?

தொ. பரமசிவன்: இல்லை. அதற்கான நிறுவனமோ, அமைப்போ இதுவரை ஏற்படல. நாட்டார் வழக்காற்றியலில் நாட்டார் நம்பிக்கைகள், திருவிழாக்கள் என்று கொஞ்சம் பதிவு பண்றாங்க. ஆனா, ஒட்டு மொத்தமான தமிழ் அடையாளம் கருதி மேற்கொள்ளப்படும் அமைப்போ, நிறுவன முயற்சிகளோ இல்ல. நிறுவனங்களால்தான் இதைச் செய்யமுடியும். எம்.ஐ.டி.எஸ்.மாதிரியான ஆட்கள் கொஞ்சம் கொஞ்சம் வர்றாங்க. 'அறியப்படாத தமிழகம்' பற்றி முழுமையாகக் கொண்டு வர வேண்டும். இடதுசாரிகள்தான் இதைச் செய்யமுடியும். அரசு இதையெல்லாம் கண்டுகொள்ளவே கொள்ளாது. இன்னமும் சாதியத்தில் உயிர் கொண்டுள்ளதால் அது கண்டு கொள்ளாது. அடையாளம் பற்றிய தன்னுணர்ச்சி பீரோகிரட்ஸ்க்குக் கிடையாது. இருந்திருந்தா உயிர்ப்பலி தடைச் சட்டத்தக் கொண்டு வந்திருக்க மாட்டாங்க.

இதில் பெரியாரிஸ்டுகள் செய்த தவறு என்ன?

தொ. பரமசிவன்: தவறு செய்தாங்கன்னு எந்த அடிப்படையில் முடிவுக்கு வர்றீங்க?



தமிழ் அடையாளத்தை முன்னிறுத்தி வளர்ந்த திராவிடக் கட்சிகள் கண்ணகி போன்ற அடையாளங்களுடன் தன்னைச் சுருக்கிக் கொண்டன இல்லையா? அடித்தட்டு மக்கள் வரலாறுகளை நோக்கி அது விரிவடைந்ததா?

தொ. பரமசிவன்: உயிர்ப்பலி தடைச்சட்டத்தைக் கருணாநிதி கொண்டு வந்திருக்கவே மாட்டார். அந்த அம்மா இருக்கப் போயி தான் கொண்டு வந்தது. அரசு மட்டத்தில், பீரோகிரட்கள் மத்தியில் இன்னமும் மேட்டுக்குடி மனோபாவம் போகவில்லை. அரசு உணவாக இன்னமும் சைவ உணவுதானே உள்ளது. 92 சதவீத மக்களின் உணவான அசைவ உணவு அரசு மட்டத்தில் புறக்கணிக்கப்படுகிறதே?

இந்த மட்டத்தில் தி.மு.க. சமரசம் செய்துகொண்டதாகக் கூறலாமா?

தொ. பரமசிவன்: ஆமா, சமரசம்தான் செய்துள்ளது. ஆனாலும், உயிர்ப்பலி தடைச்சட்டம் போன்றவைகளைத் தி.மு.க. கொண்டு வராது என்று நினைக்கிறேன்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில், திராவிட இயக்க விழுமியங்கள் எந்த அளவுக்கு எதிர்காலத்தில் காக்கப்படும் என்ற அச்சம் எழுந்துள்ளதே?

தொ. பரமசிவன்: ஒரு காலத்தில் வேதங்கள், சாத்திரங்கள் அடிமைப்படுத்தியது போல இப்போது மீடியா நம்மை அடிமைப் படுத்தியிருக்கு. இதுக்குக் காரணம் பன்னாட்டு மூலதனம். இன்றைய பிரச்சனை இந்தியாவோட முடிஞ்சு போற பிரச்சனையில்ல. தமிழ் நாட்டின் வெப்பச் சூழலுக்கு அரைக்கால் சட்டைதான் சரியான ஆடை. அப்படீன்னா அரைக்கால் சட்டையை நாகரிகமாக்குவதற்கு மலேசியாவில் அரைக்கால் சட்டையைக் கொண்டு வராங்க. சபாரி ஆடையிலேயே முழுக்கால் சட்டையில்லாமல் அரைக்கால் சட்டை போடறாங்க. தென் அமெரிக்க சட்டையைக் கேலி பண்ணி நாலு நாடகம், வடக்கத்தி ஜவுளி வியாபாரிகள் ரேமண்ட்ஸ், விமல் போன்றவர்களுக்காகப் போடுவார்கள். முழுக்கால் சட்டையை ஆதரிக்கவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருக்கிறது.

அந்த நபர்களை 'டவுசர்' என்றுகூட கேலி செய்வார்கள்.

தொ. பரமசிவன்: ஜவுளித் துறையில் ஏற்படுத்தப்பட்ட மூல தனத்துக்கு அது பாதிப்பு ஏற்படுத்தும். அரைக்கால் சட்டை போட ஆரம்பிச்சிட்டா முழுக்கால் சட்டை நின்னு போகும், இல்லையா? அதனால அதச் செய்ய விட மாட்டாங்க. இன்னக்கி பன்னாட்டு

மூலதனத்துக்குத் தேவையான சந்தையை உருவாக்குவதில்தான், கலைஇலக்கியத் துறை உட்பட அனைத்துத் துறைகளும் ஈடுபட்டிருக்கு.

பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுப்பது என்பது உலகமய மாக்கலுக்கு எதிரான போராட்டமாகத்தான் முடியுமா?

தொ. பரமசிவன்: ஆமா. அது பொருளாதாரரீதியான பண்பாட்டு மரபுகளை மீட்டெடுப்பது. இப்ப, திருநெல்வேலியில யூஸ் அண்ட் த்ரோ பிளாஸ்டிக் கப் தேநீர் விடுதிகளில் பயன்படுத்தக் கூடாதுன்னு ஆணை போட்டு இப்ப எல்லா இடத்துலயும் பேப்பர் கப்புகள் பயன்படுத்துறாங்க. 50 பைசா கூடன்னாலும் பரவாயில்ல. நாங்க எங்க வீட்டு நிகழ்ச்சிகளிலும் பிளாஸ்டிக் கப்புகளப் பயன்படுத்தறது இல்ல. ஏன்னா... பிளாஸ்டிக் கப்புகள் தீண்டாமையைப் பாதுகாக்கிற ஒரு கருவி. அதே போல, நானோ என் நண்பர்களோ எங்கள் வீடு களில் மோர், தயிர் போன்றவற்றுக்கு மண்பாண்டங்களைத்தான் பயன்படுத்துகிறோம். இரட்டை மண்குடங்களை வைத்து நடுவில் தண்ணீர் ஊற்றி வைத்து, காய்கறிகளை வைத்தால் பல நாட்களுக்கு வாடாது. வாழைக்காய், தேங்காய்களைத் தொட்டித் தண்ணியில் போட்டு வைக்கும் பழக்கம் இன்னமும் கிராமங்களில் உள்ளது. பல நாட்கள் ஆனாலும் கெட்டுப் போகாதே. அப்புறம் பிரிட்ஜ் எதற்கு? மார்கழி மாதத்தில் மறுநாள் கோலத்தில் பூ வைப்பதற்கும் முதல் நாளே மொட்டுகளைப் பறித்து வந்து தொட்டித் தண்ணீரில் போட்டுருவாங்க. மறுநாள் காலையில் மலர்ந்து விடுவதில்லையா? நாட்டார் கலைகளைப் போல, நமது பாரம்பரிய மருத்துவமும் முதலில் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. இன்றைக்கு 1200 அலோபதி மருந்துகள் இருக்கிறது என்றால், அதில் ஆயிரம் மருந்து களின் காப்புரிமைகள் பன்னாட்டு நிறுவனங்களிடம் உள்ளது. அதிலும் பல நோய்களுக்கு மருந்தே இல்லை என்கிறான். அதனால நமது பாரம்பரிய மருத்துவ அறிவுகளைக் கொள்ளையடிக்கத் தொடங்கிட்டான். நாம நமது நாட்டார் மருத்துவத்தைப் பாதுகாக்கத் தொடங்கணும்.

அதுபோல நமது சிறு கோயில்கள், நடுகற்கள் குறித்த சொல்கதைகள், பாடல்கள் மறைந்து கொண்டே வருகிறது. அதைச் சொல்வதும், பாடுவதும் கேலியாகப் பார்க்கப்படுகிறது.

தொ. பரமசிவன்: ஆமா. அதுக்குக் காரணமும் மீடியாதான். இன்னும் 30 ஆண்டுகளில் இதெல்லாம் மறைந்து போகும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளதே.



தொ. பரமசிவன்: இதையெல்லாம் முறையாக ஆவணப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

'சென்னை சங்கமம்' போன்ற நிகழ்வுகள் மூலம் இது பாதுகாக்கப்பட வாய்ப்பு உள்ளதா?

தொ. பரமசிவன்: அங்க வேடிக்கை பார்க்கதான் வாரான். எட்டுகால் மாடு இருக்குன்னு சொன்னா அத வேடிக்க பார்க்க வருவான் இல்லையா? அது மாதிரி. இதெல்லாம் வணிகமயமாகத் தான் வாய்ப்பு இருக்கிறது.

♦

சந்திப்பு : அப்பணசாமி

நன்றி : தீராநதி, ஜூன் 2010

4

# ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது மக்கள் விரோதச் சித்தாந்தம்

தமிழகப் பண்பாட்டுச் சூழல், நாட்டுப்புறத் தெய்வங்கள், பெருந் தெய்வங்களின் சமூக மரபுகள் என்று நாம் பார்க்கத் தவறிய பல விஷயங்களைப் பற்றிய இவரது ஆய்வுகள் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. டாக்டர் பட்டத்திற்காக ஆராய்ந்திருக்கிற அழகர் கோயில் நூல் பல்கலைக்கழக வட்டாரங்களில் ஒருவித அதிர்வை ஏற்படுத்தியது.

‘தெய்வங்களும் சமூக மரபுகளும்’, ‘அறியப்படாத தமிழகம்’ ஆகிய நூல்களைத் தொடர்ந்து சமீபத்தில் வெளியான ‘பண்பாட்டு அசைவுகள்’ நூல் விசேஷக் கவனம் பெற்றது.

தொ. பரமசிவத்திடமிருந்து தெறிக்கும் கருத்துகளும், சான்று மேற்கோள்களும், வாழ்ந்துபெற்ற பட்டறிவும், மலைப்பை ஏற்படுத்தக்கூடியவை என்கிறார் ஆய்வாளரான ஆ.இரா. வேங்கடாசலபதி.

மதுரை தியாகராயர் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்த இவர், தற்போது நெல்லையிலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் தமிழியல் துறைத்தலைவர். இலக்கியம், சமயம், கோயில் மரபு, பண்பாடு என்று எந்த விஷயத்தைத் தொட்டாலும் அற்புதமாக விவாதித்துக்கொண்டே போகும் இவரது விமர்சனங்கள், சிறு பத்திரிகை வட்டாரத்தில் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டிருக்கின்றன. இழந்துகொண்டிருக்கின்ற பல தொன்மையான மரபுகளைப் பற்றிய தன்னுணர்வை உருவாக்குகின்றன இவரது எழுத்தும் பேச்சும்.



மதுரையில் தங்கும்விடுதியொன்றின் மேல்தளம். அங்குச் சந்தித்துப் பேசியபோது, பேச்சில் தன் அகங்காரமில்லை; தன்னுடைய கருத்து மட்டுமே சரி என்கிற பிடிவாதங்களில்லை. ஆனால் பேச்சினூடாக பிஞ்சுத்தீயாகப் பரவியிருக்கிறது கோபம். திராவிட இயக்கங்களின் மீது பரிவும், அவற்றின் தற்போதைய சரிவு குறித்த வருத்தமும் இழையோடப் பேசுகிறார். உரையாடலின் போது இறுக்கமில்லாமல் சரளமாக வரும் நெல்லைக்கே உரித்தான வட்டாரப் பேச்சு, அதில் வெளிப்படும் வாஞ்சை எல்லாமே பேசும்பொழுதை முக்கியமாக்கிவிடுகின்றன.

**உங்களைப் பற்றி முதலில் சொல்லுங்களேன்...**

என்னுடைய சொந்த ஊர் பாளையங்கோட்டை. அப்பா, அம்மா இருவருக்கும் இதே ஊர்தான். பெரும்பாலும் கிறிஸ்தவ நகரம் என்று அறியப்பட்டிருந்தது பாளையங்கோட்டை. உண்மையில் ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த வைஷ்ணவக் கோயிலெல்லாம் இங்குண்டு. இதன் பழைய பெயர் ஸ்ரீவல்லப மங்கலம். மதுரைக்குத் தெற்கே, பெரிய கோட்டையுள்ள நகரம் இது. பின்னாளில் தென்னிந்தியத் திருச்சபை இங்கிருந்ததால் இது கிறிஸ்தவ நகரமாகவும் வளர்ச்சி பெற்றது.

கல்வித் தரமுடைய நகரம் இது. நூறு ஆண்டுகளுக்கும் மேலாகக் கண் தெரியாதோர் பள்ளி இங்கிருக்கிறது. காது கேளாதோருக்கான பள்ளியும் இருக்கிறது. அவர்களாலும் படிக்க முடியும் என்கிற நம்பிக்கை ஊட்டின நகரம் இது. கைதிகளும் இங்குப் படிக்க முடிந்தது. நிறைய நூலகங்கள் இருந்ததால் வாசிப்புப் பழக்கமும் அதிகம்.

திராவிட இயக்கத்தால் உருவான வாசிப்பும் பயிற்சியும் முக்கியம். குறிப்பாகப் பிற்படுத்தப்பட்ட சாதியிடம், அதிலும் முதல் தலைமுறையினரிடம் பாதிப்பை ஏற்படுத்திய காலம். அதனால் என்னைப் போன்றவர்களுக்கு விளையாட்டைப் போலவே, வாசிப்பும் பழக்கமானது, அதிலும் வாசிப்பு, அரசியல் வாசிப்பாக இருந்தது. 1969இல் நான் இளங்கலைப் பொருளாதாரம் படிக்கிறபோது வகுப்பில் இருந்த 63 மாணவர்களில் மூன்று பேர்களைத் தவிர மற்ற அனைவருக்கும் ஏதேனும் ஒரு கட்சிச் சார்பு இருந்தது. தன்னுடைய வீடு, தெரு, சாதி தாண்டி மாணவனுக்கென்று ஒரு பொதுஉலகம் இருந்தது. அவர்கள் பேசுவதற்கும், சண்டை போடுவதற்கும் ஏதோ ஒரு தத்துவம் இருந்தது. பள்ளிகளிலேயே அப்போது திமுக மாணவர்களுக்கும், காங்கிரஸ் மாணவர்களுக்குமிடையே சச்சரவுகள், சண்டைகள் எல்லாம் வரும்.

என்னைப் போன்று முதல் தலைமுறையாகப் படிக்கிற குடும்பங்களிலிருந்து வருகிறவர்கள் தன்னுணர்வோடு சிந்திக்கிறபோது பெரியார், தி.மு.க என்றுதான் இருக்க முடியும். அப்படித்தான் எங்களில் பெரும்பாலானவர்கள் இருந்தோம். கல்விச் சூழல், இயக்கச் சூழல் இரண்டுமிருந்தது. அப்போது எல்லா மாணவர்களும் பாடப் புத்தகங்களுக்கு அப்பால் ஏதேனும் ஒரு புத்தகத்தையோ, இதழையோ கையில் வைத்திருப்பார்கள். அது தரமான இதழாக இருக்கும். அந்த வாசிப்புப் பழக்கம் நாற்பதாண்டுகளில் கணிசமாகக் குறைந்து விட்டது. தொலைக்காட்சிப் பாதிப்பு வந்தபிறகு இன்னும் குறைந்து விட்டது. தொடர்ந்து வாசிப்பு இருந்தால்தானே சிந்தனை இருக்கும்.

**அந்த இயக்க ஈடுபாடுதானே அப்போது மொழியுணர்வை உருவாக்கியது?**

நிச்சயமாக. ஏனென்றால் மொழி என்பது மக்களை விட்டுத் தனித்து நிற்பதில்லையே. பெருவாரியான மக்கள் திரளின் மொழி எதுவோ, அது அப்போது அறிவுலக மொழி அல்ல. ஆங்கிலத்திற்கும், வடமொழியான தமிழ்மொழிக்கு ரொம்பக் காலமாக இல்லை. அப்போது புதிதாக எழுத்தறிவு பெற்ற இளைய தலைமுறை எங்களது தாய்மொழியின் இடம் எங்கே? என்று இயல்பானபடி கேள்வி கேட்டது. அவனுக்கு அம்பலம் என்றால் புரியும். நாட்டாமை என்றால் புரியும்.

சமஸ்கிருதம் கலந்த சொற்கள் அவனுக்குப் புரியவில்லை. சமூக விடுதலை என்பது மொழி சார்ந்த தளத்திலும் இயங்குவது. தவிர்க்க முடியாதது. என்னுடைய மொழிக்கான இடம் எங்கே? என்கிற தேடல் இருந்தபோது, திராவிட இயக்கத்தவர்களின் மொழியுணர்வு தனக்கானதாக இளைய தலைமுறைக்குத் தோன்றியது. அதுவும் விடுதலையின் ஓர் அம்சம்தானே!

அதற்கு இரைபோடுகிற மாதிரி ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் திராவிட இயக்கத்தின் பெரிய தலைவர்களும், சிறிய தலைவர்களும் ஆளுக்கு ஒரு பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தார்கள். ஒரே சமயத்தில் இருபது பத்திரிகைகளுக்கு மேல் வந்துகொண்டிருந்தன. அண்ணா, கலைஞர், நெடுஞ்செழியன் ஒவ்வொருவர் கையிலும் பத்திரிகைகள். பெரியார் வழி தனி. 1925லிருந்து குடியரசு தொடங்கிய பிறகு அதை விடுதலையாக மாற்றி நீண்டகாலம் இயங்கியவர். தமிழிதழியல் வரலாற்றில் நெடுங்காலம் இயங்கியவர்களாக அவரையும் டி.எஸ். சொக்கலிங்கத்தையும் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு ஏ.என்.சிவராமன். இப்படி அன்றைய இளைஞர்களுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தப் பலதரப்பட்ட சூழல் இருந்தது.



**அந்தச் சமயத்தில் தனித்தமிழ் வாதத்தை முன்வைத்த மறைமலையடிகள் போன்றவர்களை நீங்கள் ஆதரிக்கவில்லையா?**

மறைமலையடிகளைப் பொறுத்தவரை அவருக்கு வேறொரு நோக்கமும் இருந்தது. சைவம் சார்ந்த தமிழியக்கத்தை அவர் முன் வைத்தார். ஆனால் திராவிட இயக்கங்களின் மொழி, எதுகை மோனையுடன் ஒலிநயத்தை உள்வாங்கிக்கொண்டதாக இருந்தது. எதைச் சொன்னாலும் ஒலிநயத்துடன் சொன்னார்கள், எழுதினார்கள். ஆனால் மக்களுக்கு அந்த மொழி நடை பிடித்துப்போனது. பழமொழிகளை, விடுகதைகளை, சொல்லடைகளை அவர்கள் பயன்படுத்தினார்கள். காங்கிரஸில் முக்கியமான தலைவர்களாக திரு.வி.க., டி.எஸ். சொக்கலிங்கம் போன்றவர்கள் இருந்தாலும் அவர்கள் சமூகத்தின் மேல் அடுக்கிலிருந்து வந்தவர்கள். எளிய மக்களிடையே புழங்கிய பழமொழி, ஒலிநயம், விடுகதை, பேச்சுமொழியுடன் தொடர்புடைய மொழி அவர்களுக்குக் கைவரவில்லை. திராவிட இயக்கத்துக்காரர்களுக்கு அது கைவந்தது.

**உங்களுடைய டாக்டர் பட்டத்துக்கான ஆய்வை எங்கே பண்ணினீர்கள்? அப்போதிருந்த சூழல் உகந்ததாக இருந்ததா?**

ஆய்வுகள் அப்போது சிறிய அளவிலேயே இருந்தன. வேறு எந்த மொழி பேசுகிற தேசிய இனமும் செய்யாத தவறை நாம் செய்தோம், அப்போது தமிழகத்தில் இருந்தவர்கள் நான்கு கோடி மக்கள். இருந்தும் நூறு ஆண்டுகளுக்கு மேலாக சென்னைப் பல்கலைக்கழகத்தை வைத்துக்கொண்டிருந்த வேறு மாநிலம் எங்குமில்லை.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழிக்கு இருந்த இடமே விசித்திரம். 1857இல் துவங்கிய பல்கலைக்கழகத்தில் 1914 வரைக்கும் தமிழ்ப் பாடத்திட்டக் குழுவே கிடையாது. முதன்முதலாகத் தமிழில் பட்டம் வந்ததும் 1929இல்தான். ஆக ஒரு பல்கலைக்கழகம் துவங்கப்பட்டு 75 ஆண்டுகளாகியும், அது எங்கே இருக்கிறதோ அந்த மாநிலத்தில் மொழிக்குப் போதுமான இடம் இல்லையென்றால் அது என்ன நியாயம்? ஆனால் அதை நாம் சகித்துக்கொண்டிருந்தோம். 1925லேயே தமிழ்ப்பல்கலைக் கழகம் வேண்டும் என்கிற குரலுடன் முயற்சிகள் நடந்தன. அப்போது எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை என்கிற தமிழறிஞர் சேலத்தில் தமிழன்பர்கள் மாநாட்டைக் கூட்டி

மதுரையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்று தீர்மானமே போட்டார். ஆனால், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் உருவானது 1983இல். இதற்கு இவ்வளவு ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. தமிழ்க் கல்விச் சூழல் பெருவாரியான மக்களின் மொழிக்கு நெடுங்காலமாக நெருக்கமாக இல்லை. பல்கலைக்கழகங் களோ, ஆய்வு நிறுவனங்களோ தமிழ் மொழியுடன் உறவு கொண்டதே கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத்தான்.

இந்தச் சூழலில் ஆறு ஆண்டுகள் கல்லூரி ஆசிரியராக வேலை பார்த்த பிறகு 1976இல் மதுரைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காகப் போய்ச் சேர்ந்தேன். களஆய்வு என்பதன் பெருமை அப்போதுதான் புலப்பட்டது. புத்தகங்களுக்குள்ளேயே, நூலகங்களுக்குள்ளேயே ஆராய்ச்சி என்ற நிலைமாறி, தெருவையும், ஆய்வையும் இணைக்கிற களஆய்வு சார்ந்ததே.

களஆய்வை எந்த அளவுக்கு மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு போக முடிந்தது?

1960களின் கடைசிப்பகுதி வரை டாக்டர் பட்டத்திற்கான தமிழ் ஆய்வேடுகளை ஆங்கிலத்தில்தான் கொடுக்க வேண்டும். அறிஞர் களான மு.வ.வோ, வ.சுப. மாணிக்கமோ ஆங்கிலத்திலேயே ஆய்வேடு களைக் கொடுத்தார்கள். அதனால் அந்த ஆய்வுகள் எளிய மக்களைப் போய்ச் சேரவில்லை,

அது அவர்களைப் பற்றியதாக இருந்தாலும்கூட, இதையடுத்தே தமிழ் ஆய்வுகள் தமிழியல் ஆய்வுகளாக மாறின. எழுத்தறிவில்லாத பெருவாரி மக்களின் மொழியை ஆராய, மொழியியல் என்கிற துறை உருவானது. இதன் ஆய்வாளர்கள் காடு, மேடெல்லாம் அலைந்து சாதாரண மக்கள் மொழியைப் பதிவு பண்ணியபோது தொடங்கியது களஆய்வு. எழுபதுகளில் அதை முக்கியமாக வளர்த்தெடுத்தது நா. வானமாமலை நடத்திய ஆராய்ச்சி என்கிற ஏடு. அப்புறம்தான் தமிழ் ஆய்வுகள் தமிழியல் ஆய்வுகளாக வளர ஆரம்பித்தன.

அறிவு என்பதும், ஆராய்ச்சி என்பதும் புத்தகங்களுக்குள்ளாகவும், நூலகங்களுக்குள்ளாகவும் மட்டுமே இருக்கமுடியாது. தெருக்களுக்குப் போய் மக்களைச் சந்தித்து மக்களிடமிருந்து கற்றுக்கொள்வதற்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன என்கிற தன்னுணர்ச்சி வந்த பிறகே, புது புது ஆய்வுகள் பிறந்தன. எளிய மக்களிடமிருந்து கற்றுக் கொள் வதற்கு எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன? அவர்களுக்கு எழுதத் தெரியாவிட்டாலும், அவர்கள் அறிஞர்கள் இல்லை என்று யாரும்



சொல்ல முடியாது. மக்களிடமிருந்து கற்பது, கற்றுக்கொடுப்பது என்கிற இருமுனைப் போக்குடையதாகப் பிறகு மாறின ஆய்வுகள்.

அழகர்கோயிலைப் பற்றி நான் களஆய்வு செய்தேன். அதைச் சமூகவியல் பார்வையுடன் செய்தேன். அதற்கு முன்பு கோயில் ஆய்வுகள் என்றால் கட்டட ஆய்வுகள், கலை ஆய்வுகளாகவே இருந்தன. அதைவிட்டுக் கோயிலுக்கும் மக்களுக்கும் உள்ள உறவைப் பற்றிச் சொல்லப்படவில்லை. என்னுடைய ஆய்வு முழுக்க முழுக்க அதிலேயே மையம் கொண்டது.

வங்காளத்தைச் சேர்ந்த பி.கே. சர்க்கார் என்பவரின் புத்தகம் எனக்கு உந்துதலாக இருந்தது. மக்களுக்கும் சமூக நிறுவனங்களுக்கு மான உறவை ஆராய்கிறது அந்தப் புத்தகம். நம் நாட்டில் மிகப்பெரிய சமூக நிறுவனம் என்பது கோயில்தான். மற்ற சமூக நிறுவனங்கள் எல்லாம் அழிந்து போய்விட்டன. காலனி ஆட்சியில் அழிந்தது போக மிஞ்சியது கோயிலும், சாதியும்தான். இந்த இரண்டு சமூக நிறுவனங் களுக்கிடையே உள்ள தொடர்பைப் பற்றியதுதான் என்னுடைய ஆய்வு. குறிப்பிட்ட நான்கு சாதிகளுக்கும் அழகர்கோயிலுக்கும் உள்ள உறவையே அந்த ஆய்வில் விவரித்திருக்கிறேன்.

சாதிகளுக்குக் கோயிலுடன் அந்த அளவுக்கு நெருக்கம் இருந்ததாக உணர்ந்தீர்களா?

சாதி என்பது குரூரமான யதார்த்தம். சமூகம் என்பதே இங்குச் சாதியின் அடுக்குகளாகத்தானிருக்கிறது. இதை மாற்ற வேண்டும் என்பது வேறு விஷயம். ஆனாலும் இதைத் தவிர்க்க முடியவில்லை. இங்கே தனிநபர்கள் என்று யாருமில்லை. எல்லோர் மீதும் விரும்பியோ விரும்பாமலோ சாதி போர்த்தப்பட்டிருக்கிறது. சிலருக்குப் பச்சை குத்தியது போல தோலோடு சேர்த்துக் குத்தப்பட்டிருக்கிறது. சாதியைச் சமூகத்தின் முக்கியமான அலகாக எடுத்துக்கொண்ட எல்லா ஆய்வு களையும் பண்ணுகிறோம், அது அல்லாத ஆய்வுகள் அனைத்தும் முழுமையில்லாத ஆய்வுகள் என்று நினைக்கிறேன்.

அழகர்கோயிலைப் பற்றிய உங்களுடைய ஆய்வேடு வந்தபோது அது கவனிப்புக்கு உள்ளானதா?

ஆய்வேட்டைப் பரிசீலித்த மூன்று தேர்வாளர்களுமே அதை மிகச் சிறந்தது என்று சொன்னதால் மதுரைப் பல்கலைக்கழகமே அதை நூலாக வெளியிட்டது. ஆனால் வெளியிடப்பட்டு பத்தாண்டு களாகிவிட்டன. மிக அண்மைக்காலமாகத்தான் அந்த ஆய்வேடு

பலரால் கவனிக்கப்பட்டிருக்கிறது. கோயிலின் தலபுராணத்திற்குப் பின் உள்ளூர்க் கைங்கர்யம் நிறைய இருக்கும். இன்னொருபுறம் அந்தக் கோயிலைப் பற்றிய வாய்மொழிக் கதைமரபு இருக்கும். அழகர் கள்ளழகராக ஏன் வேஷம் போடுகிறார் என்பதற்குக் களஆய்வின் போது நிறைய தகவல்களைச் சேகரித்தேன். மக்கள் ஒரு கட்டத்தில் தங்களது கலாச்சாரத்தின் பிரதிநிதியாகக் கடவுளை ஆக்குவார்கள். அப்படி ஆக்கப்பட்ட கடவுள்களும் கோவில்களும் மட்டுமே உயிர் வாழும், மற்றவை பாழடைந்து போய்விடும்.

பெரும்பாலான தலபுராணங்களுக்குள் உண்மையின் துகள் உள்ளே புதைந்திருக்கும். அதைச் சுற்றி ஆசைகள், நம்பிக்கைகள், ஏக்கங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக பௌராணிக மரபுகள் எல்லாம் இருக்கும். தலபுராணம் என்பது வேறு, தலவரலாறு என்பது வேறு. கோயிலைப் பற்றிய மக்களின் எழுதப்படாத கதைகள், வெளியுலகம் அதிகம் அறியாத சிறுசிறு சடங்குகள், நியமங்கள் எல்லாவற்றையும் தொகுக்க வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்று, அழகர்கோயில் பகுதியிலுள்ள சில கிராமங்களில் வீட்டு வேலை செய்வதற்கோ, மாடு மேய்ப்பதற்கோ ஆட்களை அமர்த்தினால், சித்திரை மாதம் அழகர் ஆற்றில் இறங்குகிற அன்று வேலையை விட்டுச் சொல்லிக்கொள்ளாமலேயே நின்று கொள்ளலாம். அதற்கு முன் நிற்க முடியாது. அதற்குச் 'சித்திரை விடுதி' என்றே பெயர். சித்திரை அன்றைக்கு ஒருவன் தன்னைத்தானே விடுதலை செய்துகொள்ளலாம். அப்படியொரு எழுதப்படாத சட்டம் மக்கள் வரலாறாக, அதே சமயம் கோயில் சார்ந்ததாகவும் இருக்கிறது. எழுத்துலக அறிஞர்களுக்கு இந்த வரலாறெல்லாம் புரியாது. அந்த மாதிரி எழுதப்படாத வரலாற்றை நாம் சொல்கிறோம்.

தமிழகம் முழுக்க இருக்கும் தாலாட்டுப் பாடல்களில் அழகருக்கும், மீனாட்சிக்குமுள்ள அண்ணண், தங்கை உறவுமுறையைப் போற்றும் பாடல்கள் அதிகம். அண்ணன் தங்கைக்கிடையிலான பாசம் திராவிடக் கலாச்சாரத்தில் அழுத்தம் பெறக்கூடிய உறவு. இதுகூட மக்களின் வாய்மொழி வந்த மரபே ஒழிய, அரசின் அங்கீகாரம் பெற்ற மரபல்ல. சட்டரீதியாகவோ சடங்குரீதியாகவோ இரு தெய்வங் களுக்கும் உறவில்லை. இவை எல்லாமே ஆகமங்களை மீறின செயல்கள்தான். மீனாட்சி கிறிஸ்துவுக்கெல்லாம் முற்பட்ட திராவிடப் பெண் தெய்வம். அநேகமாகப் பாண்டியர்களின் குலதெய்வமாக இருக்கலாம். இந்தியாவிலேயே தனித்த தன்மையுடைய பெண் தெய்வம். திருமணமாகாத ஒரு கன்னிப்பெண் முடிசூடி ஆளுகிறாள்



என்கிற கதை இந்தியாவில் வேறு எங்கும் கிடையாது. அந்த அளவுக்குத் தொன்மையான தெய்வம். இந்த உறவுமுறையையும் நான் ஆய்வு செய்திருக்கிறேன்.

**மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் குறிப்பிட்ட சமூகத்தினர் அனுமதிக்க மறுக்கப்பட்ட மாதிரியான நிலைமை, அழகர் கோயிலிலும் இருந்ததா?**

இருந்தது. ஆனால் ராமானுஜர் 12ஆம் நூற்றாண்டில் வந்த போது... நிறையக் கோயில்கள் அதன் பழைய ஆச்சாரங்களிலிருந்து நெகிழ்ந்து கொடுத்தன. அவர்தான் மைசூருக்கு அருகிலுள்ள மேலக் கோட்டையில் அரிஜன ஆலயப் பிரவேசத்தைச் செய்து காட்டியவர். சாதி வேற்றுமைகள் பாராட்டுவதில் வைணவம் நெகிழ்ந்து கொடுத்த போது, சைவம் இறுக்கமாக இருந்தது. இதை உணர முடிகிறது.

**அப்படி இறுக்கமாக இருந்தபோதும் பெருந்தெய்வங்களுடன் மக்களை நெருக்கமாக்குகிற கதைமரபு, சொல்லாடல் எல்லாம் எப்படி உருவானது?**

பெருந்தெய்வக் கோயில்களிலுள்ள மக்களின் கற்பித முறைகள் எல்லாமே ஆகம விதிகளுக்கு எதிரானவை. ஆகமங்கள் ஒருபோதும் மக்களின் கற்பித உறவுகளை ஏற்பதில்லை. அழகர் கள்ளழகராக வேடம் போடுவதை எந்த ஆகம விதி ஏற்கும்? காரமடை ரெங்கநாதர் கோயிலுக்குள் இருளர்கள் தண்ணீர்ப் பையுடன் வந்து சுத்தம் செய்கிறார்கள். இதை ஆகமம் ஏற்குமா? ஆனால் அன்றைக்கிருந்த அரசும், அதிகாரிகளும், கோயில் நிர்வாகமும் மக்களை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாது என்பதால் இவற்றை ஏற்றுக்கொண்டன.

**சிறுதெய்வ வழிபாடு என்கிற எளிய மக்களுடன் இணைந்த வழிபாட்டை எப்படி எடுத்துக்கொள்கிறீர்கள்?**

சிறு தெய்வம், பெருந்தெய்வம் என்பதெல்லாம் நாம் சௌகர்யத் திற்காகப் பயன்படுத்தும் சொற்கள். பெருந்தெய்வங்கள் ஒரு கடவுள் என்கிற கோட்பாட்டை உருவாக்கும். மக்களுடைய தெய்வங்கள் அப்படியல்ல. சிறு தெய்வ வழிப்பாட்டை முறையைப் பலமாக உள்ளிழுத்துக்கொண்டே பெருந்தெய்வங்கள் இங்கு நிற்க முடிகிறது. மீனாட்சியை சிவனின் மனைவி சக்தியாகப் பெருவாரியான மக்கள் பார்க்கவில்லை. அவர்கள் தாயாகத்தான் பார்க்கிறார்கள். சிறு தெய்வங்கள் என்று நீங்கள் குறிப்பிடுகிற கோயில்கள் சொத்துடைமை நிறுவனங்களாக மாறுவதில்லை. ஆனால், அரசின் ஆதரவு பெற்ற எல்லாக் கோயில்களும் சொத்துடைமை நிறுவனங்களாக மாறிவிடு

கின்றன. சிறு தெய்வங்கள் என்கிற கிராமப்புறத் தெய்வங்கள் எல்லாமே கைகளில் ஆயுதங்களை ஏந்தியிருக்கும். மக்களோடு மக்களாகச் சில இடங்களில் கூரை இல்லாதபடி நின்று, அவர்களுடைய உணவை உண்டு, உடுத்துபவற்றை உடுத்தி, எளிய மக்களின் வாழ்விலும் கனவிலும் கலந்துவிட்டவை அந்தத் தெய்வங்கள்.

சாதிய அடக்குமுறைகளும் ஒடுக்குமுறைகளும் பிறப்பதற்கு முன்பே இந்தத் தெய்வங்கள் பிறந்துவிட்டன. இந்த ஆன்மிகம் நாட்டு மக்களின் ஆன்மிகம். அதிகாரச் சார்பற்ற ஆன்மிகம். மற்றவர்களையும் மற்ற வற்றையும் ஏற்றுக்கொள்கிற ஆன்மிகம்.

இன்றைக்குக் கிராமங்களில் மற்ற மதத்தினருடன் ஒருவித உறவுணர்ச்சியே உண்டு. அதை நகர்ப்புறம் சார்ந்த, படித்த, அதிகார மையங்களில் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், இங்கு இருப்பது முழுக்க அதிகாரச் சார்புடைய ஆன்மிகம். கடவுளுக்கும் மனிதர் களுக்கும் இடையில் சிலர் குறுக்கே வந்து நிற்கிறார்கள். நாட்டார் தெய்வங்களில் இந்தப் பாகுபாடில்லை.

எவ்வளவு தூரம் மக்கள் ஒரு கோயிலுக்கு வந்து குவிகிறார்களோ அந்த அளவுக்கு அங்கே அதிகார மையம் உருவாக்கப்படுகிறதா? உதாரணத்திற்கு, பழனி கோயிலுக்கு வருகிறவர்களின் எண்ணிக்கை அதிகரித்த பிறகே பூஜை செய்தது பிற்படுத்தப்பட்டவர்களிடமிருந்து பறிபோனதாக சொல்லப்படுவது உண்மைதானா?

மிகப்பெரிய ஆன்மீக மையமாக விளங்குகின்ற கோயிலை அரசு அதிகாரம் தனக்கென எடுத்துக்கொள்கிறது. பழனி கோயிலில் முன்பு பூஜை செய்தது பிற்பட்ட சமூகத்தினர். ஆனால் திருமலை நாயக்கர் காலத்தில் தளவாயாக இருந்த இராமப்பையன் இன்னொரு சமூகத்தினர் கையிலிருந்து திருநீறு வாங்குவதை விரும்பவில்லை. இதையடுத்தே அங்கு பூஜை செய்யும் உரிமை பிராமணர்களுக்கு மாறுகிறது. இதே மாதிரி கதைப்பாடல் களின்படி பார்த்தால் ராமேஸ்வரம் கோயிலிலும் பூஜை செய்திருப்பது பிற்படுத்தப்பட்ட சமூகம்தான். பிறகு அங்கும் மாற்றப்பட்டிருக்கிறது. அரசு அதிகாரம் உள்ளே நுழைய நுழைய எளிய மக்கள், உணர்வு ரீதியாக அந்தக் கோயிலிலிருந்து விலகிவிடுகிறார்கள். அதிகாரம் குறுக்கே பாய்ந்தால் மக்கள் விலகிவிடுவது காலம்காலமாக நடக்கும் பழக்கம். மக்கள் எங்கே பெருந்திரளாகக் கூடுகிறார்களோ அந்த ஆன்மிக மையங்களைத் தனதாக்கிக்கொள்ள எந்த அரசும் முயற்சி பண்ணிக்கொண்டேயிருக்கும். பாண்டிய அரசோ, சோழ அரசோ அல்லது இன்றைக்கிருக்கிற அரசுகளோ உடனடியாக அக்கோயில் களைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிடுகிறதே!



கிராமப்புறங்களில் இருக்கிற நாட்டார் தெய்வங்கள் பெரும்பாலும் பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்துடன்தான் பின்னிப் பிணைந்திருக்கின்றனவா?

இன்றைக்கும் சில குடும்பங்களுக்கான தெய்வங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட சாதியினருக்கான தெய்வங்கள் இருக்கின்றன. சமூகத்தின் மேலடுக்குகளில் உள்ள சாதியினர் பெரும்பாலும் இந்தக் கோயில் களுக்கு வருவதில்லை. மூன்று நான்கு பிற்படுத்தப்பட்ட சாதி யினருக்குச் சேர்ந்து சில குலதெய்வங்கள் இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தில் உள்ள சாஸ்தா கோவில்களில் பெரும்பாலனவை மூன்று அல்லது நான்கு சாதிகளுக்குப் பொதுவானவையாகவே இருக்கும். திருவிழா அன்று மட்டும் எல்லோரும் கூடுவார்கள். ஓராண்டு காலமாக அவர்கள் அந்தத் தெய்வத்தை நினைத்துக் கொண்டே இருக்கிறார்கள். அவனுக்கு ஒரு சிக்கல் வருகிறபோது கோயில் இருக்கும் திசையை நோக்கிக் கும்பிடுகிறான். நேர்ந்துகொள் கிறான். அவனுடைய கடந்தகால நினைவுகளோடும், மூதாதையர் களின் நினைவுகளோடும் கலந்து பிசையப்பட்ட உணர்வுடன் இருக்கிறது அவனது நாட்டார் தெய்வம்.

இப்படிப் பிணைந்திருக்கிற உறவுகளை வலுவிழக்கச் செய்யும் விதத்தில் சபரிமலை, திருப்பதி, மேல்மருவத்துவர் என்று பொதுவான தெய்வங்களை நோக்கி நகர்த்திச் செல்லும் முயற்சியும் வெவ்வேறு விதத்தில் நடக்கிறதே. இதைத் திசைதிருப்பும் காரியமாக நினைக்கிறீர்களா?

சபரிமலையாகட்டும், மேல்மருவத்துவராகட்டும், அவையெல்லாம் மத்தியதர வர்க்கத்து ஆன்மிகம். அடித்தள, எளிய மக்களின் ஆன்மிகம் அல்ல. எளிய மக்களின் கனவில் ஒருபோதும் சிவபெருமான் வரமாட்டார். அவர்களுடைய குலதெய்வம்தான் வரும். அதனால் மூதாதையர்களின் நினைவுகளுடன் பிணைந்திருக்கிற இந்த வழிபாட்டு உறவை அவ்வளவு சுலபமாக அகற்றிவிட முடியாது.

கிராமப்புற தெய்வங்கள், நாட்டார் தெய்வங்கள் என்று துவக்கிப் பிடிப்பதன் மூலம் பழைய நிலப்பிரபுத்துவக் கலாச்சாரத்தையும் மதிப்பீடுகளையும் தூக்கிப் பிடிக்கிற, அதை நியாயப்படுத்துகிற மாதிரி தோன்றாதா?

பிரபுத்துவம் என்கிற சொல் நாட்டார் தெய்வங்களுடன் சேர்க்க முடியாத சொல்தான். இந்தத் தெய்வங்களை வழிபடுகிறவர்கள்

யாரும் நிலப்பிரபுக்கள் அல்லர். நிலமானிய முறை உற்பத்தி செய்த சில மதிப்பீடுகள் இங்கொன்றும் அங்கொன்றுமாக இருக்கலாம். ஆனால் இந்த நாட்டார் தெய்வங்கள் நேரடியாக உற்பத்தித்தளத் துடன் தொடர்புடையவை. மாரியம்மன் மழையோடும், அடுத்தப் பருவப் பயிருடனும் தொடர்புடைய தெய்வம். இதே மாதிரி கிராமத் தெய்வங்கள் இன்பத்தை மட்டுமே கொடுக்கக்கூடிய தெய்வங்கள் அல்ல. இன்பத்திலும், துன்பத்திலும் பங்கெடுக்கிற தெய்வங்கள். நிலமானிய மதிப்பீடுகள் நில உடமையாளர்களுக்குச் சாதகமாக இருந்ததே தவிர, அதை எல்லோரும் சேர்ந்துதான் உருவாக்கினார்கள். ஆகவே, நிலப்பிரபுத்துவ ஆன்மிகம் வேறு, இந்த எளிய மக்களின் ஆன்மிகம் வேறு.

**இருந்தாலும் இன்றைக்கு நாட்டார் தெய்வங்களுக்கான மரபு, அதற்கான முக்கியத்துவம் அதிகரித்திருக்கிறதே? அதற்கான தேவை இப்போதிருக்கிறதா?**

இருக்கிறது. ஒரே தெய்வக் கோட்பாடு என்பது அரசு உருவாக்கத் திற்குத் தேவையானது. "ஒன்றே குலம்; ஒருவனே தேவன் என்பதெல்லாம் மக்கள் விரோதச் சித்தாந்தம்" என்றே நான் கருதுகிறேன். இந்துத்துவவாதிகளைக் கேட்டால் ஒன்றே குலம்; எல்லோரும் இந்தியர் என்கிறார்கள். ஒருவனே தேவன் என்றால் இராமன் என்கிறார்கள். ஆனால், பன்முகத் தன்மையுள்ள கலாச்சாரத்தைப் பேணிக் காப்பவை இந்த நாட்டார் தெய்வங்கள். இந்தப் பன்முகத் தன்மையை எதிரொலிக்கிறவரையே சமூகம் ஜனநாயகத் தன்மை யுடன் இயங்கும். ஒரே கடவுளை எப்போது கொண்டுவந்து நிறுத்து கிறீர்களோ, அப்போது பலதரப்பட்ட தெய்வங்களை நிராகரிக்கிறீர்கள் என்று அர்த்தம். இன்றைய தேவை எல்லோரும் நூறு நூறு தெய்வங் களைக் கும்பிடுங்கள் என்பதுதான். ஏனென்றால் நூறு வகைப்பட்ட மனிதர்களை, நூறு வகைப்பட்ட நம்பிக்கைகளை, நூறு வகைப்பட்ட வழிபாட்டு முறைகளை நாம் அங்கீகாரம் செய்தாக வேண்டும். அப்படியிருந்தால்தான் நாம் ஜனநாயகரீதியாக இயங்குகிறோம் என்று பொருள்.

மறுபுறம் இன்றைக்கு ஆன்மிகத்திலும், அரசியலிலும் மையப் படுத்துகிற வேலை நடக்கிறது. அப்படி நடக்கும்போது பல விஷயங்கள் அடிபடுகின்றன. இப்படி அடிபட்டு ஒற்றைக் கலாச்சாரம் ஒன்று உருவாவதை நாம் ஒருபோதும் ஏற்க முடியாது. சுதந்திரப் போராட்டத்தின் இடைப்பகுதியில் விநாயகரைக் கொண்டுவந்த போது அது இந்தியத் தேசியத்திற்கு உதவும் என்று நினைத்தார் திலகர். இன்றைக்கு இராமர் தேவை என்று இன்னும் சிலர் நினைக் கிறார்கள். இந்த இரண்டையும் நாம் ஏற்க முடியாது.



**இந்தித்திணிப்புக்குப் பின்னால் வலுவானபடி அரசியல் இருக்கிறதா?**

அது வெளிப்படையாகவே தெரிகிறதே. அதிகாரத்தைக் குவித்து வைக்கும் நோக்கிலேயே இதெல்லாம் நடக்கின்றன. குவிக்கப்பட்ட அதிகாரங்கள் எப்போதும் பெருவாரியான மக்களுக்கு எதிராகவே இருக்கும். சமூக விடுதலை, அரசியல் விடுதலை என்று நாம் சொல்கிற எல்லா விஷயங்களுக்கும் எதிரான போக்கு இது.

**இன்னொருபுறத்தில் கோயிலில் நுழைய அனுமதி இல்லாமல், வழிபாட்டு உரிமை இல்லாமல், சமூகத்தின் பல தளங்களில் ஒதுக்கப்பட்டதால் தானே, ஒருவன் அந்த மதத்தை விட்டே மாறிப்போகும் சூழ்நிலை உருவானது?**

மதமாற்றத்தில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். பிற மதங்களினால் ஈர்க்கப்பட்டு அவர்கள் சென்றார்கள் என்பதைவிட, எந்த இடத்தில் இருந்தார்களோ, அந்த இடத்தில் அவர்களுக்கான உரிமை மறுக்கப் பட்டு, விரட்டியடிக்கப்பட்டார்கள் என்பதுதானே உண்மை. குறிப்பிட்ட கோயிலுக்குள் நுழையக் கூடாது என்று அவர்களை ஒதுக்கி வைத்திருந்தார்கள். எந்தக் கோயிலுக்குள் போக முடியுமோ அந்தக் கோயிலுக்குள் அவர்கள் போய்விட்டார்கள். அவர்கள் போனார்கள் என்று சொல்வதைவிட, விரட்டப்பட்டார்கள் என்று சொல்வதுதானே சரியாக இருக்கும். கிறிஸ்தவம் இங்குள்ள சாதி முறையை அப்படியே பேணிக்கொண்டது. இஸ்லாம் சாதிமுறையை ஒதுக்கியது. இதன் மூலம் சாதியில் மேல், கீழ் என்கிற அழுத்தமான பாகுபாடு சற்று விலகி விட்டதில்லையா?

**இந்தச் சூழ்நிலைகளை திராவிட இயக்கங்கள் சரிவர உணர்ந்து செயல் பட்டனவா?**

இருபதாம் நூற்றாண்டில் திராவிட இயக்கங்கள் வந்த பின் மேல் சாதியாக்கம் என்பது தோற்றுப்போய்விட்டது. மதத்தின் தத்துவச் சண்டைகளைத் தனது வருகையின் மூலம் நிறுத்தி வைத்தன இந்த இயக்கங்கள். ஆனால் பெரியார் மற்ற மதத்திற்குள்ளும் சாதி வேறு பாடுகள் பாராட்டுவதைக் கண்டித்தார். குடியரசு இதழில் எழுதினார். இடதுசாரி ஆராய்ச்சியாளர்கள் மீது எனக்குக் கடுமையான கோப முண்டு. அவர்கள் திராவிட இயக்க எழுத்தை விமர்சித்தார்கள். ஆனால் அதை முழுமையாகப் படிக்கவில்லை. பெரியாரின் எழுத்துக்

களைப் படிக்காமலேயே அவரை நிராகரித்தார்கள். இது பெரிய தவறு.

வர்க்கத்துக்கும் சாதிக்குமான உறவை மிகச் சரியாகப் புரிந்து கொண்டவர் பெரியார். வர்க்கத்தின் மூலவடிவமாகத்தான் சாதியைப் பார்த்து, சாதி ஒழிப்பில் கவனம் செலுத்தினார். இடதுசாரிகள் அப்படிச் செய்தார்களா? கீழ் வெண்மணியில் 44 பேர் உயிரோடு கொளுத்தப்பட்டபோது, நிலக்கூலிகள், தொழிலாளர்கள் என்பதால் மட்டும் கொளுத்தப்படவில்லை. சாதிரீதியாகவும் ஒடுக்கப்பட்ட வர்கள் என்பதாலும் கொளுத்தப்பட்டார்கள். பொதுவுடைமை எழுத்துக்களில் இது பதிவாகவில்லை. அவர்கள் வர்க்கத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்ட அளவுக்குச் சாதியைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அந்தத் தவறை இப்பொழுது உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

97இல் மதுரையில் பெரியாரைப் பற்றி மூன்று நாட்கள் கருத்தரங்கம் நடத்தினோம். பொதுவுடைமைச் சித்தாந்தத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் தமிழகம் முழுக்க இருந்து வந்திருந்தார்கள். அதன் முடிவில் வலியுறுத்தப்பட்ட விஷயம், பெரியாரை மீட்டெடுக்க வேண்டும். 1954இல் ஏ.எஸ். அய்யங்கார் பகுத்தறிவுச் சிகரம் பெரியார் என்ற புத்தகத்தில் பெரியாரை நமது தோழர்கள் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை... என்று வருத்தப்படுகிறார். அந்த வருத்தத் திற்கான காரணங்கள் இன்னமிருக்கின்றன.

**இப்படி நீங்கள் சொன்னாலும் இங்குச் சாதியக் குரல்கள்தானே வலுவாகக் கேட்கின்றன?**

இதுவரைக்கும் குருடர்களும், செவிடர்களுமாக யார் அடக்கி வைக்கப்பட்டிருந்தார்களோ அவர்களுக்கு இப்போது பார்வை கிடைத்திருக்கிறது. காது கேட்கிறது. இதுவரைக்கும் இங்கே அமைதி நிலவுவதாகச் சொல்லப்பட்டதெல்லாம் மயான அமைதி. இதிலிருந்து வெடித்துக் கிளம்பும் குரல்கள் கலகக் குரல்களாகத்தானிருக்கும். ஒடுக்குமுறைக்குள்ளானதை எப்போது உணர்கிறானோ, அப்போது ஒருவன் பெருமூச்சு விடுகிறான்; முணுமுணுக்கிறான்; அதற்கடுத்துக் கலகக் குரல் எழுப்புகிறான். இப்போது எழுந்திருக்கிற கலகக் குரல்கள் நிரந்தர அமைதியை நோக்கிச் செல்லக்கூடியவை. நான் அப்படித்தான் பார்க்கிறேன்.

இன்றைக்கு மறுவாசிப்பு, மறுபார்வை, மீள்சிந்தனை என்கிற சொற்றொடர்களையெல்லாம் நீங்கள் கேட்டிருக்கலாம். இதுவரைக்கும்



எது வரலாறு என்று சொல்லப்பட்டதோ, அதுவல்ல வரலாறு. எது ஆன்மிகம் என்று சொல்லப்பட்டதோ, அதுவல்ல ஆன்மிகம். ஒரு மாற்றுக்கலாச்சாரம், ஒரு மாற்றுவரலாறு பதிவு செய்ய இன்றைக்கு எழுத்துலகம் முன்வருகிறது. யாருடைய குரல்கள் பதிவு செய்யாமல் விடப்பட்டதோ அந்தக் குரல்களைப் பதிவு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியிருக்கிறது.

எழுதப்பட்ட வரலாற்றையெல்லாம் திருத்தி எழுதுவதுதான் நமக்கு முன்னுள்ள முக்கியமான வேலை என்றார் வரலாற்றாசிரியரான டி.டி. கோஸாம்பி. இதுவரை எழுதப்பட்டதெல்லாம் அரசர்களின் வரலாறு, மேல்சாதியினரின் வரலாறு. இதுவரை பேசப்பட்டதெல்லாம் மேல்சாதியினரின் இலக்கியம். மேல்சாதியினருக்கான கலைகள்; பெருவாரியான மக்கள் திரளின் வரலாறு, இலக்கியம், கலைகள் எங்கே போயின?

இதைச் சொல்வதுதான் மாற்றுக்கலாச்சாரம். இதைக்கூட ஒரு வசதிக்காக மாற்றுக்கலாச்சாரம் என்று சொல்கிறோமே தவிர இதுதான் உண்மையான கலாச்சாரம், உண்மையான வரலாறு.

**பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அடித்தளத்தில் பொருளாதாரத்தில் ஒரே மாதிரியான நிலை இருந்தாலும், வழிபடுவதில் ஒத்த கருத்து இல்லையே? சண்டை, சச்சரவுகள் அதிலிருந்துதானே கிளம்புகின்றன?**

தெய்வங்கள் பொதுவாகவே இருந்திருக்கின்றன. மாரியம்மனை எல்லோரும் கும்பிட்டாலும், அந்தத் தேரைத் தொட்டு இழுக்கிற போதுதான் சிக்கல் வருகிறது. இது சாதிய அடிப்படையில் கோயிலைப் பேண முயல்கிறபோது வருகிற தகராறு. இன்னும் சொல்லப் போனால் தாழ்த்தப்பட்டவர்கள் வணங்குகிற தெய்வங்களை மற்ற சாதியினர் வணங்குவதும் தமிழ்நாட்டில் உண்டு. அவர்களது தெய்வங்களைப் புறந்தள்ளுவதில்லை. நாட்டார் தெய்வங்களில் வேறுபாடில்லை. தெய்வ வழிபாட்டில் அதற்கான சமூகஉறவுகளில் மட்டுமே சிக்கல்.

ஒன்று செய்தால் போதும். இந்தியாவில் பல பிரச்சினைகள் தீர்ந்துவிடும். மதம்மாற அனுமதித்த மாதிரி, சாதி மாற ஏன் இந்திய அரசியல் சட்டம் அனுமதிக்கவில்லை? சாதி காரணமான மேல், கீழ் என்கிற அடுக்குமுறையை ஏன் அது பேணிப் பாதுகாக்கிறது? இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் பொறுப்புக்கு தலித் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் வரலாம். ஆனால் பெருந்தெய்வக்கோயிலுக்குள் இருக்கிற கருவறைக்குள் இருக்கிற பத்தடி வெளிக்குள் மட்டும் அவருக்கு அனுமதி கிடையாது. ஏன் அந்த உரிமையை ஒரு குறிப்பிட்ட சாதிக்

கானதாக வைத்திருக்கிறது அரசியல் சட்டம்? இதை எடுப்பதில் என்ன சிரமம்? என்னதான் வேதம் படித்தாலும் பிறப்பு காரணமாக அந்த வெளி மற்றவர்களுக்கு மறுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. முதலில் சாதிய மறுப்பைக் கோயில் கருவறைகளிலிருந்து துவங்குங்கள். பிறப்பு வழிப்பட்ட மேலாண்மையைக் கோயில்களின் மூலமாகத் தக்க வைத்துக்கொள்கிறவரைக்கும் ஆன்மிக அதிகாரத்தையும், அதன் மூலம் அரசியல் அதிகாரத்தையும் உயர்சாதி தக்க வைத்துக்கொண்டிருக்கிறது. எனவே மேல், கீழ் என்கிற அடுக்குமுறையை நியாயப்படுத்துகிற எல்லாமே பிராமணியம்தான். அது ஒரு ஒடுக்குமுறைக் கருத்தியல், அது பிராமணர்கள் இல்லாத இடத்திலும் இருக்கிறது. எப்போது பிற்படுத்தப்பட்ட ஒருவர், தாழ்த்தப்பட்டவரைச் சாதியின் பெயரால் ஒடுக்குகிறாரோ, அந்த ஒடுக்குமுறை உறவுக்குப் பெயர் பிராமணியம் என்று நாம் சொல்கிறோம். ஏனென்றால் இதைக் கற்றுக்கொடுத்தது அவர்கள்தான். முதலாளித்துவம் என்று இதை மார்க்சிஸ்டுகள் சொன்னார்கள். இதையே பிராமணியம் என்று சொன்னார் பெரியார். அதுதான் வித்தியாசம்.

சாதி முறையை அரசியல் சட்டம் பேணுகிறது என்று பெரியார் சொன்னதில் என்ன தவறு? பிறப்பு வழிப்பட்ட சாதிக் கொடுமைகளை அரசியல் சட்டம் நன்றாக உணர்ந்திருக்கிறது. அதே சமயம் கோயில் கருவறை என்று வருகிறபோது அதே சாதிய அடுக்கை அது பாதுகாக்கிறது. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று சொன்னால் அதைக் கவனமாக நிராகரிக்கிறது. இதைச் சொன்னால் நம்மில் பலருக்கு உருத்தலாகத் தெரியலாம். ஆனால் இதுவே நடைமுறை உண்மை.

இந்த உணர்வைப் பெருவாரியான மக்களிடம் எடுத்துக்கொண்டு போவதற்கான அமைப்புகள் இன்றைக்கிருக்கிறதா?

சில அமைப்புகள் இருக்கின்றன. ஆனால் பெரியார் பெயரைச் சொல்கிறவர்களிடம் அந்த அமைப்புகள் நிச்சயமாக இல்லை. அம்மாதிரி சிந்தனையும், செயல்பாடும் இருக்கவே செய்கின்றன. திராவிட இயக்கங்கள் நீர்த்துப்போய்விட்டன. இதற்குக் காரணம் வாக்கு வங்கி அரசியல்; இருந்தாலும் அவர்களது செயல்பாட்டையும், தேவையையும் நிராகரித்துவிட முடியாது.

பண்பாட்டுச் சிதைவுகள் பற்றி விரிவாக எழுதியிருக்கிறீர்கள். உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் என்கிற உரத்த கோஷங்களின் பின்னணியில் நிறைய மாற்றங்கள் இப்போது நடக்கும்போது எதைத் தமிழ்ப் பண்பாடு என்று சொல்ல முடியும்?



பெருவாரியான மக்கள் இன்னும் பண்பாட்டுடனே வாழ்கிறார்கள். மூச்சுவிடுகிறோம் என்கிற தன்னுணர்ச்சியுடன் நாம் மூச்சுவிடுவதில்லை. அது மாதிரி இயல்பாகவே ஒரு பண்பாட்டுப் பின்னணியுடன் இயங்கிக்கொண்டிருக்கிறோம். பண்பாடு என்பது மூளையில் உறை நிலையில் இருக்கிறது. சில நேரங்களில் அது நிலத்தடி நீர் போல இருக்கிறது. சமூகம், பண்பாட்டை, ஒரு தேவையை நீங்கள் உணரும்போதே, உணரமுடியும். பண்பாடு மீறப்படும்போது அதை உங்களால் உணரமுடியும். பண்பாட்டைப் புரிந்துகொள்வது ஆராய்ச்சியாளர்களின் வேலை. ஆனால் மக்கள் அதனுடனேயே இயங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

பண்பாடு என்பது பொருள் உற்பத்தியுடன் தொடர்புடையது. அந்தப் பொருள் என்பது என்னவாக வேண்டுமானாலும் இருக்கலாம். இன்றைக்குப் 'பன்னாட்டு மூலதனம்' என்கிற பெயரில் நம் பண்பாட்டின் நுட்பமான வேர்கள் அழிக்கப்படுகின்றன நுகர்வுக் கலாச்சாரம் மூலம். அது பொருள் ஆக்கத்திற்கு எதிரான கலாச்சாரம். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு கிராமத்துக் குழந்தைகள் பனை ஓலைகளில் காற்றாடி செய்வார்கள். பூவரச இலையை வைத்து ஊதல் செய்வார்கள். சிறு பொருளையேனும் தானே ஆக்கிக்கொள்கிற அந்தக் கலாச்சாரம் இப்போது அடிபட்டுப் போய்விட்டது. இப்போது எந்தக் குழந்தையும் தானே ஆக்கிக்கொள்வதில்லை. எல்லாம் கடைகளில் வாங்கிக் கொடுக்கப்பட்டு, ஆக்கம் என்கிற சுயமான உற்பத்தி உணர்வு அடிப்பட்டுப் போய்விடுகிறது. இதைத்தான் அறுந்துபோன நுட்பமான வேர் என்று சொன்னேன். இப்படி நுகர்வுக் கலாச்சாரத்தின் பின்னணியில் நாம் இழந்தவை பல.

மண்பானை செய்பவனுக்குப் படிப்பு இல்லாமல் இருக்கலாம். ஆனால், தரமான மண்பானையை வடிமைக்கத் தெரியும். தொழில் நுட்பம் தெரியும். நுகர்வுக் கலாச்சாரம் வந்து இன்றைக்கு ஒரே சீரான பிளாஸ்டிக் குடங்கள் வந்துவிட்டது. உலகமயமாக்கல் என்பதற்குப் பின்னால் நமது பண்பாடு அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. தஞ்சை, மதுரை, நெல்லையில் முன்பு விதவிதமான பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். இப்போது அந்தப் பன்முகத் தன்மை அழிந்துபோய்விட்டது. இதற்கு முக்கியக் காரணம் பன்னாட்டு மூலதனமும், அதற்கு எடுபிடிகளாக இருக்கக்கூடிய நம்முடைய தகவல் தொடர்பு ஊடகங்களும். இவை கொடூரமான வன்முறையை நமது பண்பாட்டின் மீது நிகழ்த்துகின்றன.

பாரம்பரியமாக நாம் உப்பைப் பயன்படுத்துவதை எதிர்க்கிற விதத்தில், நிறுத்து என்று அதிகாரத் தொனியில் தொலைக்காட்சி விளம்பரம் வருகிறதே! அதில் வன்முறை இல்லையா? உங்கள் மேனியின் சிகப்பழகிற்கு என்று சொல்வதில் வன்முறை இல்லையா? கறுப்பாக இருக்கும் பெருவாரியான மக்கள் அழகில்லை என்று தாழ்த்திவிட முடியுமா? சிகப்பு மட்டும்தான் அழகா? ஆயுத வன்முறையைவிட இது கொடூரமான வன்முறை இல்லையா? அரசியல் ஒடுக்குமுறையிலிருந்து கூட விடுபட்டுவிடலாம். இந்தப் பண்பாட்டு ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவது கஷ்டம்.

சௌகர்யம் என்று கருதித்தானே நுகர்வுக் கலாச்சாரத்திற்குப் பலரும் ஆட்படுகிறார்கள்?

யாருடைய சௌகர்யத்திற்காக இதை அனுமதிக்கிறார்கள்? நுகர்வுக் கலாச்சாரம் நமக்கானது என்றால், இதில் நாம் என்றால் யார்? நம்மைப் போல் நகர்ப்புறம் சார்ந்த, படித்த, உத்திரவாதமான, மாதச்சம்பளம் வாங்குகிற, குளிர்சாதனம் அல்லது மின்விசிறிக்குக் கீழ் வேலை பார்க்கிறவர்களின் நாமா? தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் வெக்கைக்கிடையே வேலை பார்க்கும் குழந்தைகளின் நாமா? நாம் என்கிற சொல்லாடலை நமக்குச் சௌகர்யமாக உருவாக்கிக் கொள்கிறோம். ஆனால், இது பெருவாரியான மக்களின் நலனுக்கு எதிரானது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இயந்திரகதியிலான நுகர்வுக் கலாச்சார வேகத்திற்கிடையில் நமது தனித்த பண்பாட்டைத் தக்க வைத்துக்கொள்வது சாத்தியம்தானா?

நாம் இன்னும் அந்த அளவுக்குப் பண்பாடு அற்றவர்களாக மாறிப் போய்விடவில்லை. இன்னும் பேருந்தில் கர்ப்பிணிப் பெண் வந்தால் எழுந்து இடம் கொடுக்கிறார்கள். இன்னும் நாம் விலக்கப்பட்ட உறவுமுறையில் திருமணம் செய்யப் போகவில்லை. குழந்தைகளின் மீதான வன்முறையை நாம் இன்னும் நியாயப்படுத்தவில்லை. இன்னும் இறந்து போன மனித உடலுக்குச் செய்கிற மரியாதை போன்ற பழக்கங்கள் தொடர்கின்றன. பண்பாட்டின் நுட்பமான வேர்கள் சிதைக்கப்பட்டுக்கொண்டிருந்தாலும், முழுக்க அறுபட்டுப் போய்விடவில்லை.

பண்பாட்டுச் சிதைவுக்கு எதிரான குரல் இன்றைக்குள்ள சூழ்நிலையில் எந்த அளவுக்கு எடுபடும்?

படித்து உணர்ந்தவர்கள்தான் இதை மக்களிடம் கொண்டுபோக வேண்டும்... இந்நிலையில் வலுவான கருவிகளான ஊடகங்கள் எல்லாம் மக்களுக்கு விரோதமாக இருக்கின்றன. இதில் வெற்றி பெறுகிறோமா, தோல்வி பெறுகிறோமா என்பதல்ல விஷயம். இதையும் மீறி நாம் தொடர்ந்து இயங்க வேண்டும். ஒரு கட்டத்தில் வணிக நலன்களுக்கு எதிராக மக்கள் வருவார்கள். பிலிப்பைன்ஸில், அர்ஜென்டைனாவில் கிளர்ந்தெழுந்ததைப் போல இங்கும் வருவார்கள். நான்காண்டுகளோ, பத்தாண்டுகளோ கட்டாயம் இப்படியொரு குரல் எழும்பும். எல்லாவற்றையுமே இழக்க யார் சம்மதிப்பார்கள்?

அதே சமயம் மக்கள் பண்பாடு புது விஷயங்களை வரவு வைத்துக் கொண்டபடி இருக்கிறது. மிளகை மட்டுமே பயன்படுத்திக் கொண்டிருந்தவர்கள் மிளகாயை வரவு வைக்கவில்லையா? ஆனால் பன்னாட்டு நிறுவனங்கள் நினைக்கிற வேகத்தில் இங்கு மாற்றம் நடக்காது. இத்தகைய பண்பாட்டுப் படையெடுப்புகளை எதிர்க்கக் கூடிய ஆற்றல் இன்றைக்கு இல்லை. வலி கடுமையாக உணரப் படுகிறபோது எதிர்ப்பு ஆற்றல் வரத்தான் செய்யும்.

இருந்தும் நுகர்வுக் கலாச்சாரமும், பண்பாட்டுச் சிதைவும் ஒழுங்கமைக்கப்பட்ட அளவுக்கு, எதிர்ப்பு ஒழுங்கமைக்கப்படவில்லையே?

ஒழுங்கமைவு என்பதே அதிகாரக் கட்டமைப்பு சார்ந்த சொல். மக்கள் சம்பந்தப்பட்ட எதுவும் தோராயமாக இருக்கலாம். ஆனால் துல்லியமாக இருக்க முடியாது. ஒவ்வொரு நாட்டிலும் அதனதன் தன்மைக்கேற்பவே எதிர்ப்புக் குரல் வெளிப்படும். இயற்கை வளங்கள் சார்ந்த குரல் இப்போது இங்கு கேட்கிறது. பாலித்தீன் பைகளை, பிளாஸ்டிக் குவளைகளை எதிர்த்து அரசே பேச வேண்டிய தேவையிருக்கிறது. இயற்கைச் சாயத்திற்கான ஆதரவு இருக்கிறது. இப்போது அறிமுகப்படுத்தப்படுகிற எதுவும் நிரந்தரமானதில்லை என்பதையே இது வலியுறுத்துகிறது. பண்பாடு என்பது கற்றுக்கொண்டிருக்கிற போதே, அடுத்த தலைமுறைக்குக் கைமாற்றுகிற விஷயம். அப்பாவிடமிருந்து பிள்ளைக்கு வருவது மட்டுமல்லாமல், தாத்தாவிடமிருந்தும் பேரன், பேத்திக்கு வருவதுதான் பண்பாடு. அப்படிக் கைமாற்றிக் கொடுக்கிற போது நீண்டகாலப் பயனுடையதாக இருக்கவேண்டும் என்கிற உணர்வும் மெதுவாக உருவாகிக்கொண்டிருக்கிறது. ஓர் ஆண்டுக் காலம் மட்டும் உயிரோடு இருக்கிற முருங்கைமரத்தை அருப்புக்கோட்டை பகுதிகளில் அறிமுகப்படுத்திப் பார்த்தார்கள். மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. உடனடிப் பயன்பாட்டை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. கூடுதலான விளைச்சலை எதிர்பார்த்து விவசாயிகளிடம் இருப்பதும் பலமான அம்சம். படித்தவர்கள்,

குறிப்பாகத் தன்னுடைய பலனைப் பேணுவதில் மட்டுமே அக்கறை காட்டக்கூடிய மாதச் சம்பளக்காரர்கள் மீதும் அதிகாரிகள் மீதும் அவர்கள் நம்பிக்கையிழக்க ஆரம்பித்துவிட்டார்கள். இது எங்கே போய்முடியும்?

**இந்தக் கருத்துக்கள் மக்களிடம் எந்தவிதமான சலனத்தை ஏற்படுத்த முடியும்?**

இப்போதுதான் சலனங்கள் துவங்கியிருக்கின்றன. இது காலப் போக்கில் பெருகும். குறையாது. மரபுவழிப்பட்ட எல்லா நிறுவனங்கள் மீதும் மக்கள் நம்பிக்கையாயிருந்து கொண்டிருக்கிறார்கள். எந்த அரசியல்வாதியையும் நம்பத் தயாராக இல்லை. எந்தப் படித்தவனையும் நம்பத் தயாராக இல்லை. எனவே பிரச்னைகள் கடுமையாகி அவர் களது கழுத்தை நெருக்குகிற நிலை உருவாகிறபோது மக்கள் எப்படி எதிர்வினையாற்றுவார்கள் என்று சொல்ல முடியாது. பன்னாட்டு நிறுவனங்கள் எந்த அளவுக்கு நெருக்கடி கொடுக்கிறார்களோ அந்த அளவுக்கு எதிர்வினையும் இருக்கும்.

பாரம்பரியமான உறவுமுறை சிதைந்திருக்கிறது. சொத்துரிமை முறையும் சிதைந்திருக்கிறது. நகர்மயமாதல் என்கிற போக்கும் சில மாற்றங்களை உண்டாக்கத்தான் செய்யும். இந்த விஷயங்கள் சிதைந்து கொண்டிருப்பதைக் கடுமையாக உணரும்போது அதற்கான மாற்றைத் தேடுகிற மனநிலை உருவாகும். ஆனால் தேடவிடாமல் உறவுகள் அதே நிலையில் இருப்பதான மயக்கத்தை ஏற்படுத்திக் கொண் டிருக்கிறன காட்சிவழி ஊடகங்கள். சிதைந்து கொண்டிருக்கிற கட்டமைப்பை உயிரோடு இருக்கிற மாதிரி காட்டுகின்றன இந்த ஊடகங்கள்.

**எதிலுமே நம்பிக்கையிழக்கிற மனநிலைக்கு மக்களைத் தள்ளுவது இன்னொரு அபாயத்தை விளைவித்துவிடுமில்லையா?**

நம்பிக்கையின்மை காரணமாகச் சில விதங்களில் சமூக மாற்றங்கள் நிகழும். முதலாவது வன்முறைகள், அதிலும் வக்கிரமான வன்முறைகள். இரண்டாவது குடும்ப அமைப்புகளில் அதிர்வுகள். இருந்தாலும் சாதி அமைப்பு சிதையவில்லை. ஏனென்றால் இன்னமும் அரசாங்கமும், காவல்துறையும் தராத பாதுகாப்பை, கிராமப்புறத் திலிருப்பவர்களுக்குத் தருகிறது சாதி. பொருளாதாரப் பாதுகாப்பைத் தராவிட்டாலும், உணர்வு ரீதியான பாதுகாப்பை அது தருகிறது. இன்னும் கூடுதல் பாதுகாப்பைப் பெற அரசியல் அதிகாரத்தைத் தேடுகிறது. எல்லாவற்றிக்கும் காரணம் பாதுகாப்புணர்வு. நகர்ப்புறங் களில் இந்தப் பாதுகாப்புணர்வைத் தொழிற்சங்கம் கொடுக்கிறது.



சாதி ஒழிப்பு என்பது சாத்தியமில்லை. சாதிக் கரைப்புதான் சாத்தியம். கலப்பு மணம் இதற்குத் தீர்வு என்றும் நான் நம்பவில்லை.

**ஹோலிப் பண்டிகைகளுக்கு இன்றைக்கு இங்கும் வரவேற்பிருக்கிறது. தேசியம் பரவலானஅடையாளமாக அதைச் சொல்கிறார்கள். கூடவே காதலர் தினம், அன்னையர் தினம் கொண்டாடுவதெல்லாம் எதனுடைய அடையாளம்?**

பல்வேறு பகுதிகளின் மொத்தக் கலாச்சாரத்தையே நாம் இந்தியக் கலாச்சாரம் என்ற சொல்கிறோம். திருவிழா என்பது ஒரு சமூகம் இளைப்பாறிக்கொள்கிற நிகழ்ச்சி. அதன் மூலம் அது புத்துயிர் பெறும். வெயிலில் நடப்பவன் நிழலில் ஓய்வெடுக்கிற மாதிரி. ஆனால் இளைப்பாறுவதையே முழுநேரத் தொழிலாக நமது ஊடகங்கள் ஆக்கிவிட்டன. ஒவ்வொரு திருவிழாவும், அந்த மக்களின் உற்பத்தி சார்ந்த வெளிப்பாடு. அறுவடை முடிந்து கோடைக் காலத்தில் நமது திருவிழாக்கள் வரும். இப்போது நுகர்வுக் கலாச்சாரத்திற்குத் தீனி போடக்கூடிய விஷயமாகிவிட்டன புதுப்புதுத் திருவிழாக்கள். சுயமான அறிவு உற்பத்தியும் சுயமாகப் பொருள் உற்பத்தியும் இருக்கிற இடத்தில்தான் அதற்கென்று தனிக் கலாச்சாரமும் இருக்கும். அதை நாம் இழந்துகொண்டிருக்கிறோம். திராவிட இயக்கங்கள் எழுச்சி பெறுகிற காலத்தில் பொங்கலைத் தமிழர்களின் திருநாளாக அடையாளம் காட்டினார்கள். இன்றைக்கு ஹோலிப் பண்டிகைக்கு வாழ்த்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் அதே இயக்கத் தலைவர்கள்.

பொதுநலம் பேசுகிறவர்கள் தன்னுடைய கோபஉணர்ச்சியைக் கைவிட்டுவிடக் கூடாது. அதுபோல மானஅவமானம் பார்க்கக் கூடாது. அப்படி எந்த எதிர்ப்பையும் மீறிச் செயல்பட்டவர் பெரியார். அவரிடம் இருந்த பொதுநலம் சார்ந்த கோபம்தான் இன்றையத் தேவை.

♦

நேர்காணல் செய்தவர் : மணா

தீராநதி, ஜூன், 2002

# 5

# மறுபடியும் மறுபடியும் பெரியாரிடம்

தமிழறிஞரும், சமூகவியல் ஆய்வாளருமான பேராசிரியர் தொ. பரமசிவன் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றுகிறார். அறியப்படாத தமிழகம், இதுதான் பார்ப்பனியம், பண்பாட்டு அசைவுகள், டங்கல் என்னும் நயவஞ்சகம் ஆகிய நூல்களையும் ஏராளமான சமூகவியல் இலக்கியக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். தமிழ்ச் சிறுபத்திரிகைகள், சூழல், சாதியம், முதலாளியம், பெரியாரியம் போன்றவை குறித்த கேள்விகளோடு 15 சனவரி 2003 அன்று பேராசிரியர் தொ. பரமசிவனை, நண்பர் லெனா குமாரின் துணையோடு நான் பாளையங்கோட்டையில் சந்தித்து உரையாடினேன்.

**தமிழ்நாட்டின் மைய அரசியல் பாஸிஸத்தை நோக்கி அசைந்து கொண்டிருக்கிறது. பொடா, மதமாற்றத் தடைச்சட்டம் போன்ற கொடிய சட்டங்களை எதிர்த்து வெகுசனங்களிடையே இயக்கங்களோ, கலகங்களோ பெரிய அளவில் தோன்றவில்லை. திராவிட இயக்கத்தின் வீறுமிகு சாதனைகள், வெறிகள் எல்லாமே துடைத்தெறியப்பட்டு விட்டன. மறுபடியும் பெரியாரைப் பார்ப்பனியம் வெற்றி கொண்டதா? இது எப்படிச் சாத்தியமாயிற்று?**

பெரியாரைப் பார்ப்பனியம் வென்றுவிட்டதோ என்றதொரு ஐயப்பாடு உங்களுக்கு ஏற்பட்டிருப்பது நியாயம்தான். புறநிலையில் நிகழும் மாற்றங்களைக் கவனிக்கும், சிந்திக்கும் யாருக்கும் இவ்வாறான ஒரு ஐயம் தோன்றும்தான். ஆனால் பெரியார் பார்ப்பனியத்தை வெல்ல புறப்பட்ட காலமும் இப்போதிருக்கும் காலமும் ஒன்றல்ல. இது குறித்துக் கவலையோடு சிந்திக்க நம்மைப்போல சிலரும் இருக்கிறோம் என்பதுதான் முக்கியமானது. இந்த வீழ்ச்சி வந்திருக்கக்



கூடாது. இவ்வீழ்ச்சி நிகழ்ந்ததற்கான காரணங்கள் பல. பெரியார் இறந்து முப்பது வருடங்களாகின்றன. பெரியாரிடத்திலே நம்மைப் போல கலைஇலக்கியவாதிகள் நூற்றுக்கு நூறு உடன்பட முடியாது. பெரியாருக்குக் கலை இலக்கியம் பற்றி எந்தவித உயர்ந்த அபிப்பிராயமும் கிடையாது. ஆனால் ஒரு தவறை – அந்தத் தவறை வரலாற்றில் கௌதம புத்தரும் செய்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன் – பெரியார் செய்தார். பெரியார் தன்னுடைய இயக்கத்துக்குப் பின்புலமாகச் சொத்துக்கள் இருந்தால் பலமாக இருக்கும் என்று கருதினார். அவருடைய மூதாதையரின் சொத்துக்களையும், அவரின் சொத்துக்களையும் சேர்த்து இயக்கம் பெரியதொரு சொத்துடைமை நிறுவனமாகிவிட்டது. பெரியார் இருக்கும்வரை எல்லோரும் சரியாக இருந்தார்கள். பெரியார் மறைந்த பின்பு ஒரு சொத்துடமை நிறுவனத்துக்கு இருக்கக் கூடிய எல்லாப் பலவீனங்களும் பெரியாரின் இயக்கத்துக்கும் வந்து சேர்ந்தது. பெரியார், கொள்கைகளை மாத்திரம் வைத்துவிட்டுப் போயிருப்பார் என்றால் இந்த வீழ்ச்சி நிகழ்ந்திருக்காது. பார்ப்பனியம் மறுபடியும் மேலெழுந்திருக்க முடியாது. பெரியார் தன்னுடைய இயக்கத்தைச் சொத்துடமை நிறுவனமாக்கியது பெரும் தவறு என்றுதான் நான் இப்போது அபிப்ராயப்படுகிறேன். இதற்கு அப்புறமாக இந்த நாடாளுமன்ற சனநாயகத்தின் பண்புகள், நேரு போன்ற சோசலிஸவாதிகளுக்குப் பின் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள். குறிப்பாக ராஜீவ் காலத்திலிருந்து மீண்டும் நேர் எதிர்த் திசையிலே பயணம் சென்ற கதை, இதையெல்லாவற்றையும் விடப் பெரிய கொடுமை பெரியாரைப் பின்பற்றியவர்கள், பெரியாரைப் பேசியவர்கள் நாடாளுமன்றத்திற்குள் புகுந்து அதிகாரத்தைக் கைப்பற்றியபோது அதிகாரம் அவர்களைக் கொள்கைகளிலிருந்து அந்நியப்படுத்திக் கொண்டே போனது. 1967இல் இருந்து 2003 வரை கிட்டத்தட்ட முப்பத்தைந்து வருடங்களாக அவர்கள் புறப்பட்ட இடத்திலிருந்து நேர் எதிர்த்திசையிலேயே பயணப்படுகிறார்கள்.

இது தவிர மின்னியல் ஊடகத்தின் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்கது. நூற்றுக்கு எழுபது பேருக்கு மட்டுமே கையெழுத்துப்போட தெரிகிற நாட்டிலே மின்னியல் ஊடகங்கள் காட்சிரீதியாக ஒரு மனிதனிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும் செய்திகளை, எழுத்து ஊடகத்தால் செய்ய முடியவில்லை. நீங்கள் நான்கு நாவல்கள், நானூறு சிறுகதைகள், இருநூறு திறனாய்வு நூல்கள் எழுதி எவ்வளவு பேரைச் சென்றடைய முடியுமோ அவ்வளவு பேரிடமும் ஒரு பத்து நிமிடச் செய்தியாலோ, இருபது நிமிட நாடகத்தாலோ உங்கள் கருத்துக்கு, நேரெதிரான கருத்துக்களை மின்னியல் ஊடகங்கள் பரப்பிவிடுகின்றன.

ஆனால் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. பெரியார் தனது போராட்டத்தைத் தொடங்கும் போது அவரைப் பின்பற்றி சிந்திக்கக் கூடிய, எளிய மனிதர்கள் இருக்கவில்லை. இன்றைக்கு மிகக் கூர்மை யான சிந்தனையுடன் எளிய மக்களிடமிருந்து தோன்றிய பெரியாரியல் வாதிகள் இருக்கிறார்கள். இன்னும் சில இழப்புக்குப் பிறகு, உலக மயமாக்கல் பொருளாதார கலாச்சார, இழப்புக்களை நாம் உணர்ந்த பிறகு பெரியாருக்குத் திரும்புவதைத் தவிர, தமிழருக்கு வேறு வழி இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

எளிய மனிதர்களிடமிருந்து தோன்றிய சிந்தனையாளர்கள் பெரியாரியத்தை நோக்கித் திரும்புவார்கள் என்கிறீர்கள். ஆனால் இவ்வாறான பல சிந்தனை யாளர்கள் மூர்க்கமாகத் தற்போது பெரியாரை எதிர்க்கிறார்களே? சிவகாமி, ரவிக்குமார் போன்ற தோழர்கள் பெரியாரை சாதி இந்து மனநிலை உடையவர் என்றெல்லாம் கூடப் பழிக்கிறார்கள். பேராசிரியர் வீ. அரசு ஈரோட்டுப் பாதை சரியா? என்ற ஜீவாவின் நூலைப் பதிப்பித்துள்ளார். இவற்றுக்கு என்ன சொல்கிறீர்கள்?

ஜீவானந்தத்துடைய ஈரோட்டுப் பாதை சரியா? என்ற நூலை அரசு அவர்கள் வேண்டுமென்றே பதிப்பித்துள்ளார். விருப்பத்துடன் பதிப்பித்துள்ளார் என்று சொல்லமுடியாது. வேண்டுமென்றே பதிப்பித்துள்ளார் என்றே நான் கருதுகிறேன். அந்நூலைப் படித்தபின் நமக்கு என்ன தோன்றுகிறது? மார்க்ஸியவாதிகள் பெரியாரிடம் எப்படித் தோற்றுப் போனார்கள் என்பதை ஏற்கனவே எஸ்.வி. ராஜதுரை 'பெரியார் : சுயமரியாதை சமதர்மம்' என்னும் நூலிலே நிறுவியுள்ளார். ஜீவா தமிழ்நாட்டிலே மார்க்ஸியம் பேசியவர்களிடையே மிக நேர்மையான மனிதர். வார்த்தையும் வாழ்க்கையும் ஒன்றுபோல் வைத்திருந்தவர். இலக்கியத்துக்கும் கட்சிக்கும் முடிச்சுப்போட்ட முதல் ஆள் அவர். அவர் அக்கட்டுரைகளை எழுதியதற்குப் பின்பாக நடந்த மாற்றங்கள் இடதுசாரி இயக்கங்களிடையே ஏற்பட்ட பிளவுகள், திரிபுவாதங்கள், மொழி, சாதி இவை இரண்டு தளங்களின் மேலும் அவர்கள் சிந்திக்க மறுத்தது, அதை உணர்ந்து இப்போது இறங்கி வருவது போன்ற நிகழ்வுகளுடன் பொருத்தி இந்த நூலைப் படித்த பிறகு ஈரோட்டுப் பாதைதான் சரியானது என்ற இடத்துக்கு நான் வந்திருக்கிறேன்.

வல்லினம் பத்திரிகையிலே 'பெரியார் சிந்தனையாளர் அல்ல' என்று ரவிக்குமாரின் நேர்காணல் வெளியான போது வல்லினம் ஆசிரியர்கள் என்னை அந்த நேர்காணலுக்கு எதிர்வினையாற்றுமாறு கேட்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு ஒரு சிறிய கடிதம் எழுதினேன். அது மறுஇதழிலே வெளிவந்திருக்கிறது. என்னுடைய எதிர்வினை என்னவெனில், இந்த நேர்காணலில் ரவிக்குமாரின் முகத்தை விட அ.மார்க்ஸின் முகமே தூக்கலாகத் தெரிகிறது. ரவிக்குமார் போன்ற வர்கள் செய்கிற வேலை வைக்கோல் போரில் கூளம் பிடுங்குவது போல பெரியாரை வெட்டியும் சிதைத்தும் குறுக்கியும் மேற்கோள் காட்டும் சோ. ராமசாமி செய்யும் வேலை; நண்பர் ரவிக்குமார் நெஞ்சாரப் பொய் சொல்கிறார்.



தவிரவும், பெரியார் தனது காலத்திலே சூத்திரன் என்ற வார்த்தையை நம் எதிரியிடமிருந்து பெற்றே பிரயோகித்தார். பிராமணன், சூத்திரன் என்பது பார்ப்பான் கற்றுத்தந்த வார்த்தை. அந்த வார்த்தையை வைத்துக் கொண்டுதான் அன்றைய கால கட்டத்தில் பெரியாரால் பேச முடிந்தது. சூத்திரன் என்றொரு சாதியே கிடையாது. திராவிட இயக்கத்தின் தோற்றுவாயாகப் பார்ப்பனர் அல்லாதோர் அறிக்கை வெளியிட்டார்கள். அப்போது அன்னி பெசன்ட் ஒரு வாதத்தை வைக்கிறார். அப்போது காலமெல்லாம் அன்னிபெசன்டை எதிர்த்துவந்த சுப்பிரமணிய பாரதி அன்னிபெசன் டோடு இந்த விசயத்தில் உடன்பாடு கொண்டு பிராமணர் அல்லாதோர் என்றொரு ஜாதியே கிடையாது. 'திராவிட இயக்கத்தின் ஆரம்பமே பொய்' என்று எழுதுகிறான். சூத்திரன் என்ற சொல் மீது பெரியாருக்கு நம்பிக்கையே கிடையாது. ஆனால் அந்தக் காலகட்டத்தில் நம் எதிரியின் சொல்லாடலான அந்தச் சொல்லைத்தான் பெரியாரும் உபயோகிக்க வேண்டிவந்தது. காலம் என்றவொரு பிராமணத்தைக் கருத்திலேயே எடுக்காமல் பெரியாரின் ஒரு சில வார்த்தைகளில் தொங்கிக் கொண்டு சிவகாமி, ரவிக்குமார் போன்றவர்கள் பெரியார் மீது வைக்கும் விமர்சனம் தங்களை அடையாளம் காட்டும் முயற்சியே அன்றி பெரியாரை அடையாளம் காட்டும் முயற்சி அல்ல. அன்று இந்தியாவைப் பற்றி கார்ல்மார்க்ஸ் எழுதியவற்றின் மேல் நமக்கு இன்று விமர்சனம் உண்டல்லவா? அவர் இந்தியாவைப் பற்றி எழுதும் போது பல அறிவுத் துறைகள் பிறக்கவே இல்லை. இன்னும் சொல்லப் போனால் இந்தியன் என்று ஒருவனே அப்போது கிடையாது; இப்போதும் கிடையாது. காலங்களுக்கு உரிய நியாயங்களுடன் பெரியாரைப் பொருத்திப் பார்க்க வேண்டும். அப்படியல்லாத விவாதங்கள் பெரியாருக்கு நியாயம் இழைக்காதவை.

இன்று சாதிய விடுதலைக்கான பாதை குறித்துப் பல்வேறு தரப்பினரால் பல்வேறு சாத்தியங்கள் முன்வைக்கப்படுகின்றன. தோழர் சந்திரபோஸ் போன்றவர்கள் தமிழ்த் தேசிய விடுதலை சாத்தியமின்றி சாதிய விடுதலை சாத்தியமில்லை என்கிறார்கள். தமிழ்த் தேசியம் குறித்து உங்கள் கருத்து என்ன?

தமிழ்த் தேசியத்தைப் பெரியார் தனது பணியைத் தொடங்கிய காலத்திலிருந்து கொஞ்சம் தள்ளித்தான் வைக்கிறார். 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் முப்பதுகளின் கடைசியில்தான் வருகிறது. திருச்சியிலே மாநாடு நடத்துகிறபோது அதிலே கரு. முத்து தியாகராச செட்டியார் போன்ற ஆலையதிபர்கள் உட்பட பலர் கலந்து கொள்கிறார்கள். ஆனால் தமிழ்த் தேசியம் குறித்துப் பெரியார் பேசும்போது, தேசியம் வேறு, சாதி விடுதலை வேறு என்று பேசவில்லை. இவை இரண்டையுமே அவர் அருகருகாக வைத்தே பேசினார். அதைத் தெளிவாக உள்வாங்கிக் கொண்டுதான் 'சாதி களைந்திடல் ஒன்று, நல்ல தண்டமிழ் வளர்த்தல் மற்றொன்று' என்ற இரு கடமைகளை முன்னிறுத்தி பாரதிதாசன் பாடுகிறார். சாதிய விடுதலையைத் தள்ளி வைத்துவிட்டுத் தமிழ்த் தேசிய விடுதலையோ, தேசிய விடுதலையைத் தள்ளி வைத்துவிட்டுச் சாதிய விடுதலையோ சாத்தியமற்றது என்பது தான் பெரியாரின் கருத்து. எனவே, இவை இரண்டையும் தனித்தனியாகப் பார்க்கக் கூடாது என்றே நான் நினைக்கிறேன்.

**பெரியார் பல சந்தர்ப்பங்களில் தேசாபிமானத்தைக் கண்டிக்கிறார். தன்னையொரு தேசத்துரோகி என்றும் அழைக்கிறார். நமது மொழி, சாதி காப்பாற்றுவது என்கிறார். இவையெல்லாம் தமிழ்த் தேசியம் உட்பட எல்லாத் தேசியங்களையும் அவர் எதிர்த்ததன் வெளிப்பாடல்லவா?**

ஆம். பெரியார் தன் இலட்சியங்களில் தெளிவாய் இருந்தார். அதற்காக எதுவேண்டுமானாலும் செய்யத் தயாராகவிருந்தார். தேசாபிமானத்தைக் கண்டிக்க வேண்டிய வேளையில் அவர்தான் கண்டித்தார். தமிழ்நாடு தமிழருக்கே என்றும் அவர்தான் சொன்னார். தமிழ்மொழி மேல் பெரியாருக்கு உயரிய பற்றெல்லாம் கிடையாது. பெரியார் தெளிவாகத் தன் பொதுவாழ்க்கையைப் பற்றி எழுதுகிறார். 'இந்த நேரத்தில் இந்தப் பணி அவசியமாய் இருப்பதாலும், இதைச் செய்ய வேறு யாரும் முன்வராததாலும், எனக்கு இதைத் தவிர வேறு பற்றுக்கள் இல்லாத காரணத்தாலும் நான் பொதுவாழ்க்கையில் ஈடுபடுகிறேன்' என்கிறார். அவர் பற்றற்றவர். அவர் புத்தகங்களிருந்து பாடம் கற்றுக் கொண்டவரல்லர். அவர் தனது கடைசிக்காலம் வரை தீராத வாசிப்புப் பழக்கம் உடையவராய் இருந்தபோதிலும் அவர் நிகழ்வுகளிலிருந்து பாடம் கற்றுக் கொண்டவர். மக்களிடமிருந்து கற்றுக் கொண்டவர். அவரே தேர்தலில் பார்ப்பனர்களை ஆதரிக்கிறார். அவர் அனுபவங்களின் மாணவர். தனது விடுதலை இலட்சியங்களை அடைவதற்காக எது வேண்டுமானலும் செய்யக் கூடியவர் பெரியார்.



**நமது பண்பாடு, மரபு, இலக்கியம் எல்லாவற்றையுமே ஒழித்துக் கட்ட வேண்டும் என்கிறாரே பெரியார். தமிழ்ப் பண்பாட்டுப் பலங்களை ஆழமாக ஆராய்ச்சி செய்தவர் என்ற முறையில் உங்களின் கருத்து என்ன?**

பெரியார் காலத்திலே சமூகம் பண்பாடு பற்றிய புரிதல்கள் நம்மைப் போன்ற ஆய்வாளர்களுக்கோ, மாணவர்களுக்கோ மிகவும் குறைவு. பெரியாருக்குப் பின்பு முப்பது வருடங்கள் போய்விட்டன என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

நம்முடைய மரபுக்குள்ளேயே ஒரு கலக மரபு இருக்கிறது. இந்தக் கலக மரபுகள் நமது இன்றைய கருத்தியல் போராட்டங்களுக்கு ஆதாரமாக நிற்கின்றன. பெரியாருடைய இலக்கியக் கோட்பாடுகளை நாம் இன்று ஏற்றுக்கொள்ள முடியாது என்பது போல, மரபு பண்பாடு குறித்த பெரியாரின் பார்வைகளையும் அன்றைய கால கட்டத்தின் பார்வைகளாகவே நாம் கருதவேண்டும். பெரியாரோடு சிந்தனை நின்றுவிடவில்லையே. பெரியாரைத் தொடர்ந்தும் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். நம்மைப் பெரியார் சிந்திக்க வைக்கிறார். மேலே போகப் போக வேறுபல வெளிச்சங்கள் தென்படுகின்றன.

நமது பண்பாடுகளுக்குள்ளேயே பல புரட்சிகரமான அம்சங்கள் உண்டு. அதாவது கார்ல்மார்க்ஸ் சொன்னது போல 'காலந்தோறும் ஒடுக்குமுறை இருந்திருக்கிறது என்றால் அதற்கு எதிரான கலகக் குரலும் காலம்தோறும் இருந்து கொண்டேயிருக்கிறது.' இது நம் வாழ்வியலில் தொடர்ச்சியாகப் பதிவாகியிருக்கிறது. பார்ப்பானைச் சாமி என்றுதான் சொன்னார்கள். ஆனால் நாட்டுப்புறங்களிலே எளிய சனங்களிடையே பார்ப்பானைப் பற்றிப் புழங்கும் வசைமொழிகளை நினைத்துப் பாருங்கள். அதுவும் நமது பண்பாடுதானே. நமது பண்பாடுகளுக்குள்ளும் பலமான வேர்கள் இருக்கின்றன. அவற்றைப் பிடித்துக் கொண்டு மேலே மேலே போகலாம் என்பது எனது கருத்து.

**நம்முடைய பண்பாடு என்கிறீர்கள். தமிழ்ப் பண்பாடு என்பது ஆதிக்க சாதிகளால் கட்டப்பட்ட பண்பாடுதானே. இந்த ஆதிக்கசாதிப் பண்பாட்டை நமது பண்பாடாக நாங்கள் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?**

இந்தக் கேள்வி நிரம்ப நாட்களாகவே கேட்கப்பட்டு வரும் கேள்வி. என்னைப் போன்ற ஆய்வாளர்கள் புத்தகங்களை மட்டும் நம்புபவர்கள் அல்லர். பேருந்து வசதிகள் கூட இல்லாத கிராமங்களுக்கும் சென்று அம்மக்களின் வாழ்வியலைக் கண்டு வருபவர்கள். பண்பாடு என்பதை விட நான்கு தென் மாநிலங்களையும், துளுவையும் உள்ளடக்கிய திராவிட மொழி பேசுபவர்களின் பண்பாடு என்றுதான் வகைப் படுத்த வேண்டும். திராவிடப் பண்பாடு என்று எதைச் சொல்வது?

அடையாளம் காட்ட முடியுமா? என்று ஒருமுறை என்னைக் கேட்டார்கள். திராவிடப் பண்பாட்டில்தான் பார்ப்பனர்கள் தனியாகவும், பார்ப்பனர்கள் அல்லாத எல்லாச் சாதிகளுக்கும் பொதுவான அம்சங்கள் நிறையவும் ஒவ்வொரு சாதிக்குமான சின்ன சின்ன தனியான பண்பாட்டு அசைவுகள் இருப்பதையும் நான் பார்க்கிறேன். எடுத்துக்காட்டாக நான் மூன்று செய்திகளை முன் வைக்க விரும்புகிறேன்.

ஒன்று: தாய் மாமனுக்கான மரியாதை. ஒரு தாய் வழிச் சமூகத்தின் எச்சப்பாடாக, திராவிடமொழி பேசுகிற எல்லா மக்களிடத்திலும் தாய் மாமனுக்கான மரியாதை என்பது ஒரு ஒற்றுமைக் கோடு. இது பார்ப்பனர்களிடம் கிடையாது. பிற்காலத்தில்தான் அவர்கள் இதை நம்மைப் பார்த்து கடைப்பிடித்து தாய் மாமன் மகளை யெல்லாம் திருமணம் செய்து கொண்டார்கள்.

இரண்டு: இறந்த உடலுக்கான மரியாதை. இந்த மரியாதையைப் பொறுத்த அளவில் நம்மிடமிருந்து துல்லியமாக, வெளிப்படையாகப் பார்ப்பனர்கள் வேறுபட்டு நிற்கிறார்கள்.

மூன்று: வீட்டுக்கு வெளியே பெண்ணின் மீது நிகழ்த்தப்படும் வன்முறை. வீட்டுக்குள்ளே மனைவியை அடிப்பவர்கள் இருக் கிறார்கள். அது தமிழ்நாட்டிலே, இந்தியாவிலே அன்றாட நிகழ்வு தான். வீட்டுக்கு வெளியே பெண்மீது நிகழ்த்தப்படும் உடல் வன்முறையை திராவிடப் பண்பாடு கண்டிக்கிறது. வீதியிலே வைத்து மனைவியை அடித்தால் அடுத்த வீட்டுக்காரன் குறுக்கே வருவான். 'உன் வீட்டுக்குள் வைத்து அடி, தெருவிலே அடிக்காதே' என்று தடுப்பான். அதே போல் பேருந்துக்குள் ஒரு நிறை சூலி ஏறினால் எழுந்து இடம் கொடுப்பார்கள். பேருந்துக்குள் சாதி இல்லை. கர்ப்பிணிப் பெண் சலுகையளிக்கப்பட்ட பெண்ணாகவே நமது பண்பாட்டில் பார்க்கப்படுகிறாள்.

இந்த மாதிரியான நிறையக் கூறுகள் திராவிடப் பண்பாட்டிலே உள்ளது. அதுதவிர சாதி சார்ந்து, வட்டாரம் சார்ந்து ஒவ்வொரு சாதிக்கும் வட்டாரத்துக்குமான சில பண்பாட்டு அசைவுகள் உள்ளன. இந்த அசைவுகூட ஒரு சாதிக்கு எல்லா இடத்திலும் பொதுவாய் இராது. அவை வட்டாரம் சார்ந்து வேறுபடும். எனவே தலித் பண்பாடு, தமிழ்ப் பண்பாடு என இரண்டாக வேறு வேறாக என்னால் பார்க்க இயலவில்லை. இது களஆய்வு எனக்குக் கற்றுத்தந்த பாடம். எல்லாச் சாதிகளுக்கும் தனித் தனியான பண்பாட்டு அசைவுகள் இருப்பது போன்று தலித்துக்களுக்கும் சாதி சார்ந்து, உட்பிரிவு சார்ந்து,



வட்டாரம் சார்ந்து சில அசைவுகள் இருக்கின்றன. இந்த அசைவுகள் காரணமாகத்தான் உட்பிரிவுகளே பிறந்திருக்கின்றன. எனவே தலித் பண்பாடு, தமிழ்ப் பண்பாடு எனப் பிரிப்பதில் எனக்கு உடன்பாடு கிடையாது.

நீங்கள் சொன்ன ஒரு உதாரணத்திலிருந்தே ஒரு கேள்வி. பேருந்துக்குள் சாதி இல்லை என்கிறீர்கள். தலித் மக்களை இந்தத் திராவிடப் பண்பாடுதானே பேருந்திலேயே ஏறக்கூடாது என்றும், அப்படியே ஏற அனுமதித்தாலும் இருக்கையில் உட்காரக் கூடாது என்றும் ஒடுக்கியது. எனவே திராவிடப் பண்பாட்டிலேயே ஒடுக்கும் சாதியின் பண்பாடு, ஒடுக்கப்பட்ட சாதியின் பண்பாடு என இரண்டு இருக்கிறது அல்லவா? அதாவது தமிழ்ப்பண்பாடு என்கிற ஆதிக்கச் சாதிப் பண்பாடு, தலித் பண்பாடு எனப் பண்பாடு இரண்டாகத் தானே கிடக்கிறது?

ஒடுக்குமுறைக்குக் காரணம் சாஸ்திரம் சார்ந்தது கிடையாது. சொத்துடமை சார்ந்த விடயம் அது. தன்னுடைய உலக வாழ்வின் இன்பங்களை யாரும் பறித்துவிடக்கூடாது என்றும் அவ்வின்பங் களைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்றும் நிகழ்த்தப்படுவதே ஒடுக்குமுறை. ஒடுக்கும் மக்களும் ஒடுக்கப்படும் மக்களும் எழுத்தறி வற்றவராய் சாஸ்திரம் அறியாதவராய்க் கூட இருப்பர். ஆனால் பார்ப்பனியப் பண்பாடு இந்த சொத்துடமை சார்ந்த, ஒடுக்குமுறையை நியாயப்படுத்துவதற்காக அதை பண்பாட்டு ஒடுக்குமுறையாகக் கற்பித்து அதை நியாயப்படுத்தவும் செய்தது. சாதியை நியாயப் படுத்தும் எந்த நூலும் பண்டைய தமிழில் கிடையாது.

தமிழிலே சாதி ஒடுக்குமுறைக்கான எல்லாச் சிந்தனைகளும் வாழ்க்கையையும் பார்ப்பனிய மேலாண்மையையும் அதை நியாயப் படுத்தும் வடமொழிப் பனுவல்களையும் ஏற்றுக் கொண்ட பின்பு தான் தொடங்குகிறது.

தமிழ்ச் சிறுபத்திரிகைச் சூழலில் நான் அவதானித்த விடயம் கடந்த பதினைந்து வருடங்களாக அதாவது பிரம்மராஜன், சாருநிவேதிதா, கோணங்கி தலை முறைக்குப் பின்னான தலைமுறையில் பெயர் சொல்லுமளவுக்கு ஒரு ஒத்தப் பார்ப்பான் இலக்கிய, தத்துவார்த்தப் புலங்களில் இல்லை. எப்படியிருக்கிறது தமிழ் சிறுபத்திரிகைச் சூழல்? உங்களுக்கு இச்சூழல் நிறைவளிக்கிறதா?

இந்த இலக்கியப் போக்குகள் நிறைவளிக்கிறதா? என்று கேட்டால் அது வேறு. ஆனால், ஒன்று இவர்கள் உறங்கிக் கொண்டிருக்கவில்லை. இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஐம்பதுகளிலே ஏ.சி. செட்டியார் மைய அரசினுடைய சாகித்ய அக்காதெமிக்காகத் தொகுத்த சிறுகதைக் களஞ்சியம் என்றொரு நூல் வெளிவந்தது. நான் மாணவனாக இருந்த போது எங்களுக்கெல்லாம் அது பாடமாக வைக்கப்பட்டிருந்தது.

அகிலன், புதுமைப்பித்தன், அழகிரிசாமி, வெங்கட்ராம் இருந்தார் என்று நினைக்கிறேன். இவர்கள் தவிர பதினெட்டுச் சிறுகதைகள் அடங்கிய அத்தொகுப்பிலே மிகுதி எழுத்தாளர்கள் எல்லோருமே பார்ப்பனர்கள். அறுபதுகளின் கடைசிப் பகுதியிலிருந்து சிறுகதை, நாவல் இரண்டு துறைகளும் பார்ப்பனர்களிடமிருந்து தமிழர்களால் பறிக்கப்பட்டுவிட்டது. அதைத் தொடர்ந்து எழுபதுகளின் கடைசிப் பகுதியில் நாடகத்துறையும் பார்ப்பனர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது. இன்று மறுபடியும் பார்ப்பனர்கள் மெல்ல இந்த இரும்புக் கோட்டைக்குள் நுழைய முயல்கிறார்கள். ஆனால் பாலகுமாரன் ஒரு கதை எழுதினால் உடனே எதிர்வினை வருகிறது. 'இந்தியா டுடே' இலக்கிய மலர் வெளியிட்டால் உடனே கடுமையான விமர்சனம் வருகிறது. எனவே பார்ப்பனர் அல்லாதோரின் எழுச்சியின் சில நியாயங்களையாவது ஒத்துக் கொண்ட மாதிரி, பார்ப்பனர்கள் எழுத வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இல்லாவிட்டால் சுஜாதா திருக்குறளுக்கு உரை எழுத வருவாரா?

**நீண்ட காலமாகவே ஈழத்துக்கும் தமிழகத்துக்குமான இலக்கிய உறவுகள் உள்ளன. இந்தப் பின்னணியில் நீங்கள் ஈழத்து இலக்கியப் போக்குகளை அவதானித்துள்ளீர்களா? இன்றைய ஈழத்து எழுத்துக்கள் குறித்து உங்கள் மதிப்பீடுகள் என்ன?**

ஆறுமுகநாவலர் காலத்திலே அவர்கள் ஈழம் வேறு தமிழகம் வேறு என்று பிரித்துப் பார்த்தது கிடையாது. அதற்குப் பின்னர் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே பாண்டித்துரைத் தேவர் தமிழாராய்ச்சி உலகுக்குத் தனது பங்களிப்பாகச் 'செந்தமிழ்' என்ற இதழைத் தொடங்குகிறார். ஆசிரியராக முதலிலே இரா.ராகவ அய்யங்காரும் பிறகு மு. இராகவ அய்யங்காரும் இருக்கிறார்கள். இந்தப் பத்திரிகையிலே 1925 வரை – பெரியார் தேசிய இயக்கத்திலிருந்து வெளியேறும் வரை – யாழ்ப்பாணத்து அறிஞர்கள் நிறையப் பேர் இதிலே எழுதியிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் கணேசய்யர், வல்லைக் குமாரசாமிப்புலவர், வீ.கனகசபை, காசிவாசி செந்திநாதய்யர், சுன்னாகம் அ. குமாரசாமிப் பிள்ளை, நா. கதிரைவேற்பிள்ளை, சு. முத்துத் தம்பிப்பிள்ளை, கல்குளம் குப்புசாமி அய்யர், தி. சதாசிவம் பிள்ளை, மு. சாம்பசிவனார் என நிறைய பேர் எழுதியுள்ளார்கள். பின் 1930களிலே ஈழத்தையும் தமிழகத்தையும் இணைப்பவராக விபுலானந்த அடிகள் இருந்தார். அதன்பின் அறுபதுகளிலே கைலாசபதி, சிவத்தம்பி போன்ற அறிஞர்கள் அந்த உறவைப் புதுப்பிக்கிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதிகளில் ஈழத்து எழுத்தாளர்களின்



செயற்பாடுகள் குறித்து நாம் ஆய்வுகள் நடத்தி தொகுத்தல் அவசியம். இதுபற்றி நான் கா. சிவத்தம்பியிடம் பேசியுள்ளேன்.

இப்போது உள்ள ஈழத்து இலக்கியம் பற்றி என்ன கருதுகிறேன் என்றால் ஈழத்து இலக்கியம் சிறுகதை, கவிதை போன்றவற்றில் மிகவும் நிறைவளிக்கக்கூடியதாக இருக்கிறது என்றே கருதுகிறேன். எதிர் காலத்தில் தமிழ்நாட்டு இலக்கியத்துக்கு வழிகாட்டக் கூடியனவாய் ஈழத்து இலக்கியம் அமையும். தவிரவும் ஈழத்தில் நடைபெறும் கருத்துப் போர்களில் தமிழ்நாடு போல நான் என்ற தன்முனைப்பு முன்னிறுத்தப்பட்டு விவாதப் பொருள் பின்தள்ளப் படுவதில்லை. இது மிக ஆரோக்கியமான போக்கு.

**இன்று நமது இந்து சமூகங்களில், ஈழத்திலோ, இந்தியாவிலோ இருக்கக்கூடிய முதன்மையான ஒடுக்குமுறையும் கொடுமையும் சாதியமே ஆகும். சாதி விடுதலையைச் சாதிக்க வித்தியாசம் வித்தியாசமான அமைப்புகளும், இயக்கங்களும் ஒன்றுக்கொன்று முரணான வேலைத்திட்டங்களை முன் வைக்கிறார்கள். ஆயுதப்பாதை, தேர்தல்பாதை, சீர்திருத்தம், தமிழ் அடையாளம் என்றெல்லாம் பல போக்குகள் வரையப்படுகின்றன. இது குறித்து நீங்கள் என்ன சிந்திக்கிறீர்கள்? எமது சமூகத்தின் சாதிய விடுதலை எவ்வழியில் சாத்தியப்படும்?**

இது ஒரு ஆழமான சிந்தனையைக் கோரும் கேள்வி. இதற்கு ஒரு தனி மனிதரால் பதில் சொல்ல முடியும் என்று எனக்குத் தோன்ற வில்லை. சாதி பற்றிய முறையான புரிதல்களே நமக்கு இதுவரை கிடைக்கவில்லை. தொடக்கத்தில் சாதி பற்றிய எழுதப்பட்ட ஆய்வுகள் எல்லாம் ஐரோப்பாவில் இருந்து வந்தவர்களாலேயே எழுதப்பட்டன. அதுதவிர ஒரு சாதியினுடைய அசைவைப் பற்றிய அதனுடைய போர்க்குரல் பற்றிய போதுமான பதிவுகள் எல்லாம் நம்மிடத்தில் இல்லை. இங்கே சாதிப்பிரச்சினையின் ஆழமும் அகலமும் விரிவும் நாம் நம்பிக் கொண்டிருப்பவையைவிட மிக மிக பெரியன. குறிப்பாகக் காலமும் வெளியும் பங்கிடப்பட்ட முறைமையை நாம் உடைத்தெறிய வேண்டும். காலப் பங்கீடும், வெளிப்பங்கீடும் 1800 வருடங்களுக்கு முன்பே இங்கே ஒழுங்கமைக்கப்பட்டுவிட்டன. காலம் காலமாய் அதை நுணுக்கமாகச் செதுக்கிச் செதுக்கித் தமிழ்ச்சாதி அமைப்பு முறையை உண்டாக்கிவிட்டார்கள். இது எப்போது ஆழமானதென்றால் தமிழ் வரலாற்றிலே ஆறு நூற்றாண்டு காலம் அரசியல் அதிகாரம் தமிழர்களிடம் இல்லை. அப்போதுதான் இது மிகக் கொடுமையானதாக ஆக்கப்பட்டது. பின்பு காலனி ஆட்சி யாளர்கள் பங்கிடப்பட்ட வெளிகளிலே கை வைக்கவில்லை. அவற்றைத் தேசவழமைச் சட்டங்களாக்கிவிட்டார்கள். மன்னர்

காலங்களிலே மன்னர்களை அண்டிப்பிழைத்த உயர்சாதியினர் எனப்பட்டவர்கள் காலனி ஆட்சிக்காலத்தில்தான் நேரடியாகப் பெருமளவு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அது காலங்காலமாக இன்றுவரை தொடர்கின்றது. இந்திய அரசியல் சட்டம் வரை தொடர்ந்தது. எனவே காலப்பங்கீடு, வெளிப்பங்கீடு ஆகிய முறைமைகளை உடைப்பதற்கான திட்டம் என்ன? ஒரு கூட்டுச் சிந்தனையூடாகத்தான் அதை உடைக்கலாம் என நான் கருதுகிறேன்.

உலகமயமாக்குதல் என்பது தவிர்க்க முடியாததே எனச் சில மேலைத்தேய அறிஞர்கள் கருதுகிறார்கள். உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி எப்படி கைவினைச் சங்கங்களிடமிருந்து உற்பத்தியை விடுவித்து தேசமயமாக்கியதோ அதே போன்று இன்றைய காலத்தில் உற்பத்தி சக்திகளின் அபரித வளர்ச்சி என்பது தேச எல்லைகளை உடைத்து உலகமயமாவதை நாம் எதிர்கொண்டு உற்பத்தியையும் விநியோகத்தையும் நியாயமாகப் பங்கீடு செய்ய வேண்டும் என்பது அவர்கள் கருத்து. மூன்றாம் உலக இடதுசாரிகள் உலகமயமாக்கலை கடுமையாக எதிர்க்கிறார்கள். இதிலே உலகமயமாக்கல் மூலம் தலித்துக்கள் பொருளுற்பத்தியில் நேரடியாகப் பங்கு கொண்டு ஓரளவு பொருளியல் முன்னேற்றத்தைச் சாத்தியப்படுத்தலாம் என்றும் சில தலித் அறிஞர்கள் கூறுகிறார்கள். இது குறித்து உங்கள் கருத்து என்ன?

நான் ‘டங்கல் என்னும் நயவஞ்சகம்’ என்றொரு சிறு நூல் வெளியிட்டுள்ளேன். இனி ஒரு உலகப் போர் வராது. ஏனெனில் உலகப் போரைத் தவணைமுறையில் நடத்திக் கொள்ள ஏகாதிபத்தியம் கற்றுக் கொண்டுவிட்டது. எனவே உலகமயமாக்கல் என்பது ஒரு கொடுமையான பொருளாதாரச் சுரண்டல் மட்டுமல்ல அதைவிடப் பன்மடங்கு மோசமான கலாச்சாரச் சுரண்டல் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில் சுயமான பொருளுற்பத்தி, சுயமான அறிவுற்பத்தி இவை இரண்டும் தங்களைத் தவிர வேறு எவரிடமும் இருக்கக் கூடாது எனக் கருதித் திட்டமிட்டு அழிக்கிறார்கள். ஆனால் உலகமயமாக்கலிலே வேறு சில விளைவுகளும் உண்டு. குறிப்பாக இந்தியாவினுள்ளே கணிப்பொறியியல் வருகை எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத் தது. ஏனெனில் அதுவொரு பயனுறு அறிவியல். வெள்ளைக்காரன் கொண்டுவந்த சூத்திரங்களை மனனம் செய்யும் பார்ப்பனர்களுக்குச் சாதகமான கல்விமுறையைக் கணிப்பொறி உடைத்துள்ளது. உனக்கு என்ன மனப்பாடம் செய்ய தெரியும்? என்ற கேள்வியைத் தவிர்த்து உனக்கு என்ன செய்ய தெரியும் என்ற கேள்வி கல்வித் துறையிலே கேட்கப்படும் நிலை தோன்றியுள்ளது. இது நமக்குச் சாதகமான சில பின்விளைவுகளை உண்டாக்கும்.



ஒரு காலத்திலே கிராமத்திலிருந்து பார்ப்பனர்கள் நகரங்களுக்குச் சென்று குடியேறினார்கள். மற்றச் சாதியினர் நகரமயமானதுக்கும் இடையே ஒரு பெரும் வித்தியாசம் உண்டு. பார்ப்பனர்கள் அதிகாரங்களைத் தேடி, இழந்து போன அதிகாரங்களை மீட்டெடுக்கும் முயற்சியிலே நகரங்களுக்குக் குடிபோனார்கள். நகரங்களின் பெரும் பதவியை கைப்பற்றினார்கள். முதலில் மாவட்டத் தலைநகர்களுக்குப் போனார்கள். அங்கும் நம்மவர்கள் சென்றபோது, சென்னைக்குப் போய் மாம்பலம் போன்ற புதிய குடியிருப்புக்களை உருவாக்கினார்கள். அங்கும் நம்மாட்கள் போனபோது அவர்கள் வட இந்தியாவை நோக்கி நகர்ந்தார்கள். மாதுங்கா, சௌத்பிளாக் போன்ற இடங்களைக் கையகப்படுத்தினார்கள். பின் தம் பூர்வதேசம் என்ற பெருமையோடு இங்கிலாந்துக்குப் போனார்கள். இங்கிலாந்தின் கை தளர்ந்த போது அமெரிக்காவுக்குப் போனார்கள். ஆனால் இன்றைக்கு அமெரிக்காவிலே இருக்கக்கூடிய இந்தியர்களிலே கணிசமானோர் பார்ப்பனர் அல்லாதவர்கள்... அங்கும்போய் அவர்கள் சாதிச் சங்கங்கள் உருவாக்குவது கவலைக்குரியது. உலகம் முழுவதும் பரவுதல் தனக்கு மட்டுமே சாத்தியம் என்ற பார்ப்பனியக் கருத்தியலை ஒடுக்கி கணிப்பொறி மூலம் அந்த வெளிக்குள் பார்ப்பனர்கள் அல்லாதவர்கள் பிரவேசித்துள்ளார்கள்.

மீண்டும் பெரியாரை முன்வைத்து ஒரு கேள்வி. தமிழ்நாட்டில் ஒரு சில பின் நவீனத்துவச் சிந்தனையாளர்களைத் தவிர்த்துப் பார்த்தால் பெரியாரை ஏற்றுக் கொண்டு பேசுபவர்களும் சரி, பெரியாரை மறுத்துப் பேசுபவர்களானாலும் சரி பெரியாரைப் பகுத்தறிவு, கடவுள் மறுப்பு, சாதிப்பிரச்சினை, பெண் விடுதலை போன்ற எல்லைகளுக்குள் மட்டுமே நிறுத்திப் பேசி வருகிறார்கள். பெரியாரிடம் காணக்கிடைக்கும் பல ஒழுங்கமைப்புவாதக் கூறுகளை இவர்கள் பேசுவதில்லை. குடும்பம், குழந்தை பெற்றுக் கொள்ளல், நீதிமன்றம், நீதி, காதல் போன்ற அறங்களையெல்லாம் உடைத்தெறிந்து இயங்கியவர் பெரியார். இன்று வெகுசனங்களின் தலைவர்களுக்கெனச் சுட்டப்படும் புனிதங்களையெல்லாம் பெரியார் கலைத்துப் போட்டவர். நிர்வாண சினிமா தொடங்கி நீதிமன்ற அவமதிப்பு வரை அவர் காட்டாத கூத்துக்கள் கிடையாது. பெரியாரின் இந்தக் கலகப் பண்புகள் குறித்து இன்றைய ஒடுக்கப்பட்டோரின் தலைவர்கள், சிந்தனையாளர்கள் மௌனம் சாதிப்பது ஏன்? இவர்களின் அதிகார வேட்கைக்குப் பெரியாரின் கலகப் பண்புகள் ஒரு தடையெனக் கருதுகிறார்களா?

ஆம். பெரியார் ஒரு கலக மரபுச் சிந்தனையாளர். அவர் நீதிமன்றங்களில் பேசியதைக் கவனித்தாலே அவற்றைப் புரிந்து கொள்ளலாம். குறிப்பாக நாடு விடுதலை பெற்ற பிறகு, அவர் தமிழ் மக்களின்

பெருந்தலைவர் ஆனதன் பிறகு கிட்டத்தட்ட அவருடைய எழுபத்து நான்காவது வயதிலே "நான் அப்படித்தான் அய்யா சொன்னேன். அதுதான் நியாயமென்று இப்போதும் கருதுகிறேன். என்ன தண்டனை கொடுக்கிறீர்களோ கொடுங்கள்" என்று திருச்சி நீதிமன்றத்திலே மாவட்ட ஆட்சித்தலைவர் மலையப்பன் வழக்கிலே பெரியார் சொன்னார். பெரியாரின் கலகமரபுகளைப் பின்பற்றியவர்கள் 1967க்கு முன்னே தி.மு.க.வில் சிலர் இருந்தார்கள். ஆனால் அரசியல் அதிகாரம் என்ற தேனைத் தொட்டு நாக்கிலே தடவியபோது இவர்கள் பெரியாரை என்ன, எதை வேண்டுமானாலும் விற்கத் தயாராகவிருந்தார்கள். இப்போதும் தயாராக இருக்கிறார்கள்.

♦

நேர்காணல் செய்தவர்
ஷோபா சக்தி
காலம் - 18

# 6

# திராவிடம் என்பது அரசியலைத் தாண்டிய பண்பாட்டு அடையாளம்

நாற்பதாண்டுக்காலமாகத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வில் ஒரு புதிய அணுகுமுறையை உருவாக்கி உழைத்தவர் தொ. பரமசிவன். கல்வெட்டுச் சான்றுகள், தொல்பொருள் ஆதாரங்கள் மற்றும் இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் மட்டுமே வரலாற்றை ஆய்வதைவிட்டுப் பண்பாட்டு வரலாற்றை அடித்தள மக்களின் வாழ்வுமுறையிலிருந்தும் நம்பிக்கை மற்றும் அவர்களின் சடங்கு களிலிருந்தும் எழுதுபவர் தொ. பரமசிவன்.

மக்கள் வாழ்க்கை சார்ந்த பண்பாட்டுக்கூறுகளை வைத்து நம் வரலாற்றை ஆராய்வது தொ. பரமசிவன் போன்ற முன்னோடி களால்தான் உருவாக்கப்பட்டது. சடங்குகள் நம்பிக்கைகள் போன்றவற்றையெல்லாம் வரலாற்றை ஆராய பயன்படுத்தலாம் என்று வழிகாட்டியவை அவரது ஆய்வுகள். அழகர்கோயில் பற்றிய அவரது ஆய்வுமுறை இத்துறையில் ஒரு மைல்கல். பன்னிரண்டு ஆண்டுக்கால களஆய்வின் விளைவு அது. திராவிட இயக்கத்தின் நேர்மறையான செல்வாக்கு பெற்ற பெரியாரியர் இவர். மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் தமிழ்துறைத் தலைவராக இருந்து ஓய்வுபெற்றுள்ள பேராசிரியருக்கு தற்போது அறுபது வயது. இதை முன்னிட்டு மணிவிழாவைக் கொண்டாட இருக்கும் தருணத்தில் இந்த நேர்காணல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டு ஆய்வுத்துறையில் முன்னோடி நீங்கள்; இத்துறையில் நீங்கள் ஏற்படுத்திய திருப்பங்கள் என்ன?

ஆராய்ச்சி வழிமுறைகள் என்று சொல்லக்கூடிய ஆங்கிலேயர் வழிமுறையைத்தான் எனக்கும் கற்றுக்கொடுத்தார்கள். பாஜபாய், ஆண்டர்சன், பாலின் வி.யுங் போன்றவர்களின் முறையைத்தான் எனக்கும் கற்றுக்கொடுத்தார்கள். ஆனால் ஆங்கிலேயரின் முறை 'ப்ரொபைல்' என்று சொல்லக்கூடிய ஒருபக்கப் பார்வைதான் எல்லா விஷயங்களிலும் கிடைக்கின்றன. முழுமையான பார்வையை நான் நம்முடைய எளிய மக்களுடைய உரையாடலிலிருந்து எடுத்துக் கொண்டேன். அவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்து.

குறிப்பாக அவர்களது சொல்லடைகள், பழமொழிகள், கதைகள், நம்பிக்கைகள், சடங்குகள் இவைகளிலிருந்து கற்றுக்கொள்வதற்கு நிறைய இருக்கிறது என்பதே எனது நம்பிக்கை. ஒரு உதாரணம் சொல்கிறேன். உயரமாக வளரும் ஒரு தென்னை நாற்றை வாங்கிச் செல்கிற ஒரு விவசாயி என்னுடன் பேருந்தில் வந்து கொண்டிருந்தார். இது என்ன ரகம் என்று கேட்டேன். அவர் 'நக்கவாரி' என்று பதிலளித்தார். அவருக்குத் தெரியாது, நக்கவாரம் என்றொரு தீவு உண்டு என்பது. அதைத்தான் நாம் நிகோபர் தீவுகள் என்று சொல்கிறோம். முதலாம் ராஜேந்திர சோழன் வெற்றிகண்ட தீவுகளிலே ஒன்று. அது தென்னை வளம் மிகுந்த பூமி. நக்கவாரத்திலிருந்து வந்த அந்த வகைக்கு நக்கவாரி என்று இவர்கள் பெயர் இட்டிருக்கிறார்கள். எப்படி கலிங்கத்திலிருந்து வந்த பட்டாடை, பிறந்த இடத்தால் கலிங்கம் என்று பெயர் பெறுகிறதோ, சின்னாளம்பட்டியில் நெய்யப்பட்ட சேலை, சின்னாளப்பட்டி என்று பெயர்பெறுகிறதோ அதுபோல நக்கவாரத்திலிருந்து வந்த தென்னை நக்கவாரி என்று அழைக்கப்படுகிறது. நக்கவாரத்தீவைப் பற்றி அந்த விவசாயி தெரியாமல் இருக்கலாம். நக்கவாரி என்ற சொல்லின் வேரைக் கண்டுபிடிப்பதற்குக் கல்வெட்டுத் தகவல் வழிகாட்டுகிறது.

கல்வெட்டுகள், ஓலைச்சுவடிகளைத் தாண்டி வேறு ப்ரொபைல் என்ற குவிமைய ஆராய்ச்சி வழிமுறையிலிருந்து வேறுமுனைகளில் இருந்து பண்பாட்டை ஆராய முடியும் என்ற கருத்தில்தான் எனது முயற்சியைச் செய்தேன்.

இதேபோல் தமிழர்கள் விளையாட்டையும் ஆராய்ந்துள்ளேன். பல்லாங்குழி விளையாட்டையே எடுத்துக்கொள்ளுங்கள். பல்லாங்குழி



விளையாட்டில் ஐந்தைந்து முத்துடன் ஏழேழு குழிகள் இருவருக்கும் என ஆட்டம் தொடங்கும். திரும்ப எந்தக் குழியிலும் ஐந்து வரக்கூடாது. நான்கு வந்தவுடனேயே 'பசு' என்று எடுத்துவிடுவார்கள். ஐந்தைத் தொட்டுவிடக் கூடாது. இது ரொம்ப யோசிக்க வைக்கிற விளையாட்டு. தோற்றுப்போனால் எதிர்தரப்பு உங்களைச் சுரண்டிவிட்டது என்று நீங்கள் நினைக்கவே மாட்டீர்கள். நமக்கு விதி இந்த விளையாட்டில் இவ்வளவுதான் என்று சென்றுவிடுவீர்கள். தோல்வியை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை இந்த விளையாட்டு உங்களுக்குத் தருகிறது இல்லையா? நான் ஏமாற்றி விளையாடிவிட்டேன் என்று சொல்ல மாட்டீர்கள். நான்தான் குழியை தப்ப காப் பிரித்து ஆடி விட்டேன் என்று ஏற்றுக்கொள்வீர்கள். சமத்தன்மை குலைந்து பள்ளங்கள் மேடாகிவிடும்; மேடு பள்ளமாகிவிடும் என்ற தத்துவத்தை விளக்கிச் சமத்துவம் எப்படிச் சமூகத்தில் சிதைகிறது என்பதைக் காட்டும் விளையாட்டு இது. தனிச்சொத்து எப்படி உண்டாகிறது என்பதை விளக்கும் விளையாட்டு இது. இதைப் பெண்களுக்கு வீடுகளுக்குள் விளையாட கொடுக்கப்படுகிறது. இந்த ஆய்வுமுறையை வெள்ளைக்காரர்களால் ஒருபோதும் செய்யமுடியாது.

இதுபோன்ற ஆராய்ச்சிமுறைக்குத் தூண்டுதலாக இருந்தது, ஓரளவுக்குப் பேராசிரியர் வானமாமலையையும், சாத்தன்குளம் ராகவன் பிள்ளை மற்றும் மயிலை. சீனி வேங்கடசாமி ஆகியோரைச் சொல்லலாம். இவர்கள் மூன்று பேர்தான், புத்தகங்களுக்கு வெளியே போய் மக்களை வாசிப்பதைப் பற்றிக் கற்றுக்கொடுத்தவர்கள்.

உங்கள் காலத்தில் களப்பணிகள் செய்த அனுபவத்தைப் பற்றி...

நான் ஆய்வுசெய்தபோது காமிரா இருந்தது. அளவில் மிகப்பெரிய டேப்ரிக்கார்டர் இருந்தது. ஆனால் வண்ணப்படங்கள் எடுக்க முடியாது. மும்பைக்கு அனுப்பித்தான் புகைப்படங்களைப் ப்ரிண்ட் எடுக்க முடியும். பத்து, பதினைந்து முகவரியைக் களஆய்வு செய்வதற்கு கையில் வைத்துக்கொள்வோம். பேருந்து நிலையத்திற்குச் செல்வோம். எந்த ஊருக்குப் பேருந்து உடனடியாகக் கிடைக்கிறதோ அந்த ஊருக்குப் போய்விடுவோம். சந்திக்கப்போகிற எளிய கிராமவாசியிடம் அப்பாய்ண்ட்மெண்ட் கேட்டுப் போகமுடியாது. அங்கே அவருக்காகக் காத்திருக்க வேண்டும். அதைவிடப் பெரிய விஷயம் என்னவென்றால், போன உடனேயே நேரடியாகவோ மறைமுகமாகவோ நமது சாதி குறித்துக் கேட்பதில் அவர்கள் தெளிவாக இருப்பார்கள். இன்றுவரை தமிழகத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள்

களஆய்வு செய்யமுடியாது என்பதே பச்சையான உண்மை. நெல்லை மாவட்டத்திலாவது பரவாயில்லை. மற்ற மாவட்டங்களில் நிலைமை மிகவும் மோசம்.

நீங்கள் ஒரு சொல்லை உச்சரிக்கும் முறையிலிருந்தே அவர்கள் சாதியைக் கண்டுபிடித்துவிடுவார்கள். இன்னும் சாதி வழக்காறுகள் இருக்கின்றன. நெல்லை மாவட்டத்திலே அவாள், அவுக, அவிய, அவ்வ.. எனப் பல சொற்கள் இருக்கின்றன. இந்தச் சொல்லை உச்சரிக்கிற முறையிலேயே அவர்கள் என்ன சாதி என்பது வெளிப்பட்டு விடும்.

**தமிழகத்தில் முற்காலத்தில் தாய்த்தெய்வ வழிபாடு பரவலாக இருந்ததைப் பற்றி ஆராய்ந்துள்ளீர்கள். இப்பின்னணியில் அப்போதிருந்த பெண்களின் நிலைக்கும் தற்போதிருக்கும் பெண்களின் நிலைக்கும் வித்தியாசம் என்ன?**

பெண்களின் எழுதப்படாத சோகங்கள் காலம்காலமாக நீடித்தே இருக்கின்றன. ஆனால், தாய்த்தெய்வ வழிபாடு அவர்களுக்கெல்லாம் ஒரு மருந்துபோல, ஓபியம் போல இருந்தது. பெண் அதிகாரத்தைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை ஊட்டியது தாய்த்தெய்வங்கள் தான். கையிலே ஆயுதம் வைத்திருக்கக்கூடிய தாய்த்தெய்வம் அவளது நம்பிக்கையின் சின்னமாக இருக்கிறது. அதனால் தாய்த்தெய்வ கோயில் களிலே பெண்கள் சாமியாடுவதும் திருநீறு வழங்குவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்திருக்கிறதே, அதுவே அதற்குச் சான்று. பெண்கள் தாங்கள் அன்றாடம் ஒடுக்கிவைக்கப்படும் வாழ்வில் நம்பிக்கை வைக்கும் இடமாக தாய்த்தெய்வ கோயில்கள் இருக்கின்றன. இன்றுவரை அது தொடர்கிறது. ஆகம பெருஞ்சமய கோயில்களை விட ஆயிரம் மடங்கு அதிகமான சிறிய கோயில்கள் இன்றும் இருக்கின்றன. சென்னையிலே ஒரு கபாலீஸ்வரர் மற்றும் பார்த்தசாரதி பெருங்கோயில்களுக்கு நடுவே ஐந்நூறு அம்மன் கோயில்கள் இருக்கின்றன அல்லவா. இதுதான் அதற்கு உதாரணம்.

**நீங்கள் திராவிட இயக்கத்தின் தாக்கம் உள்ளவர்; பெரியாரியர். நீங்கள் மேற் கொள்ளும் பண்பாட்டு ஆய்வுகளும் பெரியாரின் கருத்துகளும் முற்றிலும் முரண்படுவதல்லவா?**

மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு வேண்டுமானால் அப்படி இருக்கலாம். பெரியார், ஆகம வழிபட்ட விழாக்களையும், பெரிய கடவுள்களான பிள்ளையாரையும் ராமனையும் எதிர்த்தாரே தவிர, அவர் சுடலைமாடனையும் கருப்பசாமியையும் காத்தவராயனையும் எதிர்த்தாரா? இல்லையே.. ஏனென்றால் பெரியாரின் நோக்கம் என்பது விடுதலை என்பதுதான். ஆகமவழிபாடு, ஆகமநெறிக்குட் பட்ட நிறுவனங்கள், தெய்வங்கள், அதற்குரிய சடங்குகள் தோன்றும் போதுதான் குருமார்கள் உருவாகி அடிமைத்தனமும் சேர்ந்தே வருகிறது. நாட்டார் தெய்வ வழிபாட்டில் அடிமைத்தனம் கிடையாது. பெரியார் காத்தவராயன் சிலையை உடைக்கலையே! ராமர் சிலையைத் தானே உடைத்தார்.



இதில்தான் கடவுள் வேறு, தெய்வம் வேறு என்ற நிலைமையை வேறுபட்டு நின்று பார்க்கவேண்டும். கடவுள் என்பது எஜமானன். ராஜசிம்மாசனத்திலே உட்கார்ந்திருக்கிற எஜமானன். தெய்வம் என்பது என்னோடு சமதளத்தில் பழகிக்கொண்டிருப்பது. எங்களுக்கு வேண்டிய வரம் தரவில்லையென்றால் நம்வீட்டுப் பெண்கள் தெய்வத்தை உனக்குக் கண் இருக்கிறதா என்று கேட்பார்கள். பெண்கள் கடவுளைச் சபித்து மண்அள்ளித் தூற்றுவதைக்கூட நான் பார்த்திருக்கிறேன். இதிலே சமத்தன்மை குறையாத உறவுநிலை உள்ளது. இதுதான் தெய்வத்துக்கும் அவர்களுக்குமான உறவு. ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சாதியினருக்கும் ஒரு கோயில் உண்டல்லவா? அங்கே யாரேனும் ஒருவர் இறந்துபோனால் அந்தக் குறிப்பிட்ட தெய்வம் கதவைச் சாத்திக்கொண்டு குளிக்காமல் உண்ணாமல் துக்கம் காக்கிறது. மாநகராட்சிப் பகுதியிலே எந்தச் சாதிக்குரியவர் இறந்துபோனாலும் அதற்குரிய கோயிலின் நடை சாத்தப்படுகிறது. அதற்குப் பூசை கிடையாது. அபிசேகம் கிடையாது. சடலத்தை எடுத்துப் போனபிறகுதான் எல்லாம் நடக்கும். ஒரு உறவினரைப் போல தெய்வமும் துக்கம் காக்கிறது. அப்போதுதான் தெய்வம் எனக்கு அணுக்கமாகிறது. அது எனக்கு அம்மா.

ஆகமவழிபட்ட பெரிய வடிவங்களைத்தான் நான் கடவுள் என்கிறேன்.

**13 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்திய பிற பண்பாட்டுக் கூறுகள் அவற்றின் தாக்கங்கள் பற்றி நிறைய எழுதியுள்ளீர்கள்? அதன் சாதகங்கள் மற்றும் பாதகங்களை இன்றையச் சூழலின் பின்னணியில் சுருக்கமாக சொல்ல முடியுமா?**

வெளிப்படையாகவே பேசலாம். விஜயநகர ஆட்சியின் போது பிராமணர்கள் தொடங்கி ஒடுக்கப்பட்டவர்கள்வரை தெலுங்கு மக்கள் தமிழகத்தில் குடியேறினார்கள். அவர்களுடைய வருகைக்குப் பிறகுதான் நிறைய விஷயங்கள் புராண அடிப்படையிலும் ஆகம அடிப்படையிலும் மாற்றப்பட்டன. அதற்கு முன்பு காரடையான்

நோன்பும் வரலட்சுமி நோன்பும் இங்கே கிடையாது. தீபாவளிகூட அவ்வளவு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது கிடையாது. இதற்குப் பிறகு தமிழகத்தில் ஏற்பட்ட பாதகமான அம்சங்கள்தான் நிறைய. நேர்மறையான தாக்கங்கள் என்று சொன்னால் அங்கேயிருக்கும் உழைக்கும் மக்கள் தமிழ்நாட்டின் பருத்தி வேளாண்மைக்கும் நெசவுக்கும் செய்த தொண்டுதான் தமிழகத்தின் பொருளுற்பத்தி முறையில் பெரிய பங்களிப்பாக இருந்தது. சௌராஷ்டிரர்களின் பங்களிப்பும் இதில் சேரும். இத்துடன் ஒரு பண்பாடு இன்னொரு பண்பாட்டை உள்வாங்கிக் கொள்ளும் வேறுசில முறைகளும் உள்ளன. குறிப்பாக ரொட்டி உண்ணும் பழக்கம் பற்றிப் பேச வேண்டும். தமிழகத்தில் வெள்ளையர் வருகைக்குப் பின்புதான் ரொட்டி என்ற உணவு அறிமுகமாயிற்று. அதைத் தமிழகம் புறம் தள்ளவில்லை. பிரசவத்துக்குப் பின்பு பெண்கள் சாப்பிடும் சத்துணவாக ரொட்டி இங்கு மாற்றப்பட்டுள்ளது. இதற்குப் பெயர் தான் கலாசார தகவமைப்பு. இதற்கு 250 வருட வரலாறு இருக்கிறது.

இத்துடன் சிகப்பு நிறத்தோல் மீது ஏற்பட்ட கவர்ச்சியும் தமிழக மக்களுக்கு 13 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே ஏற்பட்டது. 'கறுப்பின் கண் மிக்குள்ளது அழகு' என்றே தமிழில் கறுப்பு நிறம் போற்றப் பட்டுள்ளது. இங்கே கறுப்புதான் அழகாக ஒரு காலத்தில் இருந்தது. இஸ்லாமியப் படையெடுப்புகள், அதற்குப்பிறகு ஏற்பட்ட படை யெடுப்புகளைத் தொடர்ந்து பார்த்துவந்தால் ஆட்சியதிகாரம் கறுப்புநிற தமிழ்மக்களிடம் இருந்து மெதுமெதுவாகப் பறிக்கப்படு கிறது. மனிதனுக்கு ஆதியிலியிருந்தே அதிகாரத்துக்கான வேட்கை இயல்பு உண்டு. இதனால் சிகப்பு என்பது அதிகாரம் சார்ந்தது, அதிகாரத்தோடு தொடர்புடையது என்ற எண்ணம் மேலோங்கி தமிழ் உளவியல் சிதைத்து மாற்றப்படுகிறது. இன்றைக்கும் கறுத்த நிறமுள்ள ஒரு வட்டாட்சியரைவிட சிகப்பு நிறமுடைய வட்டாட்சியர் தன்னுடைய பணியைத் தமிழ்நாட்டில் வெற்றிகரமாகச் செய்ய முடியும் என்பதே யதார்த்தம்.

**தமிழ்ப் பண்பாட்டுக்குள்ள தனித்தன்மை என்ன?**

குடும்ப அமைப்பைப் பேணிக்கொள்வதற்குத் தாய்க்குத் தரும் முக்கியத்துவம் அளவுக்குத் தாய்மாமனுக்கு தரப்பட்டிருக்கும் இடம். இன்னொன்று பிணத்துக்குத் தந்திருக்கும் மரியாதை. இறந்தவர் களுக்குத் தரப்படும் மரியாதை. மற்றொன்று பெண்ணின் உடல் மீதான வன்முறையை நீங்கள் பொதுஇடத்தில் இப்போது தமிழகத்தில்



பகிரங்கமாய் யாரும் நடத்திவிட முடியாது. டெல்லிக்கு அருகே முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு காவல்துறை அதிகாரி ஒரு பெண்ணை நிர்வாணமாக அழைத்துக்கொண்டு போனது போன்ற சம்பவங்கள் இங்கே நடைபெறாது. தெருவழியாகத் துச்சாதனன் பாஞ்சாலியை இழுத்துச்செல்வதைப் பார்த்து பாரதியாரே பாடியுள்ளார். துச்சாதனன் தெரு வழியாகப் பாஞ்சாலி இழுத்துச் செல்லப்பட்ட காட்சியைப் பார்த்த ஜனங்கள் நெட்டைமரங்கள் போல, பெட்டை புலம்பலிட்டுப் பார்த்துக்கொண்டிருந்தனர் என்றும் ஏன் அடிக்காமல் விட்டார்கள் என்றும் கேட்கிறார். விருந்தோம்பல் என்பது நமது பண்பாட்டுக்கே உரிய தனித்த கூறு.

**உலகமயமாதல் பின்னணியில் அனைத்துப் பண்பாட்டு அடையாளங்களும் ஒடுக்கப்பட்டுப் பண்பாட்டு சிதைவுகள் ஏற்படும் இன்றைய சூழ்நிலையில் தமிழர்கள் எப்படி தங்கள் பண்பாட்டை தக்கவைக்கப்போகிறார்கள்?**

பண்பாடு மற்றும் கலாசாரம் என்பதே உற்பத்தி சார்ந்த விஷயம். இன்றைய நவீன உலகில் உற்பத்தி மூலதனத்தைச் சார்ந்துள்ளது. இந்த மூலதனம் பொருளுற்பத்தியிலிருந்து தனி நபரை அந்நியப்படுத்து கிறது. அதாவது பண்பாட்டிலிருந்து அந்நியப்படுத்துகிறது. நான் சிறுவனாக இருந்தபோது எனக்கு வேண்டிய காற்றாடியை நானே செய்துகொள்வேன். எனக்கு வேண்டிய பட்டத்தை நானே செய்து கொள்வேன். எனக்கு வேண்டிய விசிலை பூவரச மர இலையிலிருந்து இரண்டு ஓட்டாஞ்சில்லு வைத்துச் செய்துகொள்வேன். இன்று எல்லா விளையாட்டு கருவிகளும் கடையிலிருந்தே குழந்தைகளுக்கு வாங்கித் தரப்படுகின்றன. தனக்குரிய விளையாட்டுக்கருவியைத் தானே உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய வாய்ப்புகூட குழந்தைக்குத் தரப்படுவதில்லை. உற்பத்தியிலிருந்து அந்நியப்படும்போது மனிதன் கலாசாரத்திலிருந்து அந்நியப்படுகிறான். இன்றைய நுகர்வுக்கலாச்சாரம் மனிதனைப் பொருளுற்பத்தியிலிருந்து அந்நியப்படுத்திவிடுகிறது.

**நீங்கள் பிறந்து வளர்ந்த பாளையங்கோட்டை உங்கள் ஆளுமையை எப்படிப் பாதித்துள்ளது?**

இது பாரம்பரியமாக எழுத்தறிவு பெற்ற ஊர். பேராசிரியர் நா. வானமாமலை, ராகவன்பிள்ளை போன்றவர்கள் வாழ்ந்து எழுதிய ஊர். நான் பிறந்த வீட்டுக்குப் பக்கத்திலேயே மாவட்ட மைய நூலகம் இருந்தது. பெண்கள் கல்லூரி இருந்தது. கண் தெரியாதவர்களுக்கான பள்ளியும் காதுகேளாதவர்களுக்கான பள்ளியும் ஒரு நூற்றாண்டுக்கு

முன்பாகவே தோன்றிய ஊர் இது. கல்வித்தாகத்தை இயல்பாகவே பெற்றுள்ள மண் இது. வாசிப்புப் பழக்கமுடையவர்கள் நிறைய இருந்தார்கள். அருகில் உள்ள திருநெல்வேலி நகரில் இல்லாத அளவுக்கு இங்கேதான் பழைய புத்தகக் கடைகள் அதிகம். அது மட்டுமல்ல; பார்வையற்றவர்களுக்கான பிரெய்லி எழுத்துவடிவ நூல் இங்கேதான் முதல்முறையாக ஆக்கப்பட்டது. "வறியவர்க்கெல்லாம் கல்விநீரோடை; வரவிடவில்லை மதகுருக்கள் மேடை" என்பார் பாரதிதாசன். இது சைவ வைணவ மதகுருக்களுக்குத்தான் பொருந்தும். ஆனால் கிறிஸ்தவ குருக்கள் இங்கே கல்வியை வீட்டைத்தேடிக் கொண்டு வந்தார்கள். இலவசப்பள்ளிகளைத் தொடங்கினார்கள். அதிக கல்விக் கட்டணங்கள் கிடையாது. இந்த மாவட்டத்தில் மிகக் குறைந்த செலவில் கல்வியை, எளிய மக்களுக்கு வழங்கியதில் கிறிஸ்தவ மதத்துக்குப் பெரிய பங்குண்டு.

**தமிழக மக்களாலும், திராவிட கட்சிகளாலும் ஒரு நல்ல தலையீட்டைச் செய்து ஈழத்தமிழர் இனப்படுகொலையை நிறுத்த இயலவில்லையே? மார்க்சீய இயக்கங்களும் இதில் சரியான நிலைப்பாட்டை மேற்கொள்ளவில்லையே? இதற்குக் கலாச்சாரரீதியான காரணங்கள் என்ன?**

உலகத்திலேயே கொடுமையான தண்டனை ஏமாற்றம்தான். ஒரு ஐம்பது ஆண்டுகால உழைப்பைக் கலைஞர் பாழாக்கிவிட்டார். ஒரு தமிழ் விரோதக் கட்சி மத்தியில் அதிகாரத்தில் இருக்க, இங்கேயுள்ள மாநில ஆட்சி தனது அதிகாரத்தை இழக்க விரும்பவில்லை. அதனால் தலைகுனிந்து தாள்பணிந்தது. மார்க்சியர்களைப் பொறுத்தவரை 1925 இலிருந்தே ஏமாற்றி வருகிறார்கள்.

குறிப்பாக இந்தியா பல்வேறு மேடுபள்ளங்களை உடைய நாடு என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவே இல்லை. சாதி, மதம், இனம் கலாச்சார வெளிப்பாடு உடைய நாடு என்பது அவர்களது புரிதலில் இல்லை. அவர்களுடைய சர்வதேச அரசியலில் மாவோ மட்டும் தான், மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்பதை நடைமுறைப்படுத்தியவர். ரஷ்யப்புரட்சியும் சீனப்புரட்சியும் வேறுவேறாகவே நிகழ்ந்தன. அது போன்றில்லாமல் ரஷ்யாவின் நிலைப்பாட்டையே எடுத்ததால் மக்களின் மனநிலையோடு இவர்களால் ஒன்றிப்போக இயலவில்லை. சிங்கூர் மக்களின் மனநிலையை இவர்கள் புரிந்துகொள்ள இயல வில்லை. தோற்றுப்போனதற்காக வெட்கப்பட்டார்களா?

ஸ்டாலின் காலத்தில் நடைபெற்ற அரசியல் களையெடுப்பைப் போலத்தான் கொள்கையாளர்களைத் தொடர்ந்து இவர்கள் கொன்று கொண்டிருக்கிறார்கள். இந்தி பொதுமொழி என்பதை ஆரம்பத்திலேயே கோசாம்பி போன்றவர்கள் முரண்பட்டார்கள். இந்தியா என்ற பெரிய அடையாளத்திற்குள் அனைத்துப் பிராந்திய அடையாளங்களையும் கரைக்க முயலும்போது இவர்கள் தொடர்ந்து தோற்றுத்தான் போவார்கள். திராவிட இயக்கத்தினருக்கு நேர்ந்ததும் அதுவே.



நாடாளுமன்ற ஜனநாயகத்தின் உள்ளார்ந்த பண்பே இதுதான். அனைத்து இயக்கங்களையும் மனதளவிலும் சிந்தனை அளவிலும் அரிக்க வைப்பது அது. அப்படித்தான் திராவிட இயக்கத் தலைவர்களும் சிதைவுக்கு உள்ளானார்கள். நாத்திகம் பேசிய இயக்கம், "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று பேசவந்ததே வாக்குவங்கி அரசியல்தானே. அப்படித்தான் சிதைவு தொடங்கியது. இதையொட்டி சமூகமும் ஊழல்மயமானது. இலங்கையில் இனப்படுகொலை தீவிரமாக நடைபெற்ற வேளையில் என்னைப் போன்றவர்கள் தூக்கமாத்திரை போட்டுக்கொண்டுதான் தூங்கினோம். எங்களால் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. பி.பி.சி இரவு ஒன்பதேகாலுக்கு நான் தமிழோசை கேட்பேன். அதையெல்லாம் அப்போது நிறுத்திவிட்டேன். எத்தனை நாளைக்குத்தான் சாவைக் கேட்டுக்கொண்டே இருப்பது. நாளைக்குச் சாகப்போகிறார்கள் மனிதர்கள் என்று தெரிந்தால் எப்படித் தூக்கம் வரும். இந்தப் படுகொலையை நேரடியாக ஆதரித்தவர்கள், மறை முகமாக ஆதரித்தவர்கள் மீதான ஆத்திரம் எனது உயிர்மூச்சு உள்ளவரை நீடித்திருக்கும்.

**பண்பாட்டு ஆய்வுக்கு நீங்கள் வந்ததன் பின்னணி என்ன?**

நான் என்ஜிஓ காலனியில் குடியிருந்தபோது எனது வீட்டுக்கு அடுத்த வீட்டில் சிறிய பையன் இருந்தான். விளையாட தோழர்களே இல்லாமல் இருப்பான். அவன் ஒத்தையாகப் பந்தைப்போட்டுக் கொண்டு ஆடிக்கொண்டிருப்பான். அதுபோல ஆடுகளம் இருந்து ஆடுவோர் இல்லாமல் அப்பகுதி இருந்தது. எனவே நான் இங்கு ஆடவந்தேன்.

**இன்று நாட்டுப்புறவியல் ஆய்வு மற்றும் படிப்புகள் கவர்ச்சிகரமான துறையாகி யுள்ளது. ஆனால் இதனால் நாட்டுப்புறக் கலைக்கும் கலைஞர்களுக்கும் ஏதாவது வளர்ச்சி ஏற்பட்டுள்ளதா?**

நாட்டார் வழக்காற்றியல் துறையின் வளர்ச்சி என்பது இதுவரை ஊடகங்கள் கட்டியமைத்த பிம்பங்களுக்கு எதிரானது. அவற்றை

அவர்கள் வளரவிடமாட்டார்கள். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு முடிவுகள், கடந்த ஒரு நூற்றாண்டாக அச்சுஊடகங்களும், கல்வி அமைப்பும் கூறிய கருத்துக்களை முழுவதும் உடைத்துள்ளது. அதனால் இந்தத் துறையின் வளர்ச்சியிலே அவை எதிர்மறையான பங்கையே ஆற்றும். தஞ்சை அருங்காட்சியகத்திலே இருக்கிற கஜசம்ஹார மூர்த்தி சிலையைவிட நேர்த்தியாக ஒரு கல்லிலே கருப்பசாமி சிலையை வடிக்கமுடியும் என்பதை அவர்கள் நம்ப மாட்டார்கள். வடிக்கவும் முடியும்; ரசிக்கவும் முடியும் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆளும்வகுப்பாருக்கு எது உகந்ததாக இருக்கிறதோ அந்தக் கலைகளைத்தான் அவர்கள் முன்னெடுத்துப் போவார்கள். நாட்டார் வழக்காற்றியல் துறையின் வளர்ச்சி, ஊடகத்துறைக்கு எதிரானது. சென்னை சங்கமம் போன்ற நிகழ்ச்சிகளெல்லாம் தேவையின் அளவில் மிகமிகச் சிறிய முயற்சிகள். இப்போதுதான் கூத்துப்பட்டறை போல தஞ்சாவூரில் பேராசிரியர். மு. ராமசாமி தலைமையில் ஒரு இடத்தை அமைக்க உள்ளார்கள். இதற்குக் கனிமொழி தனது நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து தொகையிலிருந்து ஒரு கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளார். இதன்மூலம் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் தமிழ் கலாச்சார தலைநகரமாகத் திருச்சூரைப் போல தஞ்சாவூர் மாறுவதற்கு வாய்ப்புகள் உருவாகலாம்.

தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் நீங்கள் பங்கெடுக்கிறீர்களா?

இல்லை. ஏனெனில் தூக்கமில்லாமல் கழிந்த இரவுகள் திரும்பத் திரும்ப நினைவுக்கு வருகின்றன. அதனாலே கலந்துகொள்ளப் போவதில்லை. கலைஞர் கூப்பிட்டதினால் சிவத்தம்பி போகலாம்; நான் போகமாட்டேன்.

இன்று மக்களிடையே கோவில்களுக்குச் செல்லும் வழக்கம் அதிகரித்துள்ளது. புதிய புதிய ஆன்மீக பின்பற்றல்களும் உருவாகியுள்ளன. நித்தியானந்தா போன்ற சாமியார்களின் வளர்ச்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*98* முதல் *99* விழுக்காடு மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை உள்ளது. அதிலே தீங்கு ஒன்றுமே இல்லை. அவர்களின் ஆன்மீக தேவையை நிறைவேற்ற வேண்டிய சைவ வைணவ மடங்கள் தங்கள் கடமையிலிருந்து வழுவித் தங்கள் சொத்தைக் காப்பாற்றுவதில் குறிக்கோளுடன் மாறியதால்தான் இதுபோன்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. அவர்களால் உருவான வெற்றிடத்தில் காஞ்சி மடம் போன்ற ஸ்மார்த்த நிறுவனங்கள் வந்தன. அதை சங்கராச்சாரியார் நிரப்பினார். இது ஒன்று.



இத்துடன் இதுபோன்ற புதிய பின்பற்றுதல்களுக்கு ஆளாகுபவர்கள் அதிகமும் நடுத்தர மேல் நடுத்தரவர்க்கத்தினர்தான். அதில் நிறையபேர் பெண்கள். வயிற்றுக்குச் சோறு இல்லாத ஏழைக்கு இதில் பங்கே இல்லை. நித்தியானந்தர் விவகாரம் போன்றவை எல்லாம் ஊடக வன்முறை, அவ்வளவே. காலம் காலமாகச் சாமியார்கள் இதைத்தான் செய்து வருகிறார்கள். அதை, பத்துப் பக்கத்தில் படம் போட்டு விற்பனை பண்ணுவதுதான் ஊடக வக்கிரம்.

ஊடகங்கள் நுகர்வுவெறியை உருவாக்குகின்றன. உடல் சார்ந்த நுகர்வுவெறியின் வெளிப்பாடுதான் நித்தியானந்தாவும் தேவநாதனும். பாலுணர்வு இயற்கையானதுதான். ஊடகங்கள்தான் அதை வக்கிரமானதாக மாற்றுகின்றன.

நீங்கள் நாத்திகர் என்கிறீர்கள். ஆனால் உங்களது ஆராய்ச்சிகளோ பெரும்பாலும் கோயில்கள் சார்ந்தது? இது எப்படி?

எனக்குத் தெய்வங்கள் மீது நம்பிக்கை இல்லை. அவைகளை வணங்குகிற மக்கள் மீது கவர்ச்சி இருக்கிறது. நம்பிக்கை இருக்கிறது. அவர்களின் அழகை நான் ரசிக்கிறேன். கோவிலுக்குப் போகும் அனைவரும் தினசரி சிவபூசையோ விஷ்ணுபூசையோ செய்கிற மக்கள் அல்ல. கோயில் என்பதும் திருவிழா என்பதும் நிறுவனங்கள். திருவிழாக்களின்றி ஒரு சமூகம் இயங்கமுடியாது. உங்களுக்கு நவராத்திரி. ரஷ்யாவிலே அது மேதினக் கொண்டாட்டம். அவ்வளவுதான். திருவிழாக்கள் ஒரு சமூகம் இளைப்பாறிச் செல்கிற இடமாக உள்ளது. அதுதான் கோயிலும்கூட. இந்த கோயில்கள் அதிகாரமையமாக மாற்றப்பட்டபோது பெரியார் அதைக் கண்டனம் செய்தார். எந்தக் கோயிலுக்குப் போனாலும் நான் சாமி கும்பிடுவதில்லை. அன்றைக்குக்கூட பாண்டிச்சேரி போய்விட்டுத் திரும்பி வரும்போது சமயபுரம் போகவேண்டுமென்று எனது மனைவி கூறினார். ஆனால் கோயிலுக்குப் போனால் எனக்கு ஆராய்ச்சி உணர்வு வந்துவிடும். சமயபுரம் வந்தவுடன் மாலிகாபூர் கொள்ளையடித்துப் போகும்போது கண்ணனூரைக் கொள்ளையடித்துப் போகிறான். கண்ணனூர் என்று இஸ்லாமிய ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஊர்தான் தற்போது சமயபுரம் என்றழைக்கப்படுகிறது. அங்கே ஒரு அரண்மனை உள்ளது. இந்தச் சமயபுரம் கோயிலே சோழமாதேவியின் பள்ளிப்படை கோயில்தான் என்ற எண்ணம் உண்டு. சமயபுரம் அம்மனின் சிலை மிக அழகாக இருக்கும். ஒரு பெண் உயிருடன் அமர்ந்திருப்பது போன்ற தோற்றம்.

பெரியாரை ஜெயமோகன் போன்றவர்கள் மரபை பரிசீலிக்காமல் விரட்டி அடித்தவர் என்று கூறுகிறார்களே?

பெரியார் ஓர்மையுடன் செயல்பட்டவர். அவர் அதிகாரமையங் களையும் பெருங்கதையாடல்களையும்தான் எதிர்த்தார். அவர் நாட்டார் நம்பிக்கைகள் மற்றும் கதைகளை எதிர்க்கவேயில்லை. நாட்டார் தெய்வங்களைப் பற்றி அவர் பேசவேயில்லை. உயிர்ப்பலி தடைச்சட்டம் வந்தபோது நான் கூறினேன், பெரியார் இருந்திருந்தால் அச்சட்டத்தை எதிர்த்திருப்பார். “அவன் சாமிய அவன் கும்பிடறான். அவன் சாமிக்கு அவன் வெட்டறான். சாமியா திங்குது. பத்து நிமிஷத்துக்குப் பிறகு மனிதன்தானே சாப்பிடுகிறான்”, என்று சொல்லி யிருப்பார் என்று நான் சொன்னேன். ஆனால் வீரமணி அச்சட்டத்தை ஆதரித்தார்.

கோயில் நுழைவுப் போராட்டங்களுக்குப் பெரியார் ராமானுஜரை மாதிரியாக எடுத்துக்கொண்டாரா?

எடுக்கவில்லை. ஏனெனில், ராமானுஜர், கோயில் என்னும் ஆன்மீக நிறுவனத்தைக் காப்பாற்றும் முயற்சியிலேயே ஈடுபட்டவர். இதுபோக ராமானுஜரை பற்றிய ஆய்வுகள் அப்போது பெரிய அளவில் இல்லை. ஆனால் ராமானுஜர் மேல் பெரியாருக்கு மரியாதை இருந்தது.

இப்போது திராவிடம் என்ற கருத்தாக்கம் கேள்விக்குள்ளாவது சமூகக் காரணங்களால் அல்ல. வாக்குவங்கி அரசியல் சார்ந்தது. இதை இந்த முறையை தொடங்கிவைத்திருப்பது ராமதாஸ். கட்சி அரசியல் சார்ந்த குழப்படியாக இது உள்ளது.

திராவிடம் என்பது அரசியல் என்பதைத் தாண்டிய பண்பாட்டு அடையாளம் கொண்டது. அந்தப் பண்பாட்டு அர்த்தம் இன்றும் உயிர்ப்புடனேயே தொடர்கிறது. நான்கு தென்மாநிலங்களில் உள்ள பண்பாட்டுக் கூறுகளுக்கிடையில் ஒற்றுமை நிலவுகிறது. மூன்று பொதுக்கூறுகளைச் சுட்டிக்காட்டலாம் என்று நினைக்கிறேன். தாய்மாமனுக்கான மரியாதை என்பது இந்த நான்கு மொழிக்காரர் களுக்கிடையே இன்றும் தொடர்கிறது. இரண்டாவது தாய்த்தெய்வ வழிபாடு. மூன்று இறந்த உடலுக்கான மரியாதை என்பது. நான்கு மொழிக்காரர்களிடமும் இருக்கிறது.

இன்றைக்கும் பிராமணர்கள் சடலத்துக்கு மரியாதை கொடுப்ப தில்லை. பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதவர்களுக்கும்



இன்னும் நீடித்திருக்கும் வித்தியாசங்கள் உள்ளன. பிராமணர்கள் இன்றும் கருப்பட்டி காப்பி சாப்பிடுவதில்லை. ஏனெனில் கீழ்சாதி யினராகக் கருதப்படுபவர்கள் கையில் தொட்டுச் செய்யும் பொருள் என்பதால் அவர்கள் அதை விரும்புவதில்லை. பிராமணர் வீடுகளில் பீன்ஸ் கூட போய்விட்டது. ஆனால் இன்னமும் பனங்கிழங்கு செல்ல முடியவில்லை. ஏனெனில் பூமிக்குக் கீழே விளையும் பொருளை சூத்திரனும், பன்றியும் சாப்பிட்டு விடுகிறார்கள். அதனால் அதை அவர்கள் தொடுவதில்லை. ஆம்லேட் சாப்பிடுகிறார்கள். உருளைக் கிழங்கு சாப்பிட ஆரம்பித்துவிட்டனர். ஏனெனில் அவையெல்லாம் துரைமார் கொண்டு வந்த பொருட்கள். சங்கீத சீசனை டிசம்பரில் வைப்பது அவர்களது கண்டுபிடிப்புதானே. ஏன் தொண்டைக் கட்டற டிசம்பரில் சங்கீத சீசன் வருகிறது. கோடையில்தானே வைக்க வேண்டும்? வெள்ளைக்காரர்களை மகிழ்விக்க அவர்களுக்கு உகந்த டிசம்பரில் சங்கீதக் கச்சேரிகளை வைத்தார்கள். அவர்களுடைய கிறிஸ்துமஸ் விடுமுறையில் மகிழ்விக்கத்தானே இந்த ஏற்பாடு.

தான் சாப்பிடுவதை அடுத்தவர்கள் பார்க்கக்கூடாதென்று தலை வாசல் கதவை சாத்திவைத்து சாப்பிடுவது பிராமணர்கள்தானே. அவர்களின் சாமிக்குக்கூட திரையை மூடித்தானே தளிகை வைக்கிறார்கள். ஆனால் சுடலைமாடனுக்கு முன்னால் பகிரங்கமாக ஆட்டை அறுத்துப் போட்டிருப்பார்கள். அதை எல்லாரும் பார்க் கலாம். அதனால் பல வழக்கங்கள் உயிரோடுதான் இருக்கின்றன.

தமிழ் காட்டுமிராண்டி பாஷை என்று பெரியார் சொன்னது தமிழ்தேசியர் களைக் கோபத்துக்குள்ளாக்குகிறதே?

பெரியார் நிறைய அதிர்ச்சி மதிப்பீடுகளை வைத்தார். ராமன் படத்தை செருப்பால் அடித்தார். பிள்ளையார் சிலையை உடைத்தார். ஆனால் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை பெரியார்தானே செய்தார். வேறு எந்தத் தமிழறிஞரும் முன்வரவில்லையே. மறைமலை அடிகளோ, தெ.போ.மீயோ, மு.ராகவைய்யங்காரோ செய்யவில்லையே. காட்டுமிராண்டி பாஷையைத் திருத்துவதற்கு அவர் முயற்சி எடுத்தவர் இல்லையா? உரைநடை என்பது மணிக்கொடியால்தான் வளர்ந்தது என்று வேதவசனம் மாதிரி சொல்கின்றனர். ஆனால் 1925 இல் பெரியாரின் தலையங்கங்களைப் பார்க்க வேண்டும். பெரியாரின் உரைநடை அத்தனை அற்புதமாக இருக்கிறது. பாரதியைக் கூட விட்டு விடுகிறார்கள். இதுவெல்லாம் பெரியாரைத் திட்டி அதிகாரத்தைத் தக்க வைக்கிற முயற்சிகள்தான்.

கன்னடர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள் ஆட்சி செய்யமுடியுது...

தமிழர்கள் அல்லாதவர்களுக்கு வாக்களித்தது இங்குள்ள தமிழன் தானே. அவன் ஒரு குறுகிய எண்ணத்துக்குள் அடைபட்டவன் அல்ல என்பதைத்தானே காட்டுகிறது. இந்தியாவிலேயே அரசியல் தலைவர்கள் சாதிப்பட்டம் போடாமல் இருக்கிறது தமிழ்நாட்டில் மட்டும்தானே. கருணாநிதி, ஜி.கே.வாசன் ஆகியோரின் சாதி யாருக் காவது டெல்லியில் தெரியுமா? ஆனால் வட இந்தியாவில் பார்த்தீர்கள் எனில் குப்தாக்கள், சர்மாக்கள் என எல்லாரும் சாதிப்பெயர் கொண்ட வர்கள்தானே. கேரளாவில் கூட நம்பூதிரி, மேனன் எல்லாம் இருக் கிறார்களே. அந்த வகையில் சாதிப்பட்டத்தைத் துறந்தவன் தமிழன் தானே. இது பெரியாரின் வெற்றி அல்லவா. யாவரும் கேளிர் என்ற அடிப்படையில் தெலுங்கனும், மலையாளியும் கேளிர்தான் என்று வாழ்பவன் தமிழன். யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர் தமிழனுக்கு விசுவாசமாக இருக்கிறாரா என்றுதான் பார்க்கவேண்டும் என்று பெரியார் தெளிவாகச் சொல்கிறார். காவிரி விஷயத்தில் ஜெயலலிதா தமிழகத்தை விட்டுக்கொடுக்கமாட்டார் அல்லவா? அப்புறம் என்ன. தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்துப் போவதில் எல்லாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வைகோ தெலுங்கர் தானே. அவரைத் தமிழர் இல்லை யென்று சொன்னால் தமிழன் ஒத்துக் கொள்வானா?

திராவிடம் என்கிற கருத்தாக்கம் இன்னும் வலுவானது என்று நினைக்கிறீர்களா?

வலுவாக இருக்கிறது என்று கருதவில்லை. அர்த்தமுடையதாக இருக்கிறது என்று நினைக்கிறேன்.

கால்டுவெல் திராவிடமொழிக் குடும்பம் என்று சொன்னதன் மீதான விமர்சனம் பற்றி...

அவர் இன்னொன்றையும் சொன்னார். அது தமிழ்த் தேசியர் களுக்கு உவக்காத விஷயம். பறையர்களை தனது முதல்பதிப்பில் 'தூய தமிழ்ச்சாதி' என்று எழுதியிருந்தார். அதற்கடுத்த பதிப்பில் அந்தப் பகுதி அகற்றப்பட்டு விட்டது. அந்தப் பகுதியோடு சேர்த்து தற்போது ஒரு பதிப்பு கவிதாசரண் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் கால்டுவெல் இனவரைவியலாளர்தானே தவிர அரசியல்வாதி அல்ல. அவர் வரலாற்றாய்வாளரும் கூட. அவருடைய கருத்துகளை எடுத்துக் கொள்வதும் மறுப்பதும் இவர்களது நேர்மை சார்ந்தது.



ராமதாஸ் சொல்லும் அதே கருத்துக்களின் போக்கிலேயே விரக்தியான மனநிலையில் தலித்துகளும் சொல்கிறார்கள். திராவிட அரசியல் ஏமாற்றி விட்டது என்ற விமர்சனத்தை வைக்கிறார்கள். ஆனால் அம்பேத்கரின் எழுத்துகளை முதலில் மொழிபெயர்த்து இங்கே 1935ஆம் ஆண்டிலேயே அவரை அறிமுகப்படுத்தியவர் பெரியார்.

திராவிட இயக்கத் தலைமைகள் பின்பு இந்தியாவின் போலி ஜனநாயக அமைப்பை நம்பி நாசமாகப் போனது. குறிப்பாக அந்தத் தேர்வுக்குத் தொண்டர்கள் அல்ல காரணம்; தலைமைதான் காரணம்.

♦

கவிஞர் சங்கர ராமசுப்பிரமணியன்
எடுத்த நேர்காணல் இது.
இதன் சுருக்கம் சண்டே இண்டியன் (2010)
இதழில் வெளிவந்தது.

7

# பார்ப்பனர்களுக்கு அதிகாரமே உணவு

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் இன்று தமிழ்ச் சிந்தனை, கலை, இலக்கியங்களில் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. வரலாற்றின் நேர்கோட்டுரீதியான பார்வையை முற்றிலும் மறுத்து, சுழல்வட்டப் புதிர்களையும், வரலாற்றையும் உருவாக்கி மறுஉற்பத்தி செய்யும் வலிமையுடையது நாட்டார் வழக்காற்றியல். வைதீகமரபிற்கு எதிரான, ஆணாதிக்க வேதஆரிய மரபிற்கு எதிரான தெளிவான சித்தரிப்பு - தமிழின் நாட்டார் வழக்காறுகள்.

தமிழிலக்கியமும், இலக்கியவாதிகளுமே இதனைக் கவனத்தில் கொள்ளவில்லை என்பது - 'எழுத்து', 'மணிக்கொடி' போன்ற பிற இலக்கிய இதழ்களின் வரலாறுகளைப் படிக்கும்போது தெளிவாகத் தெரிகிறது. இன்றும்கூட பத்திரிகைகள், இலக்கிய இதழ்களில் வாய்மொழி வழக்காறுகளுக்கான பக்கங்கள் எவ்வளவு லேசானவை என்பது நமக்குத் தெரியும்.

இதன் பின்னணியில், நாட்டார் வழக்காறுகள் வரலாறு, எப்படி அயோத்திதாசப்பண்டிதரிலிருந்து ஆரம்பித்தது என்பதை விளக்குகிறார் முனைவர் தொ. பரமசிவன். நாட்டார் மரபுகளைக் கூட பார்ப்பனீயம் இன்று கடுமையாக ஆக்கிரமித்து வருகிறது. வழக்கம்போல் வரலாற்றைத் திரிப்பதுகூட ஜெயமோகன் போன்றோரால் செய்யப்படுகிறது.

ஆனால், உண்மையில், 'நாட்டார் வழக்காறுகள்' ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக, மதரீதியான கருத்துருவங்களுக்கு எதிரான,



அமைப்புகளுக்கு எதிரான, புனிதம், மரணம், அதிகாரம், வர்க்க வேறுபாடுகளுக்கு எதிரான தன்மைகளைக் கொண்டிருக்கிறது.

இன்றுவரை அதன் செவ்வியல் தன்மைகளை அடையாளங்கண்டு அதனை செவ்வியல் கலைக்கு ஒப்பான ஒன்றாகக் காணும் போக்கே உள்ளது. நாட்டார் வழக்காறுகளின் தன்மையை - பகுத்தறிவுவாதிகளும், பொதுவுடைமைவாதிகளும் பார்த்த மாதிரியேதான் - இலக்கியவாதிகளும் பார்த்தார்கள் என்பது தான் உண்மை.

இன்றுமே நாட்டார் வழக்காறுகளில் உள்ள பாலியல் சார்ந்த விஷயங்கள், உடல் சார்ந்த நகைச்சுவைகள் பற்றிய ஆய்வுகள் இல்லை. ஒடுக்கப்படும் மக்களின் குரல் எப்படி அதிகாரத்திற் கெதிராக பாலியல் தன்மைகொண்டு இயங்குகிறது என்பதை, கிராமங்களின் திருவிழாக்களில் காணமுடியும். இதனைத் தொலைக் காட்சிகளிலோ, அரங்கங்களிலோ, பல்கலைக்கழக, கல்லூரி வளாகங்களிலோ நிகழ்த்த இயலாத தன்மை கொண்டிருக்கிறது.

இதன் ஜீவனும் அதுதான், பகுத்தறிவுக் கொள்கைகளிலும், நாட்டார் வழக்காறுகளிலும் ஆழ்ந்த விஞ்ஞானப் பார்வை கொண்ட முனைவர் தொ. பரமசிவன், பார்ப்பனியத்தின் அரசியலையும் நாட்டார்மரபினைப் பற்றியும் 'தலித் முரசு'க்கு அளித்த பேட்டி இது. இவர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணிபுரி கிறார். 'அறியப்படாத தமிழகம்' மற்றும் 'அழகர்கோயில்' உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

**உங்களைப் 'பெரியாரிஸ்ட்' என்று அழைக்கலாமா?**

95 சதவிகிதம் நான் 'பெரியாரிஸ்ட்'தான். அவரது கலை, பண்பாட்டுப் புரிதல் பற்றி எனக்குக் கருத்து வேறுபாடு உண்டு. எனினும், அவரது காலம் வேறு என்பதையும் நாம் கணக்கில் கொள்ளவேண்டும்.

**மீதி ஐந்து சதவிகிதம் கருத்துவேறுபாட்டைப் பற்றி விரிவாகச் சொல்லுங்கள்.**

அவர் வேலை துவங்கியது 1925இல். அப்பொழுதிருந்த சூழ்நிலையே முற்றிலும் வேறு. அவருடைய மிகப்பெரிய பலம் அவருக்கு பள்ளிப்படிப்பு இல்லாதது. அனுபவம் சார்ந்த சுயசிந்தனை மேலேயே அவர் நம்பிக்கை வைத்திருந்தார். பெரியார் ஒரு கோடீஸ்வரர். ஆனால், அப்பொழுதிருந்த சீனிவாச அய்யங்கார் அவரை வீட்டுக்கு வெளியே வைத்துதான் சாப்பாடு போட்டார்.

காங்கிரஸ் மாநாட்டில் பார்ப்பனர்களுக்குத் தனிப்பந்தி நடந்து கொண்டிருந்த காலம் அது.

சமூகத்தின் மேல்தட்டு மக்களுக்கும் அடித்தள மக்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாமலிருந்தது. அடித்தள மக்களின் பண்பாடு பற்றிய தகவல் பரிமாற்றமும் ஏதுமில்லை. ஐம்பதிற்குப் பிறகுதான் பெரியாரின் படமே கூட கிராமத்து மக்களின் வீடு களுக்குள் நுழைகிறது. பண்பாட்டை மிகவும் Crude ஆகப் புரிந்து கொண்டார் பெரியார். அவரது அணுகுமுறை வேறு.

பார்ப்பனியம் கோலோச்சி நின்றபோது, 'பார்ப்பான்' என்ற சொல்லையே இழிசொல்லாக மாற்றிக் காட்டியதுதான் பெரியாரின் சாதனை. அவருடைய வெற்றி, அதிர்ச்சி மதிப்பீடுகளைக் கொண்டிருந்தது.

'தாலி பொய்' 'தெய்வம் பொய்' என்று தெருவில் நின்று சொல்லும் தைரியம் வேறுயாருக்கும் இல்லை. தாலி கலாச்சாரத்தை முற்றிலும் நிராகரித்தார் பெரியார். முதல் தலைமுறை எழுத்தறிவு பெற்றோர் வீடுகளில் கூட, கைலி உடுத்துவது மதம் சார்ந்த விஷயமாக இருந்தது. அதுகூட கலாச்சார அதிர்ச்சியைக் கொண்டிருந்தது எனலாம். உயர்ந்த ஒழுக்கமுடைய எதார்த்தமான மனிதர் பெரியார். அவர் ஒரு காலத்திலும் Cult Figure ஆக மாறாததும் அவருடைய சாதனைதான்.

பெரியாரை, கம்யூனிஸ்டுகள் எப்படிப் புரிந்து கொண்டனர்?

*1920* முதல் சிங்காரவேலர் செய்த பணிக்கு எதிர்விளைவுகள் இல்லை. பண்பாட்டுத்தளத்தில் சாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகப் போராடிய பெரியாரை கம்யூனிஸ்டுகள் ஆதரிக்கவில்லை. அவரை 'பாசிஸ்ட்' என்று முத்திரை குத்தினார்கள். பார்ப்பனீயத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பெரியாரை எதிர்த்தார்கள்.

'பிராமணதுவேஷம்' என்ற சொல்லையே கம்யூனிஸ்டுகள்தான் உருவாக்கினார்கள். ஒட்டுமொத்த 'தமிழ் துவேஷ'த்தை இவர்கள் புரிந்து கொள்ளாததுதான் இதற்கெல்லாம் காரணம்.

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளுக்கு நீங்கள் எப்பொழுது வருகிறீர்கள்?

*1973*இல் பெரியார் இறக்கிறார். *76*இல் நெருக்கடிநிலை வருகிறது. அதன்பின் சிறுதேக்கம் நிலவுகிறது. அதற்குப்பிறகு நான் களஆய்வு களில் ஈடுபடுகிறேன். மக்கள் வாழ்வியலிலிருந்து நிறைய கற்றுக் கொள்ள ஆரம்பித்தேன். விதவை மறுமணம் இன்றுகூட புரட்சிகர மாகத் திகழ்கிறது. ஆனால், உண்மையில் தமிழக மக்களின் பண் பாட்டில் *70* சதவிகிதம் மக்களுக்கு, விதவை மறுமணம், மணமுறிவு இயல்பாகவே உண்டு. *30* சதவிகித மக்களுக்கு மட்டும்தான் இதெல்லாம் கிடையாது. நிறைய பேருக்கு இது தெரியாது. உண்மையில் இதுதான் மூடநம்பிக்கை.



நாட்டார் மரபு, பார்ப்பனியம் - விரிவாக விளக்குங்கள்?

நாட்டார் மரபு என்பது, எப்பொழுதுமே வைதீகமரபிற்கு எதிரானது. பார்ப்பனியம் எப்பொழுதும் அதிகாரம் சார்ந்தது. அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளாதது நாட்டார் மரபு. எடுத்துக்காட்டாக, நகர்ப்புறமயமாதல் நடைபெறும்போது வேலையற்ற கிராமத்து மக்கள் நகரங்களைத் தேடிச் செல்கின்றார்கள் பார்ப்பனர்களோ நகரத்திற்குச் சென்றது அதிகார மையங்களைத் தேடித்தான். பழைய கோயில் சார்ந்த அதிகார மையங்கள், காலனிஆட்சிக்குப் பின், மாவட்ட ஆட்சியருக்கு மாறுகிறது.

எனவே, பார்ப்பனர்கள் கல்கத்தா ராமகிருஷ்ணாபுரம், டெல்லி – சவுத் ப்ளாக், சென்னை – மாம்பலம் போன்றவற்றை உருவாக்கு கிறார்கள். ஆன்மீக அதிகாரமில்லாமல் பார்ப்பனர்களால் உயிர்வாழ முடியாது. பார்ப்பனர்களுக்கு அதிகாரமே உணவு. குறிப்பாக, பிற சாதியினரை உட்காரு, எழுந்திரு என்று சொல்லும் அதிகாரம். மண் சார்ந்த காதல் நம்மைப்போல் பார்ப்பனருக்கு இல்லை.

நம் வீட்டின் ஆடு, மாடு இறந்தால் கூட அத்துயரம் நம்மை விட்டு நீங்க நாளாகும். 'இந்த சைக்கிள் அப்பாவுடையது' 'இந்த வாட்ச் தாத்தாவுடையது' என்று மூத்த தலைமுறையின் மீதான பற்று நம்முள் வேரோடியிருக்கிறது. திராவிட நாகரிகம் இவ்விதமான கால, வெளி உறவுடன் பிணைக்கப்பட்டது.

ஆனால், பார்ப்பனர்களோ தலைமுறையாகத் தொட்டுத் தடவி பூசை செய்த விக்ரகங்களையும் வெறும் அதிகாரத்திற்காக விட்டு விட்டுப் போவது, அவர்களுக்கு வெகு சாதாரணமாக வாய்த்திருக் கிறது. இன்று எல்லா அக்ரகாரங்களும் பூட்டிக்கிடப்பது இதனால் தான். ஆனால், எந்த அம்மன் கோயிலும் பாழடைவதில்லை. ஆண்டுக்கு ஒருமுறையாவது பங்குனி உத்திரத்தில் சாஸ்தா கோயில் உயிர்ப் பெற்றுவிடுகிறது.

நாட்டார் வழிபாட்டு மரபில் ஆன்மீக அதிகாரம் எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. தனித்த அதிகாரம் கொண்ட பூசாரி யாருமில்லை. நம்மோடு சாதாரணமாகப் பழகிக் கொண்டிருக்கும் ஒரு மனிதர், பூசை வேளையில் மட்டுமே நம்மைவிட்டுச் சற்று

விலகியிருக்கிறார். பூசை முடிந்ததும் மீண்டும் நம்மோடு இணைந்து கொள்கிறார். இங்கு அதிகாரமோ ஏற்றத் தாழ்வோ இல்லை.

**தமிழகத்தில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகளின் வரலாறு பற்றி...**

நாட்டார் மரபுகளின் ஆய்வுகள், அயோத்திதாசப் பண்டிதரிலிருந்து துவங்குகிறது எனலாம். இவர் வேதமில்லாத நாகரிகத்தைப்பற்றி ஆய்வு செய்யும்பொழுதும் தலித் மக்களின் வேர்களை ஆராயும் பொழுதும் நாட்டார் மரபுகளை உள்ளுணர்வுடன் கண்டுகொள் கிறார். அவரது தேடல் 1870 முதல் 1914 வரை, நாட்டார் மரபுகளில் சமண, பவுத்தக் கூறுகளை அடையாளம் காண்பதில் இருக்கிறது.

இதற்குப் பின்பு மயிலை சீனி வேங்கடசாமி, பேரா.நா. வானமா மலை, பேரா. லூர்து ஆகியோர் விரிவான ஆய்வுகளை மேற்கொள் கின்றனர். இவ்விதமான ஆய்வுகளின் விளைவுகள்தான் இன்றைக்கு 'இதுவும் மக்கள் பண்பாடுதான்' என்பது மாறி 'இதுவே மக்கள் பண்பாடு' என்ற இடத்துக்கு வந்தடைந்திருக்கிறோம். நாட்டார் மரபையும் பார்ப்பனர்கள் தங்களுடைய விஷயமாக ஆக்கிக் கொள்ளும் வேலையும் நடைபெற்று வருகிறது.

**தலித் மக்கள் இவ்விதமான வழிபாட்டு முறைகளிலும் ஒடுக்குமுறைக்கு உள்ளா கிறார்களே? வழிபாட்டு முறை என்றதுமே இந்து மதம் உள்ளே நுழைந்து விடுகிறதே?**

தலித் மக்கள் இந்துக்கள் அல்ல என்பது நமக்குத் தெரியும். இந்து என்பதற்கு ஒரு சாதாரண விளக்கம் – கிறித்துவரல்லாத, முஸ்லிம்கள் அல்லாதவர்களும்தான் என்றிருக்கிறது. மீதி 80 சதவிகிதம் மக்களுமே தொல்சமயத்தைச் சார்ந்தவர்கள்தான். 'ஸ்மார்த்த பிராமணர்கள்' மட்டுமே இந்துக்கள். இவர்களைத் தவிர வேறு யாருமே இந்துக்கள் இல்லை. சைவர்கள், வைணவர்கள் யாரும் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ள மாட்டார்கள். நம்முடைய மதம் இந்து மதமாயிருந்தால் நம்முடைய அம்மா, அப்பா விற்கு சாதாரணமாக நான்கு வேதங்களையும் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

80 சதவிகித மக்களுக்கு நான்கு வேதங்களின் பெயர் கூடத் தெரியாது. பிறகு எப்படி இவர்கள் இந்துக்களாக இருக்கமுடியும்? பவுராணிய மரபில் 18ஆம் நூற்றாண்டு வரை இந்தச் சொல்லே இல்லை. சங்கரமடம் மட்டும்தான் இதைப்பற்றிப் பேசுகிறது. விளக்கு என்பது, திராவிட நாகரிகக் குறியீடு. இது ஒரு நாட்டார் மரபைச் சார்ந்தது. ஆனால், இன்று இந்துத்துவவாதிகள் திருவிளக்குப் பூசை என்ற பெயரில் எல்லா கோயில்களையும் பிடித்துக் கொண்டார்கள்,



வைதீக மரபிற்கெதிரான நாட்டார் மரபை இன்று இந்துமதம் கையகப் படுத்திக் கொள்ள நினைக்கிறது.

சிறு தெய்வ வழிபாடு பற்றிய பண்பாட்டுரீதியான பார்வை – திராவிட இயக்கம், பகுத்தறிவு இயக்கம், பொதுவுடைமை இயக்கம் ஆகியவற்றிற்கு இல்லாததால் நாட்டார் மரபையும் அவர்கள் கவனிக்கத் தவறி விட்டனர். நம்பிக்கையையும் மூடநம்பிக்கையையும் வேறு விதமாகப் புரிந்து கொண்டார்கள். காட்டுச்சாமி மீதான நம்பிக்கை மூடநம்பிக்கை அல்ல. பார்ப்பனர்களுக்கு பசுதானம் கொடுப்பது தான் மூடத்தனம், மௌடீகம். நாட்டார் மரபில் தெய்வநம்பிக்கை என்பது, உற்பத்திமுறையோடு சம்பந்தப்பட்டது.

சாப்பாடு, சாராயம், மாமிசம் அனைத்தையும் கடவுளுக்குப் படைக்கிறார்கள். தெய்வங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள உறவானது, நாட்டார் மரபில் எதார்த்தமான உறவாக இருக்கிறது. நாட்டார் மரபில் இழிவு என்று ஒன்றில்லை. இறந்துபோன தந்தை, மகன் உருவில் வருகிறான். அப்பா, மகனாக வருகிறார். தந்தை பெயர்ந்து மகனாக வருவதால் பெயரன் (பேரன்) என ஆயிற்று. இறந்த உடல்கூட நாட்டார் மரபில் மரியாதைக்குரியதாக இருக்கிறது.

தீட்டு என்பது இங்கு இல்லை. பார்ப்பனிய மரபு இதற்கு நேர் எதிர். இறந்த உடல்களுக்கு சடங்குகள் செய்வதற்கென்றே சவுண்டிப் பார்ப்பனர்கள் என்று வைத்திருக்கிறார்கள். பார்ப்பனர்களைப் பொறுத்தவரை, இறந்த உடல் என்பது தீட்டுக்குரியதுதான். அதிகார வேட்கையினால் உற்பத்தியிலிருந்து தங்களை அறுத்துக் கொண்ட வர்கள் பார்ப்பனர்கள். உற்பத்தியிலிருந்து விடுபடும்போது இயல் பாகவே ஏற்றத் தாழ்வுகள் வந்துவிடுகிறது.

தெய்வ நம்பிக்கை சாதியமைப்போடு, உற்பத்திஉறவோடு பார்க்கப்பட்டது. நாகசுரவித்வான் தோளில் துண்டு போடக்கூடாது; சாதி, மனிதனின் தோலோடு தைக்கப்பட்டிருக்கிறது. கர்ப்பப்பை யிலிருக்கும்போதே சாதி உடலில் எழுதப்பட்டுவிடுகிறது. இன்னும் சாதி பற்றிய பார்வை, பொதுவுடைமைவாதிகள் கருத்துக்களோடு உடன்படாமலே நிற்கிறது. இன்னும் கீழ்வெண்மணி தியாகிகளைத் தொழிலாளிகள் என்கிறார்கள். தலித்துகள் என்று பதிவுசெய்ய மறுக்கிறார்கள்.

தாமிரபரணியில் 17 பேர் கொல்லப்பட்டதற்கு மிகவும் பலவீன மான எதிர்ப்புதான் இருந்தது. இதே பிற சாதியினர் என்றால் சும்மா விடுவார்களா? இந்த குரூரமான யதார்த்தத்தை மார்க்சியவாதிகள் புரிந்துகொள்ள வேண்டும். இன்றும் நாட்டார் திருவிழாக்களில்


பார்ப்பனரல்லாத பிற்படுத்தப்பட்ட மக்களால் தலித்துகள் ஒடுக்கப் படுகின்றனர். திராவிட வளர்ச்சி, மேல்சாதி அதிகாரத்தைப் பறித்து பிற்படுத்தப்பட்ட அதிகாரத்தைப் பறித்து பிற்படுத்தப்பட்ட மக்களிடம் ஒப்படைத்திருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்கள் மீண்டும் தலித்துகள் மீது, ஒடுக்குமுறையைப் பயன்படுத்துகின்றனர்.

எனவே, திராவிட, பொதுவுடைமை இயக்கங்களில் தலித்துகளுக்கு நம்பிக்கை இல்லாமல் போய்விட்டது. பிற்படுத்தப்பட்ட மக்களிடம் நேரடியாக மோதுவதுதான் தலித்துகளுக்கு இருக்கும் ஒரே வழி என்றாகிவிட்டது. இந்நிலையில், நாட்டார் மரபினையும் தலித் மக்கள் எழுச்சியினையும், பார்ப்பனியத்தையும் விஞ்ஞானப்பார்வை கொண்டே பார்க்க வேண்டியிருக்கிறது.

பகுத்தறிவு இயக்கத்தின் தேவையையும் பார்ப்பனர்கள் பகுத்தறிவு இயக்கத்தை, நாட்டார் மரபினை முன்வைத்து அதனை விமர்சிப்பதையும், அதனுடைய அரசியலையும் நாம் புரிந்து கொண்டால், சிறுதெய்வ வழிபாட்டுமுறையும் பகுத்தறிவும் – எல்லோரும் மேலோட்டமாய் நினைப்பதைப்போல எதிரெதிரானது அல்ல என்பது புரியும்.

♦

நேர்காணல் செய்தவர் : ஆர்.ஆர். சீனிவாசன்
தலித்முரசு, டிசம்பர், 2001



பெரியார் என்றுமே நாட்டார் கலாச்சாரத்தின் மீது போர் தொடுக்கவேயில்லை. அது அவரின் நோக்கமும் இல்லை. அவர் வைதீகத்தின் மீதும் நகர கலாச்சாரத்தின் மீதும்தான் போர் தொடுத்தார். பெரியார் பிள்ளையார் சிலையைத்தானே உடைத்தார். சுடலைமாடன் சிலையை உடைக்கவில்லையே. சுடலைமாடன், காத்தவராயனை அவர் ஒன்றும் செய்யவில்லையே. பெரியார் தொன்மங்களைக் காலி செய்துவிட்டார் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் தொன்மங்கள் இன்றைக்கும் உயிரோடுதான் இருக்கின்றன. பெரியாரைப் பற்றியே நிறைய தொன்மங்கள் வந்துவிட்டன.

- தொ. பரமசிவன்

விலை
ரூ.75

ISBN 978-93-81343-44-9
9 789381 343449